# சமூக அறிவியல் I

## பகுதி - 1

## வகுப்பு X

**Social Science I**
**Part 1**
**STD X**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை


தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

**2025**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**சமூக அறிவியல் I**

**10**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in
e-mail : scertkerala@gmail.com, Phone : 0471 - 2341883,
Typesetting and Layout : SCERT
First Edition : 2025
*Printed at* : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பார்ந்த மாணவர்களே!

சமூகத்தில் பல்வேறு நிலைகளில் நடத்திய விவாதங்களின் வழியாக மெருகேறிய கண்ணோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பத்தாம் வகுப்புக்கு புதிய சமூக அறிவியல் I பாடப்புத்தகம் இரண்டு பகுதிகளாக உங்களின் கரங்களில் தரப்படுகிறது. சமூக அறிவியலில் முக்கிய கற்றல் பகுதிகளான வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல் என்பவற்றுடன் தொடர்புடைய பாடப் பகுதிகள் இப்புத்தகத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய உலகை சரியாகப் புரிந்து கொள்ளவும் உற்று நோக்கவும் அதன் வழியாக நாளைய உலகை உருவாக்கவும் நேற்றைய உலகைப் பற்றிய அறிவு முக்கியமானதல்லவா? நவீன உலகின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த மறுமலர்ச்சி காலத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை இப்பாடப் புத்தகத்தில் முதல் அலகில் விவாதிக்கிறோம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் முத்திரை வாக்கியத்தை உலகிற்கு அளித்த பிரெஞ்சு புரட்சியைப் பற்றியும் பல்வேறு காலகட்டங்களில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், அதன் விளைவுகள் என்பவற்றைப் பற்றி தொடர்ந்துள்ள அலகுகளில் விவாதிக்கப்படுகிறது. அடுத்த பாடத்தில் நவீன உலகுக்குச் சாட்சி அளித்த மிகப்பெரிய பொதுமக்கள் போராட்டங்களில் ஒன்றான இந்திய சுதந்திர போராட்டத்தையும் அதில் நமது தேசத்தந்தையான மகாத்மா காந்தியடிகளின் பங்கினைப் பற்றி தெளிவாக விளக்கப்படுகிறது. இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு நாம் எதிர்கொண்ட சவால்களையும் அவற்றை வெற்றிகொண்டு நாம் புரிந்த சாதனைகளைப் பற்றியும் இப்பகுதியில் விவாதிக்கப்படுகிறது.

சமூக அறிவியலின் கற்றல் பகுதியில் புதிய துறைகளில் ஒன்றான சமூகவியல் சமூக பிரச்சினைகளைச் சாதாரண விழிப்புணர்வுக்கும் மேலாக சமூக அறிவியல் பார்வையுடன் அணுகும் திறன் உங்களில் வளர்க்க வேண்டும் என்ற இலக்குடன் தரப்பட்டுள்ளது. இந்திய சமூக அமைப்பை விளக்கமாக விவாதம் செய்ய சமூக இயல் இன்னொரு பாடப் பகுதியாக உள்ளது.

மக்களாட்சி அமைப்பில் பொதுமக்கள் கருத்து உருவாக்கம் மிக முக்கியமானது அல்லவா? அவற்றின் பல்வேறு படிநிலைகள் அறிமுகப்படுத்துவது "மக்களாட்சியில் பொதுமக்கள் கருத்து" என்னும் பாடப்பகுதியாகும். சுதந்திரத்திற்கு பின்னர் இந்திய அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மக்கள் போராட்டங்களையும் விவாதிக்கும் பாடப்பகுதியும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது.

சமூக விலக்கு என்ற நிலையில் பல்வேறு செயல்பாடுகளில் சிறப்பாக ஈடுபடவும் மக்களாட்சி விழிப்புணர்வுடன் மனித நேய மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகத்தின் சக்திவாய்ந்த தூண்களாக நீங்கள் உருவெடுக்க இப்பாடப்புத்தகம் உங்களுக்கு ஒரு கலங்கரை விளக்காகும் என்று எதிர் பார்க்கிறேன்.

அறிஞர் சமூகத்தின் ஒரு பகுதியாக நீங்கள் ஒவ்வொருவரும் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ,**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்

# TEXTBOOK WRITING COMMITTEE

**Adviser**

**Dr. K. N. Ganesh**
Chairman, Kerala Council for Historical Research

**Chairperson**

**Dr. Sivadasan P.**
Senior Professor, Department of History
University of Calicut

## Experts

**Dr. K. K. Radha**
Principal (Rtd.)
Govt. College for Women
Thiruvananthapuram

**Dr. P. P. Abdul Razak**
Professor & Head (Rtd.)
Department of History
P.S.M.O. College, Tirurangadi

**Dr. P. Mohandas**
Associate Professor (Rtd.)
Department of History
K.M.M. Govt.Womens College, Kaannur

**Dr. Pradeep Kumar K.**
Associate Professor & Head (Rtd.)
Department of Political Science
Govt. College, Attingal, Thiruvananthapuram

## Members

**Yusuf Kumar S. M.,** Principal, G.H.S.S Chithara, Kollam.
**Haripradeep S.,** HS.T. (Rtd), S.V.H.S., Pulladu, Pathanamthitta
**Dr. Anjana V.R. Chandran,** Research Officer, SCERT, Kerala
**Dr. Ajith R. Pillai,** Principal, D.B.H.S.S., Parumala, Pathanamthitta
**Aju S.,** H.S.S.T., History, G.M.G.H.S.S., Pattam, Thiruvananthapuram
**Jayakrishnan O.K.,** H.S.S.T., K.P.C.H.S.S. Pattanur, Kannur
**Pradeepan T.,** H.S.S.T. History, G.H.S.S.S, Palayad, Kannur
**Margarat Lini V.P.,** H.S.T. Social Science, Govt V & H.S.S. Vellanad, Thiruvananthapuram
**Vishwambharan N.,** H.S.S.T. (Rtd.), Boys Higher Secondary School, Karunagappally, Kollam
**Sreejith M. Muthadath,** H.S.T. Social Science, C.N.N. G.H.S. Cherpu, Thrissur
**Anas N.S.,** Research Student, University of Kerala

## Tamil Translation

### Experts

**Smt. Syedali Fathima M**
Assistant Professor, University College, Thiruvananthapuram.

**Dr. Shini S**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

### Members

**Vijaya A**, Headmistress, GHS Pambanar.
**Geetha A**, HST Social Science, GHS Pambanar.
**Marry Stella Rosaline K**, HST, GGHSS, Karamana.
**Nirmala Princy Bell J**, Rtd. HST, GHSS Chalai, Thiruvananthapuram.
**Jasmine J**, HST Social Science, Govt. Tamil VHSS, Chalai, Thiruvananthapuram.

## Academic Coordinator

**Jagadeesh K.T.**
Research Officer, SCERT, Kerala

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | மனித நேயம் | 7-26 |
| 2 | சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் | 27-46 |
| 3 | சமூகப் பகுப்பாய்வு: சமூகவியல் கற்பனையின் வாயிலாக | 47-64 |
| 4 | பொருளாதாரமும் உலகமும் | 65-86 |
| 5 | மக்களாட்சியில் பொதுமக்களின் கருத்து | 87-102 |


இப்பாடப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்குவதற்கு சில அடையாளங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.



கூடுதல் வாசிப்பிற்கு – மதிப்பீடு செய்வதற்கு உட்பட்டதல்ல



கற்றல் செயல்பாடு



தொடர் செயல்பாடுகள்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.



# 1

# மனித நேயம்

*“அறிவை நிராகரிப்பது நன்மையை நிராகரிப்பதாகும், நன்மையின் சுடரால் ஒளிரும் புத்திக்கு அந்தச் சுடரை நேசிக்காமல் இருக்க முடியாது. அன்பு மட்டுமே அறிவின் சந்ததியாகும். பகுத்தறிவுச் சிந்தனை சரியான விருப்பத்தின் வழிகாட்டியாகும். நம்மை மோட்சத்திற்குக் கொண்டு செல்வது பகுத்தறிவேதான்.”*

பதிமூன்றாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த அறிவியல் சிந்தனையாளரான ரோஜர் பேக்கனின் கூற்றுகளே இவை. பகுத்தறிவுச் சிந்தனை, அறிவு, அன்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குறித்து இங்கு விளக்கப்பட்டுள்ளது. அவர் வாழ்ந்திருந்த காலகட்டத்தில் ஐரோப்பாவில் உள்ள அதிகாரிகள் பகுத்தறிவுச் சிந்தனையை நிராகரித்திருந்தனர். ரோஜர் பேக்கனைப் போன்ற சிந்தனையாளர்கள் நடைமுறையிலிருந்த நிலமானிய அதிகார முறையையும் அதன் கருத்துக்களையும் கேள்விக்குள்ளாக்கினர். அதன் விளைவாக அவர்களில் பலரும் அதிகாரிகளால் கொடூரமான சித்திரவதைக்கும் சிறை வாழ்க்கைக்கும் உள்ளாக்கப்பட்டனர். சிலர் தங்கள் உயிரை இழந்தனர். ஆனால் பிற்காலத்தில் நிலைமைகள் மாறத் தொடங்கின.




ரோஜர் பேக்கனும் அவர் வரைந்த வரைபடங்களும்

பதினான்காம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமூக, கலாச்சார, பொருளாதார , அரசியல் பிரிவுகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. பண்டைய ஐரோப்பாவில் கிரேக்க – ரோமன் கலாச்சாரத்தின் செல்வாக்குடன், இடைக்காலத்தில் நிலவியிருந்த கருத்துகளிலிருந்து விலகிச் செல்லும் போக்கும் இக்காலத்தில் ஏற்பட்டது. இந்த மாற்றங்களின் தனித்தன்மைகள் எவை என்பதைக் காண்போம்.

- மனிதனை மையமாகக் கொண்ட கண்ணோட்டம் (மனிதநேயம்)
- நகர வாழ்க்கையின் வளர்ச்சி
- வணிகத்தின் முன்னேற்றம்
- தேச நாடுகளுடைய வளர்ச்சி
- தனிமனித சுதந்திரம்
- பகுத்தறிவு
- மதசார்பற்ற மதிப்புகளின் பரவல்
- பணம் சார்ந்த பொருளாதாரம்
- வட்டார மொழிகளுக்குக் கிடைத்த முக்கியத்துவம்
- கலை, அறிவியல் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.

### கிரேக்க–ரோம கலாச்சாரங்கள்

பண்டைய ஐரோப்பாவில் நிலைபெற்றிருந்த இரண்டு முக்கிய கலாச்சாரங்கள் கிரேக்க கலாச்சாரமும் ரோமன் கலாச்சாரமும் ஆகும். இவை பாரம்பரிய கலாச்சாரங்கள் என்றழைக்கப்படுகின்றன. BCE 12 – ஆம் நூற்றாண்டு முதல் BCE 4 –ஆம் நூற்றாண்டு வரை கிரேக்கக் கலாச்சாரத்தின் காலகட்டமாகும். BCE 7–ஆம் நூற்றாண்டு முதல் BCE 5 – ஆம் நூற்றாண்டு வரை ரோமானிய கலாச்சாரத்தின் காலகட்டமாகும்.

பண்டைய ரோம கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருந்த இத்தாலியில்தான் இந்த மாற்றங்கள் அதிகமாகக் காணப்பட்டன. இத்தாலியில் தோன்றிய இந்த மாற்றங்களுக்கு வரலாற்றாசிரியர்கள் 'மறுமலர்ச்சி' (Renaissance) என்ற பெயரைச் சூட்டினர். மறுமலர்ச்சியானது இடைக்கால நிலமானிய அமைப்பிலிருந்து நவீன காலகட்டத்திற்கான மாற்றத்தின் காலமாக வரலாற்றில் இடம் பெற்றது.

மறுமலர்ச்சிக் காலம் என்பது இடைக்கால காலகட்டத்திலிருந்து நவீன காலக்கட்டத்திற்கு மாறும் காலமாகும். (Transition Period) இந்தக் கருத்தை மதிப்பிடவும்.

### மறுமலர்ச்சி (Renaissance)

'ரினெய்சன்ஸ்' என்ற சொல்லுக்குத் தமிழில் மறுமலர்ச்சி, மறுபிறப்பு என்றெல்லாம் பொருள்கள் உண்டு.
14–ஆம் நூற்றாண்டில் பண்டைய கிரேக்க– ரோமன் கலாச்சாரங்களுக்கு ஏற்பட்ட மறுபிறப்பு என்பதே இதன் பொருள்.

## இத்தாலியில் மறுமலர்ச்சி எதனால் ஏற்பட்டது?

கொடுக்கப்பட்டுள்ள நிலப்படம் 1.1 கவனித்து அதிலிருந்து இடைக்கால இத்தாலியில் இருந்த நகரங்களைக் கண்டுபிடித்து எழுதுக.

- 
- 
- 
- 

இத்தாலியின் நகரங்கள் ஐரோப்பாவின் மற்ற நகரங்களிலிருந்து வேறுபட்டிருந்தன. காரணம்:

- அவை அதிக சுதந்திரமும் ஆற்றல் மிக்கதும் வளமுடையதாகவும் இருந்தன.
- இங்குள்ள வணிகர்கள், வங்கி, காப்பீடு போன்ற துறைகளைக் குறித்து அறிவு பெற்றிருந்தனர். 'புத்தகப் பராமரிப்பு' (Book keeping) போன்ற வணிக நுட்பங்களில் திறமையானவர்களும் அவர்களில் இருந்தனர். அவர்களில் பலரும் வணிகத்தின் மூலமாகப் பெரும் செல்வந்தர்களாகவும் மாறினர்.



நிலப்படம் 1.1

### புத்தகப் பராமரிப்பு

புத்தகப் பராமரிப்பு என்பது ஒரு நிறுவனத்தின் தினசரி வரவு செலவுகளை முறையாகப் பதிவு செய்வதாகும். கணக்கியலின் முதல் படியே புத்தகப் பராமரிப்பு ஆகும்.

11–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட வணிகமயமாக்கல் இடைக்கால நிலபிரபுத்துவ அமைப்பின் வீழ்ச்சிக்கும் மத அதிகார ஆதிக்கத்தின் வீழ்ச்சிக்கும் வழி வகுத்தது. இது செல்வந்தர்களான ஒரு பிரிவினரின் எழுச்சிக்கும் ஆதிக்கத்திற்கும் காரணமானது. வணிக முன்னேற்றத்தின் விளைவாக பல செல்வந்த குடும்பங்கள் இத்தாலியில் உருவாயின. அவர்கள் அரசியல் அதிகாரத்தில் ஒரு பங்கைக் கேட்டனர். இவ்வாறாக உயர்ந்து வந்த குடும்பங்களும் அவை வளர்ந்து வந்த நகரங்களும் எவை என்பதைப் பார்ப்போம்.

| இத்தாலிய குடும்பங்கள் | வளர்ந்து வந்த நகரங்கள் |
|---|---|
| மெடிசி | புளோரன்ஸ் |
| ஸ்ஃபோர்ஸா | மிலான் |
| பர்னேசி | பார்மா |
| ஓர்ஸீனி | நேப்பிள்ஸ் |
| விஸ்கொந்தி | மிலான் |

### சிலுவைப் போர்கள்

புனித நாடாகக் கருதப்படுகின்ற எருசலேமுக்காக இஸ்லாம் மத விசுவாசிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர்களே சிலுவைப் போர்கள். இவை ஆசியா மற்றும் ஐரோப்பாவின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தின. இதன் கால கட்டம் CE 11 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையாகும்.

இடைக்காலத்தில் நடந்த சிலுவைப் போர்கள் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான கலாச்சாரப் பரிமாற்றங்களுக்கு வழிவகுத்தன. கிழக்கத்திய நாடுகளின் கலாச்சாரங்கள், நகரங்கள் அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை போன்றவற்றுடன் இத்தாலிய நகரங்கள் பழக்கப்பட்டன. இது இத்தாலிய நகரங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது. இஸ்லாமிய பேரரசு பைசான்டைன் பேரரசுடன் (கிழக்கத்திய ரோம்) ஏற்படுத்திய வர்த்தகத் தொடர்புகள் மூலம் பெருமளவில் செல்வம் இத்தாலிய நகரங்களுக்கு ஒழுகியது. காலப்போக்கில் மத்திய தரைக்கடல் பகுதியை மையமாகக் கொண்டு நிலை கொண்டிருந்த கிழக்குக்கும் மேற்குக்கும் இடையேயான வர்த்தகம் இத்தாலிய நகர வணிகர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

இத்தாலிய நகரங்கள் பிற ஐரோப்பிய நகரங்களை விட செழிப்பாக இருந்தன. இதற்கு வழிவகுத்த சூழ்நிலைகளை விளக்கவும்.

14–ஆம் நூற்றாண்டின் மத்தியில் உருவான பியூபோனிக் ப்ளேக் என்ற கொள்ளை நோய் இத்தாலிய நகரங்களுக்கு மிகப்பெரும் சேதங்களை ஏற்படுத்தின. 'கறுப்பு மரணம்' என்று அழைக்கப்பட்ட இந்தப் பேரழிவில் பெருமளவில் மக்கள் இறந்ததால் தொழிலாளர்கள் கிடைப்பதில் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டது. இது வேளாண்மையை நம்பி நிலைகொண்டிருந்த இடைக்கால நிலப்பிரபுத்துவ முறையின் வீழ்ச்சிக்கும், வாணிபத்தை மையமாகக் கொண்ட ஒரு நடுத்தர பிரிவினரின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.

அப்போது இருந்த மருந்துகள் பிளேக் நோயை எதிர்ப்பதில் தோல்வியுற்ற போது மக்கள் பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமினுடைய மருத்துவத்தைக் குறித்து அதிகமாக ஆராயத் தொடங்கினர். பிளேக் நோயின் கொடுமைகள் மனிதர்களை வாழ்க்கையின் தற்காலிகத்தன்மை மற்றும் நிச்சயமற்றத் தன்மையைப் பற்றிச் சிந்திக்கவும் இன்பங்களைக் குறித்து அறிந்து கொள்ளவும் தங்களைத் தாங்களே தெரிந்து கொள்ளவும் (தனித்துவம்) தூண்டின. இது மனித நேயத்திற்கு (Humanism) வழி வகுத்தது.

14–ஆம் நூற்றாண்டில் பரவிய பிளேக் நோய் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பற்றி விவாதிக்கவும்.

நகர்புறச் செல்வம், அரசியல் சுதந்திரம், சமூக நல்லிணக்கம் போன்றவை மக்களிடையே குடிமை உணர்வையும் சுய மரியாதையையும் வளர்த்தன. பண்டைய ரோமப் பேரரசில் நிலவிய சட்ட ஒழுங்கு, ஆட்சி முறை போன்றவற்றைப் பற்றிய கருத்துகள் இத்தாலியில் பரவின. பண்டைய ரோமானியச் சட்டத்திலும் லத்தீன் மொழியிலும் புலமை பெற்றிருந்த ஒரு பிரிவினர் வணிகச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். அதன் பலனாகப் பண்டைய மொழி, இலக்கியம், நிறுவனங்கள், பாரம்பரிய பழமை ஆகியவற்றில் இவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. ஒவ்வொரு நகரமும் கலை மற்றும் இலக்கியத்தின் மையங்களாக இருக்க விரும்பின. பண்டைய ரோம நகரத்தில் இருந்த ஓவியங்கள், கையெழுத்துப் பிரதிகள், கட்டட எச்சங்கள் போன்றவற்றை மன்னர்கள் மற்றும் மதக்குருக்களின் தலைமையில் கண்டுபிடிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. கட்டடங்கள் கட்டுவதும் கலையையும் இலக்கியத்தையும் ஊக்குவிப்பதும் போர்களை விட தங்களை மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கச் செய்யும் என்று மன்னர்கள் கருதினர்.

செல்வந்தர்கள் தங்களது பங்குத் தேவாலயங்களைப் (பாரிஷ்) புதுப்பித்ததுடன் சந்நியாசி மடங்கள், சந்நியாசினி மடங்கள், பேராலயங்கள் ஆகியவைகளின் கட்டுமானத்தையும் ஊக்கப்படுத்தினர். புளோரன்ஸ், மிலான், ரோம், வெனீஸ் ஆகிய இத்தாலிய நகரங்களில் கலைஞர்களை ஊக்குவிப்பது குடிமக்களின் கடமையாகக் கருதப்பட்டன. 1453 – இல் துருக்கியர் கிழக்கத்திய ரோமப் பேரரசின் தலைநகரமாயிருந்த கான்ஸ்டான்டி

### கறுப்பு மரணம் (Black Death)

1347க்கும் 1351 க்கும் இடையில் ஐரோப்பாவை நாசப்படுத்திய ப்ளேக் என்ற கொள்ளை நோயே 'கறுப்பு மரணம்' என்று அறியப்படுகிறது. நோய் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் கறுப்பு அடையாளங்கள் உருவாகின. அதனால்தான் இந்த அழிவு கறுப்பு மரணம் என்று அறியப்பட்டது. வியாபாரக் கப்பல்களில் வந்த எலிகளில் காணப்பட்ட பாக்டீரியாக்கள் மூலம் ப்ளேக் நோய் ஐரோப்பாவில் பரவியது.

### ஐரோப்பிய மறுமலர்ச்சி ஒரு காலனித்துவ கண்ணோட்டம்

ஐரோப்பாவை மையமாகக் கொண்டுதான் மறுமலர்ச்சி உருவானது என்ற கருத்திற்கு எதிராக இன்று பல கருத்துகள் எழுகின்றன. ஜார்ஜ் ஜேம்ஸின் 'ஸ்டோலன் லெகஸி', மார்ட்டின் பர்னாலின், 'பிளாக் அதீனா:தி ஆ∴ப்ரோ ஏசியாடிக் ரூட்ஸ் ஆ∴ப் கிளாசிக் சிவிலைசேஷன்' ஆகிய நூல்கள் இந்தக் கருத்தைப் பகிர்ந்துள்ளன. ஐரோப்பா மட்டுமே சரியானது மற்றவையெல்லாம் தவறானது அல்லது ஐரோப்பியர்கள் மட்டுமே நாகரீகமானவர்கள் மற்ற அனைவரும் நாகரீகமற்றவர்கள் என்று நிரூபிக்கவே காலனித்துவ வரலாற்றாசிரியர்கள் முயற்சிக்கின்றனர் என்று இவர்கள் வாதிக்கின்றனர்.


ΙΠΠΟΚΡΑΤΟΥΣ ΟΡΚΟΣ.
HIPPOCRATIS IVSIVRANDVM.

கிரேக்க கையெழுத்துப் பிரதி

நோபிளைப் கைப்பற்றினர். கான்ஸ்டான்டின்நோபிள் பண்டைய கிரேக்க – ரோமன் இலக்கிய படைப்புகளின் கையெழுத்துப் பிரதிகளை வைத்திருந்த பல அறிஞர்களின் மையமாக இருந்தது.துருக்கியர்களின் படையெடுப்பிற்குப் பிறகு அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்த கையெழுத்துப் பிரதிகளுடன் இத்தாலிய நகரங்களுக்குச் சென்றனர். இடைக்காலத்தில் பல்கலைக் கழகங்களில் மட்டுமே இருந்த ஆராய்ச்சிகள் மற்றும் கற்றல்கள் நூலகங்களுக்கும் பரவத் தொடங்கின. செல்வமும் அரசியல் சுதந்திரமும் கலையின் முன்னேற்றத்திற்கும் கலாச்சாரத் துறை ஆய்வுகளுக்கும் வழி வகுத்தது. இதன் மூலம் கலாச்சாரத் துறையிலும் அறிவியல் துறையிலும் புதிய கருத்துகள் தோன்ற ஆரம்பித்தன.




நிலப்படம் 1.2

நிலப்படம் 1.2 ஐ கவனித்து கான்ஸ்டான்டிநோபிளின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவும். அதன் புவியியல் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும்.

துருக்கியர்களின் கான்ஸ்டான்டிநோபிள் படையெடுப்பு இத்தாலியின் அறிவு சார்ந்த துறைகளில் எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பதை மதிப்பிடவும்.

## மனிதன் மையமாதல்

இடைக்கால உலகத்தை முக்கியமாக ஈர்த்தது ஸ்கொலாஸ்டிசிசம் (Scholasticism) என்று அழைக்கப்படும் தத்துவ அறிவியலாக இருந்தது. கிறிஸ்தவ மதச்சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தத்துவ அறிவியல், ஆராய்ச்சியையும் அறிவியலையும் ஊக்கப்படுத்தினாலும் இறைவனுக்கும் பரலோக வாழ்க்கைக்கும் தான் முக்கியத்துவம் கொடுத்தது. இதிலிருந்து மாறி மனிதனுக்கும், இவ்வுலக வாழ்க்கைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைக்கும் முக்கியத்துவம் கொடுத்தே மனிதநேயம் என்ற கருத்து உருவானது. மனிதநேயவாதிகள் மனிதனின் தனித்துவம், உணர்வுகள், திறன்கள், எழுத்து, பேச்சு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இறைவனை மையமாகக் கொண்ட கண்ணோட்டத்திலிருந்து மனிதனை மையமாகக் கொண்ட கண்ணோட்டத்திற்கு மாறியதே இதன் அடிப்படையாகும். மாற்றுக் கருத்துக்களும் விமர்சனங்களும் மனிதநேயத்தில் இடம் பிடித்தன. அவர்கள் மதத்தின் ஆதிக்கத்திற்கு எதிராக வினா எழுப்பினர்.

### அரிஸ்டாட்டில்



பண்டைய கிரேக்கத்தில் வாழ்ந்திருந்த சிந்தனையாளரே அரிஸ்டாட்டில். அவருடைய கருத்துக்கள் மறுமலர்ச்சிக்காலத்தில் புதிய விவாதங்களுக்கும் கேள்விகளுக்குமான சூழலை உருவாக்கியது. ஐரோப்பாவில் 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் அரிஸ்டாட்டிலின் படைப்புகள் லத்தீன் மொழியிலும், வட்டார மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. உண்மைத் தேடலுக்கு அவர் கொடுத்த முக்கியத்துவமும், ஆழ்ந்த கற்றலும் இதற்குக் காரணமானது.

இக்காலத்தில் மக்கள் பண்டைய கிரேக்க – ரோம நூல்களை அதிக ஆர்வத்துடன் படித்தனர். பண்டைய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாட்டிலின் கருத்துகளை அரேபியர்கள் ஐரோப்பாவில் பரப்பினர். மனிதநேயவாதிகள் வட்டார மொழிகளில் நூல்களை எழுதியும் கிரேக்க – ரோம பாணியில் சித்திரங்கள் வரைந்தும் சிற்பங்கள் உருவாக்கவும் செய்தனர். அவர்களுடைய முக்கிய ஊக்கம் பண்டைய கிரேக்க – ரோம கலாச்சாரங்களாயிருந்தாலும் அவர்களது கண்ணோட்டம் மாறுபட்டதாக இருந்தது. கிரேக்க–ரோமானிய கலை இறைவனையும் செல்வந்தர்களையும் வலிமை வாய்ந்தவர்களையும் படங்களாக வரைந்திருந்தனர். அவர்கள் உருவங்களைச் முழு அழகுடன் சித்தரிக்க முயன்றனர். ஆனால் மறுமலர்ச்சிக்கால கலை மனிதரை இயல்புத்தன்மையுடன் வரைந்திருந்தன. மறுமலர்ச்சிக்கால கலைகளும் இலக்கிய படைப்புகளும் இவற்றை நிரூபிக்கின்றன. மனிதநேயம் பின்னர் ஓவியம், சிற்பம், இலக்கியம், அரசியல், வரலாறு, அறிவியல், மதம் ஆகிய பல்வேறு துறைகளின் மாற்றத்திற்கான ஊக்கமாகவும் உறைவிடமாகவும் மாறியது. இந்த மாற்றங்களையே மறுமலர்ச்சி பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

மனிதநேயத்தின் வருகை உலக வரலாற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்தியது?

## மறுமலர்ச்சிக்கலை



இடைக்கால ஓவியம்



மறுமலர்ச்சிக்கால ஓவியம்

மேலே கொடுக்கப்பட்டுள்ளவை இடைக்கால மற்றும் மறுமலர்ச்சிக்கால ஓவியங்கள் ஆகும். இரண்டு படங்களுடைய மையக்கருத்தும் ஒன்றுதான். ஆனால் இவற்றின் சித்திரிப்பு முறைகளில் என்னென்ன வேறுபாடுகள் உள்ளன என்று கண்டுபிடிக்கலாமா?

இடைக்கால ஓவியங்கள் தேவதைகள், சொர்க்கம் போன்ற ஆன்மீகக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது மறுமலர்ச்சிக்கால ஓவியங்கள் உடலின் அழகு, தனித்தன்மை, வண்ணங்களின் இயல்பான பயன்பாடு போன்ற அடிப்படைக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இம்முறையில் மறுமலர்ச்சிக் காலத்தில் ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக் கலை போன்ற துறைகள் தனித்துவமான மாற்றங்களுக்கு உட்பட்டன. ஐரோப்பாவின் முக்கிய வணிக மையங்களில் ஒன்றான புளோரன்ஸ் நகரம் இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைகளின் முக்கிய மையமாக இருந்தது.

## ஓவியக்கலை

மறுமலர்ச்சிக்காலத்தில் மனிதநேயம் மிகவும் வலுவாகப் பிரதிபலித்தது ஓவியக் கலையிலாகும். ஓவியர்கள் தங்களது ஓவியங்களில் மனித உருவங்களைத் துல்லியமாகவும் தெளிவாகவும் நுணுக்கமாகவும் சித்திரித்தனர். உடற்கூறியல் (Anatomy) துறையில் அவர்கள் பெற்றிருந்த அறிவு இதற்கு உதவியது. பகுத்தறிவுச் சிந்தனைக்கும் மனித உணர்வுகளுக்கும் ஓவியர்கள் தங்களது படைப்புகளில் முக்கியத்துவம் அளித்தனர். இவ்வுலக மதிப்புகளுக்கு முக்கியத்துவம் கிடைத்தது. மனிதநேய தாக்கத்தின் காரணமாகக் கலைப் படைப்புகள் கூடுதல் துல்லியமாகவும் உண்மையாகவும் இருந்தன.

கலைஞர்கள் பொதுவாகத் தங்களது படைப்புகளுக்கு இறைத்தத்துவங்களை மையக் கருவாகத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் அவர்களுடைய ஓவியங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள சிறப்பம்சங்களைக் காணமுடிந்தது.

- நிலப்பரப்புகள் (Landscapes)
- நிறங்களால் ஒளியையும் தூரத்தையும் சித்திரித்தல்
- மனித உடலின் உண்மையான சித்திரிப்பு
- எண்ணெய் வண்ணப்பூச்சின் பயன்பாடு
- உருவப்படங்கள் (Portraits)
- இலட்சிய முழுமை பெற்ற (Idealised) மனித உருவத்தில் உள்ள கடவுளின் சித்தரிப்பு



இது இத்தாலிய மறுமலர்ச்சிக்கால ஓவியரான ஜியோவனி பெல்லினி வரைந்த 'ஆகனி இன் த கார்டன்' ( பூந்தோட்டத்தில் வேதனை) என்ற ஓவியமாகும். ஒலிவ மலையில் கிறிஸ்து முழங்காற் படியிட்டு ஜெபிக்கும் போது அவருடைய சீடர்கள் அவருக்கு அருகில் தூங்குகிறார்கள். பின்புலத்தில் ரோமப்படை வீரர்கள் கிறிஸ்துவைக் கைது செய்ய வருவதையும் இச்சூழலில் காணலாம்.



இத்தாலிய மறுமலர்ச்சிக்கால ஓவியரான பியரோ டெல்லா பிரான்செஸ்காவின் புகழ் பெற்ற இரட்டை எண்ணெய் உருவப்படமான டிப்றிக் ஆப்ஃ பெடரிகோ டா மோண்டே ஃபெல்ட்ரோ மற்றும் பாட்டிஸ்டா ஸ்போர்சா

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்து மறுமலர்ச்சிக்கால ஓவியக் கலையின் சிறப்பம்சங்கள் எவையெல்லாம் அவற்றில் பிரதிபலிக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கவும்.

ஜியோட்டாவின் ஓவியங்களில்தான் முதன்முதலாக கிரேக்க – ரோம தாக்கம் காணப்பட்டது. பிற்காலத்தில் ஓவியக் கலைத்துறைக்கு வந்த அனைவரையும் ஈர்த்த ஓவியர் மஸாச்சியோ ஆவார். அவரது சுவரோவியங்கள் வட்ட வடிவிலும், மேற்பரப்பிலிருந்து வெளியே தள்ளி நிற்பது போன்று தோன்றுபவைகளாயிருந்தன. அவர் அன்றாட வாழ்க்கை அனுபவங்களைக் காட்டும் மனித உருவங்களைத் தத்ரூபமாக வரைந்தார்.

லியானார்டோ டாவின்சியின் உலகப் புகழ்பெற்ற ஓவியங்களே 'இறுதி இரவு உணவு' மற்றும் 'மோனலிஸா' ஆகியன. நிறம், நிழல், ஒளி ஆகியவற்றை இணைக்கும் அறிவியலில் டாவின்சி தனித்துவமானவர் என்பதையே இந்த ஓவியங்கள் தெளிவுபடுத்துகின்றன. மனித உடலைப் பற்றி அறிவியல் முறையில் கற்றறிந்த ஒரு பன்முக மேதையாக இருந்தார் லியானார்டோ

டாவின்சி. உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று இயேசு கிறிஸ்து தம் சீடர்களிடம் கூறும் போது அவர்கள் முகத்தில் தோன்றும் வியப்பு, பயம், குற்ற உணர்வு போன்ற மனித உணர்வுகளே 'இறுதி இரவு உணவு' ஓவியத்தில் பிரதிபலிக்கின்றன. மோனலிஸாவின் புதிரான முகபாவனையில் விடை கிடைக்காத ஏராளமான வினாக்களை டாவின்சி மறைத்து வைத்திருக்கிறார் என்றுதான் பொதுவாகக் கருதப்படுகிறது.



லியானார்டோ டாவின்சி



இறுதி இரவு உணவு



மோனலிஸா

வத்திக்கானின் சிஸ்டைன் தேவாலயத்தின் கூரையில் (Ceiling) வரையப்பட்ட சுவரோவியங்களும், 'கடைசித் தீர்ப்பும்' மைக்கல் ஏஞ்சலோ என்ற படைப்பாளியை அழியாதவராக்குகின்றது. வலிமையானவர்களும் அழகான மனிதர்களுமே அவரது பெரும்பாலான ஓவியங்களின் மையமாக இருந்தனர்.

டிஷ்யனும், ராஃபேலும் மறுமலர்ச்சிக் காலத்தில் புகழ்பெற்ற வேறு இரண்டு ஓவியர்கள் ஆவார். ராஃபேல் மனிதர்களை விவேகமுள்ளவர்களாகவும், மிதவாதிகளாகவும், கண்ணியமானவர்களாகவும் சித்திரித்தார். இவர்களின் படங்களில் கருத்துக்களோடு அழகிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.



மைக்கல் ஏஞ்சலோ



டிஷ்யன்



ராஃபேல்



மறுமலர்ச்சி ஓவியக் கலையின் சிறப்புக்களைக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.

## சிற்பக் கலை


டொணாடெல்லோவின் தாவீது

ஓவியக்கலை போலவே கவனத்தை ஈர்க்கும் மற்றொரு கலை சிற்பக்கலையாகும். மறுமலர்ச்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க சிற்பிகளில் ஒருவரே டொணாடெல்லோ. இடைக்கால கோதிக் முறையிலிருந்து சிற்பக் கலையை மீட்டெடுத்த இவர் சிற்பங்களுக்கு அதிகமான ஆற்றலையும், ஆளுமையையும் பகிர்ந்து கொடுத்தார். தனது உடல் எடை முழுவதையும் ஒரு காலில் தாங்கி நிற்கின்ற ஓர் இளைஞனை அவர் 'தாவீது' என்ற வெண்கலச் சிற்பமாகச் செதுக்கியுள்ளார். அவரது 'கட்டமெலாத்த' என்ற குதிரை சவாரி செய்கின்ற வீரனின் சிற்பம் பண்டைய ரோமிலுள்ள குதிரைப்படை வீரர்களை நினைவூட்டுகிறது. மதச்சார்பற்ற வீரனின் பெருமையை டொணாடெல்லோ இதன் வழி வெளியிட்டுள்ளார்.

மனித வடிவில் இறைவனைச் சித்திரிக்கும் மைக்கல் ஏஞ்சலோவின் சிற்பங்கள் பண்டைய கிரேக்க – ரோம முறையிலிருந்து மாறுபட்டதாயின. கிறிஸ்துவின் உடலை மடியில் கிடத்தியிருக்கும் மரியாளைச் சித்திரிக்கும் சிற்பமான பியத்தாவும் வீரனான தாவீதின் சிற்பமும் அவரைப் புகழுடையவராக மாற்றியது.


கட்டமெலாத்தா


பியத்தா


மைக்கல் ஏஞ்சலோவின் தாவீது



மறுமலர்ச்சிக் கால ஓவியக்கலை மற்றும் சிற்பக்கலையின் பொது சிறப்பம்சங்களைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துங்கள்.

## கட்டடக் கலை


ப்ரூணலஸ்கி வடிவமைத்த குவிமாடம்

ஓவியக்கலை, சிற்பக்கலை தவிர மாற்றங்களைக் கண்ட மற்றொரு துறை கட்டடக் கலையாகும். பிலிப்போ ப்ரூணலஸ்கி கட்டடக் கலைத் துறையில் புதிய முறைக்கு துவக்கம் குறித்தார். இடைக்காலத்தில் நிலைபெற்றிருந்த கோதிக் கட்டடக்கலை முறையிலிருந்து மாறுபட்டு பண்டைய கிரேக்க – ரோம (கிளாசிக்) முறையின் தாக்கம் அவர் கட்டிய

### கோதிக் முறை

இடைக்காலத்தின் இரண்டாம் பகுதியில் ஐரோப்பாவில் வளர்ந்து வந்த ஒரு கலை கோதிக் கட்டடக் கலையாகும். இது பிரான்சில் உருவானது. கூர்மையான கோபுரங்கள் இதன் முக்கிய சிறப்பம்சமாகும். ஐரோப்பாவில் பல தேவாலயங்களும் பல்கலைக் கழகங்களும் இந்த வடிவில் கட்டப்பட்டன.



புளோரன்சிலுள்ள பேராலயத்தில் காணலாம். இவை கோதிக் முறையிலுள்ள உயரமான கோபுரங்களுக்குப் பதிலாக குவிமாடங்கள் (டியூமோ) கொண்டிருந்தன. மைக்கல் ஏஞ்சலோ, பிரமாந்தே ஆகியோரின் தலைமையில் ரோமில் கட்டப்பட்ட செயின்ட் பீட்டர்ஸ் பசலிக்காவில் இந்த முறை கூடுதல் தெளிவாக உள்ளது.



செயின்ட் பீட்டர்ஸ் பசலிக்கா

மறுமலர்ச்சிக் கலையில் மனித நேயத்தின் தாக்கத்தை விளக்கும் ஒரு டிஜிட்டல் ஆல்பத்தைக் குறிப்புகளுடன் தயாரியுங்கள்.

## மறுமலர்ச்சி இலக்கியம்

“ நமது விதியை நிர்ணயிப்பது நட்சத்திரங்கள் அல்ல நாமே ”

ஆங்கில இலக்கிய ஆசிரியரான வில்லியம் ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற 'ஜூலியஸ் சீசர்' என்ற நாடகத்திலுள்ள வரிகளே இது. மறுமலர்ச்சி செல்வாக்கு செலுத்திய இலக்கியவாதிகளில் ஒரு நபரான ஷேக்ஸ்பியரின் இந்த வரிகளில் மனிதநேயத்தின் சக்தி எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதைப் பரிசோதனை செய்யவும்.

மறுமலர்ச்சி இலக்கியவாதிகள் தனிநபர் சுதந்திரத்திற்கும் மதசார்பற்ற மதிப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். மறுமலர்ச்சி இலக்கியத்தின் அடிப்படை அம்சமே இடைக்காலத்தில் நிலைபெற்றிருந்த

புலமைவாதத்திலிருந்துள்ள விடுதலையாகும். பண்டைய கிரேக்க – ரோம கலாச்சாரத்தின் செல்வாக்கு இருந்த போதிலும் லத்தீன் மொழிக்குப் பதிலாக வட்டார மொழியிலேயே பெரும்பாலான மறுமலர்ச்சி இலக்கியவாதிகள் எழுதினர். இக்காலத்தில் உரைநடை இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் கிடைத்தது.

வட்டார மொழியிலும் உரைநடையிலும் எழுதுவது சமுதாயத்திற்கு எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும் என்பதை வகுப்பில் கலந்துரையாடவும்.



தாந்தே

'டிவைன் காமடியை' எழுதிய தாந்தே மறுமலர்ச்சிக் காலத்தின் ஒரு முக்கியமான இலக்கியவாதியாவார். நரகம், ஆன்மாவைப் புனிதப்படுத்தும் இடம் (Purgatory), சொர்க்கம் இவற்றின் வழியேயுள்ள தாந்தேயின் புனித பயணமே இந்தக் கவிதையின் கருப்பொருள் ஆகும். ஆனால் அது மனித அன்பு, தேசப்பற்று, இயற்கையோடுள்ள பற்று, சுதந்திரமான ஒருங்கிணைந்த இத்தாலிக்கான ஏக்கங்கள் ஆகியவை இதில் வலுவாகப் பிரதிபலிக்கிறது. இத்தாலியின் வட்டார மொழியிலேயே தாந்தே 'டிவைன் காமடியை' எழுதினார்.



பெட்ரார்க்

மற்றொரு உலகப் புகழ்பெற்ற இலக்கியவாதியான பெட்ரார்க் மனிதநேயத்தின் முக்கிய ஊக்குவிப்பாளர்களில் ஒருவராவார். லோராவுக்காக அவர் எழுதிய காதல் பாடல்கள் துணிச்சலானதும், தனித்துவமான எழுத்து நடையிலும் இருந்தன. ஆனால் பெட்ரார்க் லத்தீன் மொழியைக் கைவிடத் தயாராக இல்லை. உலகின் கவனத்தை ஈர்த்த மற்றொரு மறுமலர்ச்சி இலக்கியவாதியான பொக்காஷியோ எழுதிய நூலே 'தி தக்காமரன்'.



மாக்யவெல்லி

நிக்கோலா மாக்யவெல்லி 'தி பிரின்ஸ்' என்ற படைப்பில் அரசியல் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்கிறார். தான் ஆளும் நாட்டின் அதிகாரத்தையும் பாதுகாப்பையும் பேணுவது ஆட்சியாளரின் மிக முக்கியமான கடமையாக அவர் கருதினார். பொதுவாக மக்கள் சுயநலவாதிகளும், அதிகாரத்திற்கும், பொருள் செழிப்பிலும் ஆர்வமுள்ளவர்களாவார். எனவே நாட்டின் தலைவர் ஒரு போதும் தன்னுடைய குடிமக்களில் ஒரு பிரிவினரோடு விருப்பமோ, ஆதரவோ காண்பித்தல் கூடாது என்பது அவருடைய கருத்து. இடைக்காலத்திலுள்ள நிலமானிய ஆட்சியாளர்களிலிருந்து மாறுபட்ட ஓர் ஆட்சியாளரை மாக்யவெல்லி தன்னுடைய 'தி பிரின்ஸ்' என்ற படைப்பில் அறிமுகப்படுத்துகிறார்.

"ஒவ்வொரு மன்னனும் 'கொடுமை இல்லாத கருணையுள்ளவன்' என்ற நல்ல பேர் பெற விரும்ப வேண்டும். அந்தக் கருணையைப் பிறர் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதனால் தன்னுடைய மக்களுக்கிடையில் ஐக்கியமும் விசுவாசமும் நிலைநிறுத்துவதற்காகக் கொடூரமானவன் என்ற பெயர் வந்தாலும் அதனை மன்னன் பொருட்படுத்த வேண்டியதில்லை."

ஒரு அரசனைக் குறித்துள்ள மாக்யவெல்லியின் கண்ணோட்டமே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு அரசாட்சி பற்றி மாக்யவெல்லி என்னென்ன கருத்துகளை முன் வைக்கிறார் என்பதைக் கலந்துரையாடவும். இதில் மனிதநேயம் எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதைக் கண்டறியவும்.


கசாண்ட்ரா ஃபெடலே

மனித நேயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த சில பெண்களும் இக்காலத்தில் இத்தாலியில் வாழ்ந்திருந்தனர். அவர்களில் முக்கியானவர் மனிதநேயவாதியும், எழுத்தாளருமான கசாண்ட்ரா ஃபெடலே ஆவார். தன்னுடைய எழுத்துக்களாலும் சொற்பொழிவுகளாலும் பிரபலமான கசாண்ட்ரா பெண்களுக்கு உயர்ந்த கல்வி வழங்குவதன் முக்கியத்துவத்தைக் குறித்துப் பேசினார். இத்தாலியின் மனிதநேயவாதிகளான பிரபுக்களோடு கடிதத்தின் மூலமாகக் கருத்து பரிமாற்றம் செய்த அவருடைய சொற்பொழிவுகளும் எழுத்துக்களும் ஏராளம் அச்சடித்து வெளியிடப்பட்டன.

பின்னர் மறுமலர்ச்சி இத்தாலியிலிருந்து பிற நாடுகளின் இலக்கியங்களுக்குப் பரவத் தொடங்கின. அங்கும் பல படைப்புகள் இயற்றப்பட்டன. அவற்றில் சிலவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

| எழுத்தாளர் | படைப்பு | நாடு |
|---|---|---|
| இறாஸ்மஸ் | இன் ப்ரைஸ் ஆப் ஃபோளி | நெதர்லாந்து |
| ஜெஃப்ரி சாசர் | கேன்டர்பறி கதைகள் | இங்கிலாந்து |
| தோமஸ் மூர் | உட்டோப்பியா | இங்கிலாந்து |
| மிக்கெல் டெ செர்வாந்தே | டான் கிஹோட் | ஸ்பெயின் |
| பிரான்ஸ்வா ரபலெய் | கார்கன்றுவயும் பான்றகுருவலும் | பிரான்ஸ் |

மறுமலர்ச்சியின் போது இலக்கிய படைப்புகளை பிரபலப்படுத்துவதில் அச்சு முக்கிய பங்கு வகுத்தது. ஐரோப்பாவில் முதல் அச்சு இயந்திரம் ஜெர்மன்காரனான ஜோஹன்னாஸ் குட்டன்பெர்க் என்பவரால் நிறுவப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இந்த அச்சகத்திலுள்ள அச்சு இயந்திரம் உலோகத்தால் உருவாக்கப்பட்டதும் ஓர் இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்ல கூடியதுமாக இருந்தது. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பு அன்றைய சமூகத்தில் என்னென்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம்?

- அறிவின் பரவல்
- எழுத்தறிவால் ஏற்பட்ட முன்னேற்றம்
- 
- 

அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பால் இலக்கியங்களையும் பிற நூல்களையும் மக்கள் பரவலாக வாசிக்கத் தொடங்கினர்.

'மனிதநேயமும் மறுமலர்ச்சிக் கால இலக்கியமும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தயார் செய்யவும்


அச்சு இயந்திரம்

## மறுமலர்ச்சியும் வரலாற்று படைப்பும்




மேலே கொடுக்கப்பட்டுள்ளது உலக வரலாற்றைக் கற்பதற்காகப் பிரித்திருக்கும் முறைகளில் மிகவும் கவனத்தை ஈர்த்த ஒன்றாகும். இதன்படி C.E 5 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் பண்டையக் காலம் என்றும், அதைத் தொடர்ந்து C.E 15 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் இடைக்காலம் என்றும் அறியப்படுகிறது. C.E 15 ஆம் நூற்றாண்டிற்குப் பின்வரும் காலம் நவீன காலமாகக் கருதப்படுகிறது. இந்த முறை மறுமலர்ச்சிக் காலத்தில் தான் நடைமுறையில் வந்தது. இத்தாலியன் வரலாற்று ஆசிரியர்களான ஃபிளாவியோ பியோண்டோ, லியர்னார்டோ புரூனி ஆகியோரால் இந்த முறை உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் வரலாறு எழுதுவதில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை என்பதைப் பார்ப்போம்.

இடைக்கால கிறிஸ்தவ மரபிலிருந்து மதச் சார்பற்ற வாழ்க்கைக்கும் சிந்தனைக்கும் உள்ள மாற்றம் வரலாறு எழுதுவதிலும் பிரதி பலித்தது. வரலாற்று நிகழ்வுகள் கடவுளின் படைப்பு என்றும் வரலாற்றின் போக்கை நிர்ணயிப்பது ஓர் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியாகும் என்ற கண்ணோட்டமே இடைக்காலத்தில் (Super natural power) நிலைபெற்றிருந்தது. ஆனால் இந்தக் கண்ணோட்டம் நவீன காலத்தில் அதன் முக்கியத்துவத்தை


பிளாவியோ பியோண்டோ


லியனார்டோ புரூனி

இழந்தது.மனிதனை மையமாகக் கொண்ட வரலாற்று விளக்கங்களுக்கு அங்கீகாரம் பெறத் தொடங்கின. துறவிகளின் நாளாகமங்கள் (Chronicles) மதகுருக்களின் வாழ்க்கை கதைகளை விட வாழ்க்கை வரலாறு எழுதுவதில் மையப் பொருளாக மாறியது. தொல்பொருள் சான்றுகளுக்கும், எச்சங்களுக்கும் வரலாறு எழுதுவதில் முக்கிய பங்கு கிடைத்தது மறுமலர்ச்சி கால வரலாற்று எழுத்தின் வேறொரு சிறப்பம்சமாகும். இதன் விளைவாக வரலாற்றாசிரியர்கள் கல்வெட்டுகள், நாணயங்கள், பண்டைய கையெழுத்துப் பிரதிகள் போன்ற சான்றுகளுக்கு வரலாறு எழுதுவதில் ஒரு சிறப்பிடத்தைக் கொடுத்தனர். பண்டைய கையெழுத்து பிரதிகள் சேகரிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான முயற்சிகள் அதிகமாக ஊக்குவிக்கப்பட்டன.

**நாளாகமம்**

அரசர்கள் தங்கள் நாட்டு நிகழ்வுகளைப் பதிவு செய்ய அரண்மனை வரலாற்று ஆசிரியர்களை நியமித்திருந்தனர். அவர்கள் தங்கள் அரசர் கால நிகழ்வுகளைப் பதிவு செய்தனர். இத்தகைய பதிவு செய்த நூல்களை நவீன வரலாற்றாசிரியர்கள் நாளாகமம் என்று அழைத்தனர். ஏனெனில் அவை நிகழ்வுகளின் தொடர்ச்சியான காலவரிசை விளக்கத்தை வழங்கின.

மனித நேயத்தின் வருகையுடன் வரலாற்றை எழுதுவதில் விமர்சனங்களுக்கும் இடம் கிடைத்தது. கதைகள் மற்றும் புராணங்களின் இடத்தை அறிவியல் முறையிலான தேடல்களும் ஆராய்ச்சிகளும் கையகப்படுத்தின. மாக்யவெல்லியும் மறுமலர்ச்சி வரலாற்றை எழுதுவதை வளப்படுத்தினர்.

வரலாறு எழுதுவதை அறிவியலாக்குவதில் மறுமலர்ச்சி ஆற்றிய பங்கை விளக்கவும்.

## மறுமலர்ச்சியும் அறிவியலும்

"ஆயிரத்து அறுநூற்று ஒன்பதில் அறிவியலின் சுடர் உதயமாகத் தொடங்கியது. பாதுவா நகரத்தில் தனது எளிய வீட்டில் இருந்து கலிலியோ கலிலி சூரியன் நிலையானது என்றும் பூமிதான் சுற்றுகிறது என்பதை நிரூபிக்கும் முயற்சியைத் துவங்கினார்."

இது பிரபல ஜெர்மன் நாடகக் கலைஞர் பெர்தோல்ட் பிரெக்தின் 'கலிலியோவின் வாழ்க்கை' என்ற நாடகத்தின் துவக்கக் கூற்றாகும். பூமிதான் பிரபஞ்சத்தின் மையம் என்ற நம்பிக்கை 16–ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. ஆனால் அந்த நம்பிக்கையை நிராகரித்த கலிலியோவின் முயற்சிகளைக் குறித்தே இந்த வரிகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறாக நடைமுறையிலிருந்த சிந்தனைகளையும் பகுத்தறிவையும் மறுமலர்ச்சி எவ்வாறெல்லாம் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை நாம் இங்கு விவாதிக்கலாம்.

மறுமலர்ச்சி நவீன அறிவியலின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. மறுமலர்ச்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளான ஒரு முக்கிய துறையாக ஜோதிடம் இருந்தது. பிரபஞ்சத்தின் சலனங்களைக் கட்டுப்படுத்துவது இயற்பியல் சக்திகள் என்ற கண்ணோட்டத்தை விஞ்ஞானிகள் முன் வைத்தனர். பிரபஞ்சத்தின் மையம் பூமியே என்ற தாலமியின் கோட்பாடு பதினாறாம் நூற்றாண்டு வரையிலும் சவால்களை எதிர்கொள்ளாமல் நிலைபெற்றிருந்தது. ஆனால் போலந்து நாட்டைச் சேர்ந்தவரும் மதகுருவுமான கோப்பர் நிக்கஸ் இதனை எதிர்த்து சவால் செய்தார். பிரபஞ்சத்தின் மையம் பூமியல்ல சூரியனே என்று அவர் வாதிட்டார். பூமியும் பிற கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்பதை அவர் கவனித்தார்.

கோப்பர் நிக்கஸின் புரட்சிகரமான கண்டுபிடிப்புகளை கலிலியோ கலிலியும், ஜோஹான்னாஸ் கெப்லரும் இன்னும் தெளிவாக விளக்கினர். சூரியனிலிருந்துள்ள தூரத்தைப் பொறுத்தே கிரகங்களின் வேகம் மாறுபடும் என்று கெப்லர் கண்டுபிடித்தார். இது பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் ஐசக் நியூட்டன் ஈர்ப்பு விசைக் கோட்பாட்டை உருவாக்க வழி வகுத்தது. கலிலியோ கலிலி, தான் உருவாக்கிய தொலைநோக்கியின் உதவியுடன் வியாழனின் உபகிரகங்களையும் சனியின் சுற்றுப்பாதைகளையும் கண்டுபிடித்தார். கலிலியோவின் கண்டுபிடிப்புகள் கோப்பர் நிக்கஸின் கோட்பாட்டை உறுதிப்படுத்தின.






கோப்பர் நிக்கஸ் | கலிலியோவும் தொலைநோக்கியும் | ஐசக்நியூட்டன்

மறுமலர்ச்சி பொதுவாக மருத்துவத்திலும் குறிப்பாக உடலியலிலும் சாதனைகள் படைத்தது. சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பாராசெல்சஸ் என்பவர் நோய்களுக்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வுகாணவும் முயற்சித்தார். ஆன்டிரியஸ் வெசாலியஸ் சடலங்களை வெட்டி ஆய்வு செய்தும் உடலியலுக்கு புதிய அறிவுகளை அளிக்கவும் செய்தார்.



நவீன சமூகத்தின் வளர்ச்சிக்கு மறுமலர்ச்சி காலகட்ட அறிவியல் வழங்கிய நன்கொடையைக் குறித்து ஒரு குழு விவாதம் ஒழுங்கு செய்யவும்.

## மதச் சீர்திருத்தம் (Reformation)

மறுமலர்ச்சியின் செல்வாக்கு ஐரோப்பாவில் சமயத்துறையிலும் பிரதிபலித்தது. இறாஸ்மஸ் போன்ற மனிதநேயவாதிகள் எழுதிய எதிர்ப்பை தெரிவிக்கும் நகைச்சுவை நூல்களும் ஜாண் வைக்கிளிப், ஜாண் ஹஸ், ஸவோனறோளா ஆகியோரின் விமர்சனங்களும் கத்தோலிக்க திருச்சபையில் நிலைபெற்றிருந்த சில போக்குகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் எதிரான எதிர்ப்புகள் உருவாவதற்கான சூழலை உருவாக்கியது. மக்களிடமிருந்து பணத்தைப் சேகரிப்பதற்காக வெளியிடப்பட்ட பாவமன்னிப்பு சீட்டின் (Indulgence) விற்பனையே அந்தக் காலத்தில் அதிக எதிர்ப்புகள் தோன்றக் காரணமானது. பாவமன்னிப்பு சீட்டுக்களை பணம் கொடுத்து வாங்கினால் பாவங்களிலிருந்து விடுதலை பெறலாம் என்று மதத்தலைமை மக்களிடம் கூறியது. பாவமன்னிப்பு சீட்டு விற்பனையின் மூலமாகச் சேகரிக்கப்படும் பணத்தை வைத்து மருத்துமனைகள், பேராலயங்கள் ஆகியவற்றைக் கட்டுவதே சபைத் தலைமையின் நோக்கமாகும். இவற்றின் விற்பனைக்காக ஜோஹான் டெட்சல் என்ற டொமினிக்கன் துறவி ஜெர்மனிக்கு வந்தார். பாவமன்னிப்புச் சீட்டு விற்பனைக்கு எதிராக ஜெர்மனியில் விட்டன்பர்க் தேவாலயத்தின் கதவில் 1517 இல் மார்ட்டின் லூதர் என்ற புரோகிதர் தனது 95 ஆய்வறிக்கைகளை (Ninety five theses) பதிப்பித்தார். இது புரோட்டஸ்டன்ட் இயக்கம் என்ற சீர்த்திருத்த இயக்கத்தின் ஆரம்பமாகக் கணக்கிடப்படுகிறது. இதன் வாயிலாக மார்டின் லூதர் ஒரு கருத்தியல் விவாதத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தார். எனவே அவர் தனது கட்டுரைகளை ஜெர்மன் மொழிக்குப் பதிலாக லத்தீன் மொழியிலேயே தயாராக்கினார். ஆனால் அறிமுகமில்லாத சிலர் அவற்றை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து அவர் சபையோடு உள்ள தொடர்பை விட்டு விட்டார்.



ஏராஸ்மஸ்



மார்டின் லூதர்

ஜெர்மனியில் உள்ள பல்கலைக்கழகங்களும் மத சீர்திருத்தத்திற்கு களம் அமைத்தன. மார்ட்டின் லூதரின் புரோட்டஸ்டன்ட் மதச் சீர்த்திருத்தத்திற்கு மையமாகச் செயல்பட்டது அவர் ஆசிரியராக இருந்த ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் பல்கலைக்கழகமாகும். மதகுருக்கள், மதநீதிமன்றங்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த விரும்பிய ஆட்சியாளர்களின் விருப்பங்களும் மத சீர்த்திருத்ததிற்கு வலுவூட்டியது. வரி வசூலிப்பதிலும் தேவாலய நியமனங்களிலும் மதகுருக்களுக்கு இருந்த அதிகாரத்தையும் தவறின்மையையும் ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

மனித நேயத்தின் செல்வாக்கு மதச்சீர்திருத்தத்திற்குக் காரணமானது. இந்தக் கூற்றை நிறுவுக.

ஜெர்மனியில் தொடங்கிய மதச்சீர்த்திருத்தம் பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. சுவிட்சர்லாந்தில் உல்ரிச் ஸ்விங்கிலி, ஜாண் கால்வின் இங்கிலாந்து மன்னரான ஹென்றி VIII ஆகியோரே மதச் சீர்திருத்தத்திற்குத் தலைமை தாங்கினர். இங்கிலாந்தில் மன்னரை தலைவராகக் கொண்டு ஆங்கிலிக்கன் சபை நிலவில் வந்தது. இது 'தேசிய சபை' (National Church) என அறியப்பட்டது.

## எதிர் மதச் சீர்திருத்தம் (Counter Reformation)

மதச்சீர்திருத்தத்தைத் தொடர்ந்து கத்தோலிக்க சபை தன்னைத்தானே சீர்திருத்துவதற்கான முயற்சிகளைத் தொடங்கியது. இது எதிர் மதச் சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக வடக்கு இத்தாலியில் உள்ள ட்ரெண்டில் சபை தலைமைத்துவத்தின் ஒரு மாநாடு (சுனேகதோஸ்) கூட்டப்பட்டது. மதப்பிரிவில் உள்ள தவறான போக்குகளை நீக்கி சீர்திருத்தத்துடன் முன் செல்ல வேண்டுமென்பதே இதன் நோக்கமாக இருந்தது. இதன் விளைவாகப் பாவமன்னிப்புச் சீட்டின் விற்பனை தடை செய்யப்பட்டது. விசுவாசிகள் படிக்கக்கூடாத புத்தகங்களின் பட்டியலான 'இன்டெக்ஸ்' வெளியிடப்பட்டது. இடைக்காலத்தில் நிலை கொண்டிருந்த மதவிசாரணை நீதிமன்றம் (Inquisition) மறுபடியும் நிறுவப்பட்டது.


இக்னேஷியஸ் லயோலா

ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த இக்னேஷியஸ் லயோலா என்ற பாதிரியாரால் நிறுவப்பட்ட 'சொசைட்டி ஆஃப் ஜீசஸ்' என்ற சபையும் எதிர் மத சீர்திருத்தத்திற்கு முக்கிய பங்கு வகித்தது. இதில் உள்ள உறுப்பினர்கள் கடுமையான ஒழுக்கத்திற்கும் கேள்வி கேட்காத கீழ்ப்படிதலுக்கும் உட்பட்டனர். கல்வி நிறுவனங்களை நிறுவி மதப்பிரச்சார செயல்பாட்டில் ஈடுபடும் கத்தோலிக்க சபையின் மேலாதிக்கத்தை நிலை நாட்டவும் அவர்கள் முயன்றனர். கத்தோலிக்க சபையில் அந்தக் காலத்தில் நிலவிய பலதவறான போக்குகளை மாற்றுவதற்கு எதிர்மதச் சீர்திருத்தத்திற்கு முடிந்தது. எதிர் மதச் சீர்திருத்தம் 'கத்தோலிக்க மதச் சீர்திருத்தம்' (Catholic Reformation) என்றும் அறியப்படுகிறது.

மதச்சீர்திருத்தத்திற்கும் எதிர் மதச்சீர்திருத்தத்திற்கும் இடையேயான வேறுபாட்டைக் கண்டறிந்து எழுதுக.

கிரேக்க – ரோம காலத்திலிருந்தே நிலை பெற்றிருந்த மனித நேயச் சிந்தனைகளின் வளர்ச்சி பரிணாம நிலையைத்தான் மறுமலர்ச்சி அடையாளப்படுத்துகிறது. பண்டைய மற்றும் இடைக்காலங்களின் தொடர்ச்சியாகவும் மறுமலர்ச்சி இருந்தது. மனிதனும் அவனது தேவைகளுக்கும் வாய்ப்புகளுக்கும், சிறப்புகளுக்கும் முக்கியத்துவம் வழங்கும் மனிதநேயமே மறுமலர்ச்சியின் மையக் கருவாகும். ஐரோப்பாவிற்கும் பிற சமூகத்திற்கும் இடையிலான தொடர்பின் வாயிலாகவும் வியாபாரம் மற்றும் பரிமாற்றங்கள் வாயிலாகவும் வளர்ந்து வந்த மறுமலர்ச்சி உலகம் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

'மறுமலர்ச்சியின் தாக்கம் பல்வேறு துறைகளில்' என்ற தலைப்பில் வகுப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தவும். கருத்தில் கொள்ள வேண்டிய பகுதிகள்.

- கலை
- இலக்கியம்
- அரசியல்
- வரலாறு
- அறிவியல்
- மதம்

## தொடர் செயல்பாடுகள்

- மறுமலர்ச்சிக் காலத்தின் கலை, இலக்கியம் போன்ற துறைகளிலுள்ள பங்களிப்புகளை உட்படுத்தி ஒரு தகவல் விளக்க இதழ் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் அறிவியல் துறையில் ஏற்பட்ட கண்டுபிடிப்புகளும் தற்கால உலகமும் என்ற தலைப்பில் ஒரு சுவரொட்டி தயார் செய்து காட்சிப்படுத்தவும்.
- ஐரோப்பாவில் ஏற்பட்ட மதச் சீர்திருத்தத்தைப் போன்று இந்தியாவில் பக்தி இயக்கமும் ஓர் எதிர்ப்பு இயக்கமாக இருந்தது. அவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விவாதித்துக் குறிப்பு தயாரிக்கவும்.
- உலக வரைபடத்தில் மறுமலர்ச்சி, மதச் சீர்திருத்தம் பரவிய முக்கிய ஐரோப்பிய நாடுகளைப் பதிவு செய்து டிஜிட்டல் அட்லஸ் தயாரிக்கவும்.



2

# சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்

**1789 ஜூன் 20**

பிரான்சின் ஆட்சி மையமும் ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில் ஒன்றுமான பாரீஸ் மழையினால் நனைந்திருந்தது. ஆனால் பாரீஸினுடைய அரசியல்சூழல் மிகவும் தீவிரமாக இருந்தது. பிரெஞ்சு பாராளுமன்றத்தின் மூன்றாவது பிரிவான எஸ்டேட் ஜெனரல் பிரதிநிதிகளுக்குப் பாராளுமன்றத்தில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர்கள் அருகில் இருந்த டென்னிஸ் மைதானத்தில் கூடினர். பிரான்ஸ் மக்களுக்கு இறையாண்மையை வழங்கும் எழுத்து வடிவிலான அரசியலமைப்பைத் தயாரிக்கும் வரை பிரிந்து செல்லமாட்டோம் என உறுதிமொழி எடுத்தனர். பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் பிற்கால வரலாற்றில் முக்கியமான தாக்கத்தைச் செலுத்திய மக்களின் முன்னேற்றத்தைக் குறித்தே இந்தப் பாடம் விவாதிக்கிறது.

## பிரான்சில் சர்வாதிகார ஆட்சி முறை

பிரான்சில் நிலைபெற்றிருந்த சர்வாதிகார ஆட்சி முறைக்கு எதிராகவே மக்களின் முன்னேற்றம் உயர்ந்து வந்தது. பல ஆண்டுகளாகப் பிரான்சைப் பூர்பன் அரச வம்சம் ஆட்சிசெய்தது. இந்த அரச வம்சத்தின் ஆட்சியாளர்கள் அனைவரும் பொதுவாகச் சர்வாதிகாரிகளாக இருந்தனர். அரசாட்சி என்பது கடவுள் தந்த வரம் என்று அவர்கள் நம்பியிருந்தனர். எஸ்டேட்ஸ் ஜெனரல் என்று ஒரு பாராளுமன்றம் இருந்தாலும் நீண்ட காலமாக அது கூட்டப்படாமலே ஆட்சி நடத்தப்பட்டது. 1614 – இல் தான் பாராளுமன்றம் கடைசியாகக் கூட்டப்பட்டிருந்தது. பூர்பன் அரசர்களில் முக்கியமானவரான பதினான்காம் லூயி 'நானே நாடு' என்று அறிவித்தார்.

### தெய்வீக உரிமை கோட்பாடு (Divine Right Theory)

தெய்வீக உரிமை கோட்பாட்டின்படி அரசர் கடவுளின் பிரதிநிதி ஆவார். அரசர்களுக்கு உள்ள அதிகாரம் இறைவனிடமிருந்து கிடைத்ததாகும். அதனால் அவர்கள் மக்களிடமல்ல இறைவனிடமே கடன்பட்டிருக்கிறார்கள். சர்வாதிகார ஆட்சியை ஆதரித்தவர்கள் இந்தக் கோட்பாட்டை நம்பினர்.




நிலப்படம் 2.1 ஐரோப்பா 1789 இல்

நிலப்படம் 2.1 ஐ உற்றுநோக்கி பிரான்சின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவும். பிரான்சின் அண்டை நாடுகளைக் கண்டுபிடித்து அடையாளப்படுத்துங்கள்.

பதினான்காம் லூயிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த பதினைந்தாம் லூயி காலத்தில் ஊழலும், ஆடம்பரமும், அவர் தொடர்ச்சியாக நடத்திய போர்களும் நாட்டையும் மக்களையும் துயரத்திலாக்கின. தனது ஆடம்பரத்திற்கான பணத்தைத் திரட்ட அவர் மக்களின் மேல் புதிய வரிகளை விதித்தார். பிறகு பதினாறாம் லூயி ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவர் நிர்வாகக் காரியங்களில் சரியான ஆர்வம் காட்டவில்லை. நம்பிக்கையான அமைச்சர்களின் கரங்களில் நாடு பாதுகாப்பாக இருப்பதாக அவர் நம்பினார். ராணியாக இருந்த மேரி ஆன்டோயினெட் (Marie Antoinette) நிர்வாகத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டார். ராணியின் ஆடம்பரத்தையும் அரசர் காணாதது போல் நடித்தார். இது மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது.

பிரான்சின் ஆட்சியாளர்கள் மக்களுக்கு விருப்பமில்லாதவர்களாக இருந்ததற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து அட்டவணைப்படுத்துங்கள்.

## பிரெஞ்சின் சமூக நிலை

"பிரபுக்கள் யுத்தம் செய்கிறார்கள். மதகுருக்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். சாதாரண மக்கள் வரி செலுத்துகிறார்கள்."

இது பிரான்சில் உள்ள சாதாரண மக்களிடையே நிலவி வந்த சொல்லாகும். இதன் பொருள் என்ன? நாம் பரிசோதிக்கலாம்.

18–ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு சமூகம் மூன்று நிலைகளாகப் (எஸ்டேட்டுகள்) பிரிக்கப்பட்டிருந்தன. மதகுருக்கள் முதல் எஸ்டேட்டிலும், பிரபுக்கள் இரண்டாம் எஸ்டேட்டிலும், சாதாரண மக்கள் மூன்றாம் எஸ்டேட்டிலும் உட்பட்டிருந்தனர்.

### மதக்குருக்கள் (ஒன்றாம் எஸ்டேட்)

பிரான்சில் இருந்த கத்தோலிக்க சபை மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் செல்வச்செழிப்பாகவும் இருந்தது. பெரும்பான்மையான நிலங்களும் சபைக்குச் சொந்தமாகும். அனைத்து வரிகளிலிருந்தும் மதகுருக்களுக்கு

விலக்கு அளிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி அவர்கள் சாதாரண விவசாயிகளிடமிருந்து டைத் (Tithe) என்ற வரியைப் பிரித்திருந்தனர். விளைச்சலில் பத்தில் ஒரு பாகம் வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. இது சாதாரண விவசாயிகளுக்குப் மதகுருக்களிடம் பகைமை தோன்ற காரணமானது.

### பிரபுக்கள் (இரண்டாம் எஸ்டேட்)

பிரபுக்கள் நிர்வாகத்தில் உயர்ந்த இடங்களையும் இராணுவத்தில் உயர்ந்த பதவிகளையும் வகித்தனர். அவர்களும் நில உடைமையாளர்களாக இருந்தனர். ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்திருந்த பிரபுக்கள் மக்களிடமிருந்து பலவிதமான வரிகளை வசூலித்தனர்.

1749 – ஆம் ஆண்டு சட்டத்தின் படி எல்லா பிரிவு மக்களும் தங்களுடைய வருமானத்தில் இருபதில் ஒரு பங்கை அரசாங்கத்திற்கு வரியாக நேரடியாகச் செலுத்த வேண்டும். இந்த வரி வாங்திம்மே (Vingtieme) என்று அழைக்கப்பட்டிருந்தது. முதல் இரண்டு பிரிவினரும் (மதகுருக்கள், பிரபுக்கள்) அரசருக்கு ஒரு சிறிய தொகையை மட்டும் கொடுத்து விட்டு தந்திரமாக அவ்வரியைக் கொடுப்பதிலிருந்து விலகியிருந்தனர்.

மதகுருக்களும் பிரபுக்களும் தங்களது உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக அரசாட்சியை எதிர்க்க ஒருபோதும் தயங்கினதில்லை.

#### பிரபுக்கள் சாதாரண மக்களைச் சுரண்டிய பல்வேறு முறைகள்

- கோர்வி (Corvee): ஒரு வருடத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் சம்பளம் இல்லாமல் சாதாரண மக்களை வேலைக்கு அமர்த்துவதற்கான உரிமை
- பானலிட்டி (Banalite's): ஒயின் தயாரிப்பில் குத்தகை வழியாகக் கிடைக்கும் அதிக வரியும், திராட்சை ரசம், ரொட்டி போன்றவற்றைத் தயாரிப்பதற்காக நில உரிமையாளருக்குச் சொந்தமான வசதிகளைப் பயன்படுத்துவதற்கான வாடகையும் இதில் உட்படும்.
- பான்வின் (Banvin): தங்களது பிரதேசத்தில் உற்பத்திச் செய்யப்படும் திராட்சை ரசம் மீதான குத்தகை வரி
- பியேஷ் (Peage): பாலங்கள், சாலைகள் போன்றவற்றின் வரிகள்
- டெறாஷ் (Terrage): அறுவடை காலத்தில் விவசாயிகளிடமிருந்து பிரிக்கப்படும் சிறப்பு வரி.

CDM Ketelby, A History of Modern Times from 1789

## சாதாரண மக்கள் (மூன்றாம் எஸ்டேட்)




உயர் பிரிவினர் அனுபவிக்கும் சிறப்புச் சலுகைகளால்
நொறுக்கப்பட்ட சாதாரண மக்கள்

18–ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்திருந்த சாதாரண மனிதனின் நிலையை மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தின் மூலமாக அறிய முடிகிறது. நடுத்தர வர்க்கம், தொழிலாளர்கள், விவசாயிகள் அடங்கியதே பிரான்சின் மூன்றாம் எஸ்டேட். அவர்கள் காமன்ஸ் (சாதாரண மக்கள்) என்று அழைக்கப்பட்டனர். மக்கள் தொகையில் பெரும் பகுதியை உள்ளடக்கிய மூன்றாம் எஸ்டேட்டின் பெரும்பாலான மக்களும் வறுமையில் வாழ்ந்தனர். தாங்கள் உற்பத்தி செய்திருந்த விளைபொருள்களின் ஒரு பகுதியே விவசாயிக்குக் கிடைத்தது. அவர்கள் மன்னருக்கும் தேவாலயங்களுக்கும் பிரபுக்களுக்கும் வெவ்வேறான வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தன. அத்துடன் ஊதியமின்றி பல கட்டாய சேவைகளையும் செய்ய வேண்டியிருந்தன. அவற்றில் சில:

- தேவைப்படும் போது இராணுவச் சேவை செய்தல்
- பொதுச்சாலைகள், நீர்வழிகள், பாலங்கள் போன்றவற்றைப் பராமரிக்க இலவச சேவை செய்தல்

18 – ஆம் நூற்றாண்டில் பிரான்சில் இருந்த சமூக அமைப்பை ஆராய்ந்து குறிப்பு தயாரியுங்கள்.

**காபெல்**
**(Gabelle)**

இது 13 – ஆம் நூற்றாண்டு முதல் அனைத்து உற்பத்திப் பொருட்களின் மீதும் சுமத்தப்பட்டிருந்த ஒரு வரியாகும். 15–ஆம் நூற்றாண்டில் இது உப்பிற்கு மட்டுமாக மாறியது. காபெல் முற்றிலும் மக்களுக்கு விரோதமான வரியாகும்.

## நடுத்தர வர்க்கத்தின் தோற்றம்

18 – ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு சமூகத்தில் ஒரு நடுத்தர வர்க்கம் வளர்ந்து வந்தது. இந்தக் காலகட்டத்தில் பிரான்சில் வேளாண்மை–தொழில்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் நடுத்தர வர்க்கத்தின் தோற்றத்திற்குக் காரணமானது. விவசாய – தொழில் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் புதிய நகரங்கள் தோன்றின. நகரங்களில் உள்ள வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்தியவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவும் நடுத்தர வர்க்கத்தின் பகுதியாகவும் மாறினர்.

உள்நாட்டு வணிகமும் காலனிகளுடன் நடந்த வணிகமும் பிரான்சின் தொழிலதிபர்களைச் செல்வந்தர்களாக்கியது. முக்கியமான துறைமுகங்களும் நகரங்களும் இந்தச் செல்வந்தர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இவர்களும் நடுத்தர வர்க்கதின் பகுதியாக இருந்தனர். இவ்வாறு உருவான நடுத்தர வர்க்கத்தில் கல்வி கற்ற மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வங்கியாளர்கள் உட்பட்டிருந்தனர். இந்த நடுத்தர வர்க்கத்தினரும் சாதாரண மக்களைப் போல அரசுக்கும் பிரபுக்களுக்கும் வரி செலுத்த வேண்டியிருந்தன. கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னிலையில் இருந்தும் நிர்வாகத்திலும் இராணுவத்திலும் அவர்களுக்குத் தகுதிப்பட்ட பதவியோ, அதிகாரமோ வழங்கப்படவில்லை. சுருங்கக் கூறினால் கடும் அதிருப்தியோடுதான் நடுத்தர வர்க்கத்தினர் இருந்தனர்.

நடுத்தர வர்க்கத்தின் உயர்வும் அதிருப்தியும் பிரெஞ்சு புரட்சியில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தின. இந்தக் கூற்றை மதிப்பிட்டு குறிப்பு தயாரியுங்கள்.

**வில் மற்றும் ஏரியல் டியூரன்ட்**
**(Will and Ariel Durant)**




*புகழ்பெற்ற வரலாற்றாசிரியர்களான டியூரன்ட் தம்பதியினர் பிரெஞ்சு புரட்சியில் நடுத்தர வர்க்கத்தினரின் பங்கைப் பற்றி இவ்வாறாகக் குறிப்பிடுகின்றனர்.*

அதிருப்தியடைந்த விவசாயிகளை ஆயுதமாக்கிக்கொண்டு பழமையையும் பிரபுத்துவத்தையும் தலைகீழாக்கியும் அதிருப்பதியான நகர மக்களைக் கொண்டு அரசப் படைகளை அழிக்கவும் செய்த பூர்ஷ்வாக்களின் (நடுத்தர வர்க்கம்) செயல்பாடாக இருந்தது பிரெஞ்சு புரட்சியின் சாராம்சம்'.

(Will and Ariel Durant – Story of Civilisation–VOL-X Rousseau and Revolution Simon and Schuster New York 1967)

18 – ஆம் நூற்றாண்டிலுள்ள பிரெஞ்சு சமூகத்தின் சிறப்புகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தை முழுமை செய்யுங்கள்.




## பொருளாதார நெருக்கடி

1770 – களில் பிரான்சில் வேளாண்துறை கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டது. உற்பத்தியில் ஏற்பட்ட குறைவே இதற்குக் காரணம். இது தானியங்கள், ரொட்டி ஆகியவற்றின் விலை உயரக் காரணமானது. 1730 – க்கும் 1789 – க்கும் இடைப்பட்ட காலத்தில் தானியங்களின் விலை 60 சதவீதம் உயர்ந்தது. ஆனால் தொழிலாளர்களின் ஊதியத்தில் 22 சதவீதம் மட்டுமே உயர்வு உண்டானது. தீவனப்பற்றாக் குறையால் கால்நடை வளர்ப்பில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது. மக்கள் தொகையின் மூன்றிலொரு பிரிவை இந்தப் பிரச்சனை பாதித்தது.

பிரிட்டனுடன் பிரான்ஸ் கையெழுத்திட்ட வர்த்தக ஒப்பந்தப்படி பிரிட்டன் பொருட்களின் மீதான இறக்குமதி வரி பெருமளவு குறைக்கப்பட்டது. இதனால் பிரெஞ்சு சந்தையில் பிரிட்டிஷ் தயாரிப்புகள் நிரம்பி வழிந்ததுமல்லாமல் பிரான்சின் கைவினைக்கலைஞர்கள் வேலையில்லாதவர்களுமாயினர். எனவே அதிருப்தியடைந்த விவசாயிகளும் கைவினைக்கலைஞர்களும் பிற கைத்தொழில் செய்பவர்களும் அரசிற்கு எதிராகத் தெருவில்

இறங்கிப் போராடினார்கள். பிரான்சின் பொருளாதார பாதிப்பை ஈடுகட்ட வங்கியாளர்களிடமிருந்து பெரும் தொகையைப் பதினாறாம் லூயி கடனாக வாங்கினார். இந்தக் கடன்களுக்குப் பதிலாக அரசாங்கம் பத்திரங்களைக் கொடுத்தன. பிரெஞ்சு அரசின் கருவூலங்கள் காலியானதால் வங்கிகள் கடன் கொடுப்பதிலிருந்து பின்வாங்கின. நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான வரிச்சுமை இருக்க வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை வைத்தனர். வரிவிதிப்பில் இருந்த சமத்துவமின்மையே வங்கியாளர்கள் உட்பட்ட நடுத்தர பிரிவினரைப் பிரெஞ்சு ஆட்சிக்கெதிராக மாறுவதற்கான காரணங்களில் ஒன்றாக இருந்தது.

## சிந்தனையாளர்களின் தாக்கம்

பிரான்சின் சிந்தனையாளர்களும் அவர்களுடைய கருத்துகளும் பிரெஞ்சு மக்களை அவர்கள் எதிர்கொள்ளுகின்ற நிலைமைகளை அறிய வைத்து, அநீதிக்கெதிராகச் செயல்படத் தூண்டின. இவ்வகையில் பிரெஞ்சு மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்திய சில சிந்தனையாளர்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்..



வோல்டயர்

### வோல்டயர்

தத்துவஞானியும் வரலாற்றாசிரியரும் கேலி விமர்சகருமான வோல்டயர் மனிதநேயம் மிகுந்தவர். தனது கட்டுரைகள் மூலமாக எப்போதும் மதுக்குருக்களை விமர்சித்து வந்தாலும், அவர் ஒரு நாத்திகர் அல்ல. அவருடைய கருத்துகள் மற்றும் எழுத்துகள் காரணமாகப் பிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்டார்.



ரூஸோ

### ரூஸோ

ரூஸோ ஒரு கல்விச் சிந்தனையாளரும் அரசியல்வாதியுமாவார். அவருடைய படைப்பான 'சமூக ஒப்பந்தம்' (The Social Contract) தனிமனிதனுக்கும் அரசுக்கும் இடையிலான உறவை வரையறுத்தது."மக்கள் தங்களது நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஓர் ஒப்பந்தத்தின் கீழ் அரசரை உருவாக்கினர். ஆனால் அரசர் பொறுப்புகளை மீறிவிட்டார். எனவே அரசர் ஆட்சி செய்வதற்குரிய உரிமையை இழந்து விட்டார்" என்று அவர் கருத்து தெரிவித்தார். "நல்ல சட்டம் நல்ல குடிமக்களை உருவாக்குகிறது" என்று அவர் வாதிட்டார். ரூஸோ நடைமுறையிலிருந்த அதிகார கட்டமைப்பை எதிர்த்தார். ரூஸோவின் கருத்துகள் இயற்கைவாதத்தை அடிப்படையாகக் கொண்டதாகயிருந்தது. "மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான், ஆனால் அவன் எல்லா இடங்களிலும் சங்கிலியால் கட்டப்பட்டு இருக்கிறான்" என்பதே ரூஸோவின் கருத்தாகும். ரூஸோவின் படைப்புகள் பிரெஞ்சு புரட்சிக்கு ஊக்கம் அளித்தன.

## மாண்டெஸ்கியூ

மாண்டெஸ்கியூ கிறிஸ்தவ சபையின் தீமைகளையும் அரசின் சர்வாதிகாரத்தையும் விமர்சித்தார். வரையறுக்கப்பட்ட முடியாட்சியை ஆதரித்த அவர் தனிநபர் சுதந்திரத்தை உறுதி செய்வதற்காக அரசின் அதிகாரத்தைச் சட்டநிர்வாகம், ஆட்சி நிர்வாகம், நீதி நியாயம் என மூன்றாகப் பிரிக்கலாம் என்று ஆலோசனை கூறினார். அவருடைய புகழ்பெற்ற படைப்பான 'சட்டத்தின் ஆத்மா' (The Spirit of Laws) என்ற நூல் அரசின் தத்துவங்களையும் சட்டங்களையும் அரசியலமைப்பு பரிணாமத்தையும் பகுப்பாய்வு செய்கின்றன.



மாண்டெஸ்கியூ

பிரிட்டீஷ் சிந்தனையாளரான ஜாண்லாக்கின் கருத்துகளும் பிரெஞ்சு மக்களிடம் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தின. இவரது விவாதத்திற்குரிய படைப்பான 'அரசின் இரு ஒப்பந்தங்கள்' (Two Treatises of Government) அரசரின் தெய்வீக உரிமையையும் சர்வாதிகாரத்தையும் நிராகரித்தது. பிசியோகிராட்ஸ் என்று அறியப்பட்ட பொருளாதார நிபுணர்களும் பிரெஞ்சு மக்களைக் கவர்ந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் டர்கோட் (Turgot) நெக்கர் (Necker) போன்றவர்கள். பதினாறாம் லூயியின் ஆலோசகராயிருந்த டர்கோட் பிரான்சின் பொருளாதார நிலையை மேம்படுத்த பல திட்டங்களை வகுத்தார். நடுத்தர வர்க்கத்தினரின் நலன்களே இவருடைய பொருளாதாரக் கொள்கைகளில் பிரதிபலித்தன. வேளாண்மையை ஊக்குவிப்பதும் உணவுப் பொருட்களில் வர்த்தக சுதந்திரத்தை அனுமதிப்பதும் அவற்றில் முக்கியமானவையாகும்.

இந்தச் சீர்திருத்தங்கள் பிரான்சின் நிதி நிலைமையை ஓரளவு மேம்படுத்தின. மேரி அன்டோயினட் செலவுகளைக் குறைக்க விரும்பாதது டர்கோட்டிற்கு ராணியுடன் பகையுண்டாகக் காரணமானது. ராணியின் எதிர்ப்பினால் பதினாறாம் லூயி டர்கோட்டை மந்திரி பதவியிலிருந்து நீக்கி விட்டார். புதிய ஆலோசகராக நியமிக்கப்பட்ட நெக்கர், டர்கோட்டின் சீர்திருத்தங்களைத் தொடர

### முடித்திருத்தகமும் தேனீர் விடுதிகளும்

பிரான்சில் முடி திருத்தும் கடைகளும் தேனீர் விடுதிகளும் தகவல் தொடர்புக்கும் அரசியல் விவாதங்களுக்கும் மையங்களாகச் செயல்பட்டன. கல்விகற்றவர்களும் அறிவாளிகளுமான பெண்கள் தங்களது வீடுகளிலேயே முடி திருத்தகத்தை அமைத்திருந்தனர். இந்த முடிதிருத்தகங்களில் தத்துவஞானிகள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், சமூக சீர்த்திருத்தவாதிகள் ஆகியோரின் கருத்துகள் கலந்துரையாடப்பட்டன. இந்தக் கலந்துரையாடல்கள் புரட்சிகர சிந்தனைகளைத் தூண்டின. அது போல தேநீர் விடுதிகளும் சாதாரண மக்கள், பத்திரிகையாளர் போன்றோர் வழக்கமாக விவாதம் நடத்தும் மக்கள் விரும்பும் மையங்களாக மாறின. இந்த இடங்களில் புரட்சிகரமான நடவடிக்கைகள் திட்டமிடவும் சர்வாதிகாரம் விமர்சிக்கபடவும் செய்யப்பட்டன.

முயற்சித்தாலும் தேசிய சபையின் எதிர்ப்பாலும் இங்கிலாந்துடனான போர் காரணமாகவும் வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து அதிகாரத்தில் வந்த அரசரின் ஆலோசகர்களுக்கும் பிரான்சின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியவில்லை. எனவே அரசர் நெக்கரைத் திரும்பவும் அழைக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார்.

பிரெஞ்சு சிந்தனையாளர்களையும் அவர்களின் முக்கியமான கருத்துகளையும் பட்டியலிட்டு ஒரு விளக்கப்படம் தயாரிக்கவும்

## எஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டம்

18-ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் எதிர் கொண்ட கடுமையான நிதி நெருக்கடியைக் குறித்து நாம் விவாதித்தோம். இதை எதிர்கொள்ள புதிய வரிகளை விதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்காக நெக்கரின் ஆலோசனைப்படி பதினாறாம் லூயி பிரெஞ்சு பாராளுமன்றமாகிய எஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்ட முடிவு செய்தார். 175 வருடங்களுக்குப் பிறகு எஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்ட தீர்மானித்த போது அதன் அமைப்புத் தொடர்பாக விவாதங்கள் எழுந்தன. பிரெஞ்சு சமூகத்தைப் போல எஸ்டேட்ஸ் ஜெனரலும் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மூன்று எஸ்டேட்டுகளும் தனித்தனி அரங்குகளில் கூட்டத்தை நடத்தின.

பிரெஞ்சு மக்கள் தொகையில் ஒரு சிறிய சதவீதம் மட்டுமே இருந்த மதகுருக்களுக்கு பிரதிநிதி சபையில் 285 உறுப்பினர்கள் இருந்தனர். பிரெஞ்சு மக்கள் தொகையில் சுமார் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் மட்டுமே இருந்த பிரபுக்களுக்குப் பிரதிநிதி சபையில் 308 உறுப்பினர்கள் இருந்தனர். பெரும்பான்மை கொண்ட சாதாரண மக்களுக்குப் பிரதிநிதி சபையில் 621 உறுப்பினர்கள் இருந்தனர். ஒன்று மற்றும் இரண்டாம் எஸ்டேட்டுகளில் உறுப்பினர் உரிமை பரம்பரையாக இருந்தது. ஆனால் மூன்றாம் எஸ்டேட்டின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

ஒரு சபைக்கு ஒரு ஓட்டு என்பதே நடைமுறையிலிருந்த முறை. இதனை முதல் இரண்டு சபைகளும் ஆதரித்தன. ஒன்றாம், இரண்டாம் எஸ்டேட்டுகள் ஒன்றிணைந்தால் பெரும்பான்மை பெற்று அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்பதே இதற்குக் காரணமாகும்.

மூன்றாம் எஸ்டேட்டில் உள்ள எல்லா புதிய பிரதிநிதிகளும் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவினரின் குறைகளையும் தேவைகளையும் கொண்டு வந்தவர்களாக இருந்தனர். இருப்பினும் மன்னராக இருந்த பதினாறாம் லூயி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளைக் குறித்து மன்னருக்குப் போதிய அறிவு இல்லாததே இதற்கு முக்கிய காரணம்.

எஸ்டேட்ஸ் ஜெனரல் பிரெஞ்சு சமூகத்தின் அடையாளமாக இருந்தது. நிறுவுக.

## டென்னிஸ் கோர்ட் உறுதிமொழி

மூன்றாம் எஸ்டேட்டின் பிரதிநிதிகள் மூன்று சபைகளும் ஒன்றிணைந்து கூட வேண்டும் என்று கோரிக்கை செய்தாலும் முதல் இரண்டு சபைகளும் இதற்கு இணங்கவில்லை. இதைத் தொடர்ந்து, 1789 ஜூன் 17 – ஆம் நாள் மூன்றாம் எஸ்டேட்டின் பிரதிநிதிகள் தாங்களே பிரான்ஸின் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் என்று அறிவித்ததுடன் தங்கள் சபையைப் பிரெஞ்சு தேசிய சபை (French National Assembly) என்றும் அழைத்தனர்.



டென்னிஸ் கோர்ட் உறுதிமொழி

துணை சபைகளின் ஆதரவுடன் பதினாறாம் லூயி இந்தச் சபை கூடியிருந்த அரங்கத்தை அடைத்து இராணுவக் காவல் ஏற்படுத்தவும் செய்தார். ழாங்– சில்வியன் பெய்லி, அபே சைஸ், மிராபோ ஆகியோரின் தலைமையில் ஜூன் 20 அன்று அருகிலிருந்த டென்னிஸ் மைதானத்தில் மூன்றாம் எஸ்டேட்டின் பிரதிநிதிகள் கூடினர். ஒரு முறையான அரசியலமைப்பு உருவாக்கும் வரை தாங்கள் பிரிந்து செல்லமாட்டோம் என அறிவித்தனர். இது பிற்காலத்தில் 'டென்னிஸ் கோர்ட் உறுதிமொழி' (Tennis court oath) என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சம்பவமே பாடப்பகுதியின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய சபையின் இந்தக் கூட்டமே பிற்கால வரலாற்றில் 'டென்னிஸ் கோர்ட் அசெம்பிளி' (Tennis court assembly) என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

டென்னிஸ் கோர்ட் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு கையெழுத்துப் படிவம் தயார் செய்து வகுப்பில் ஒரு குறுநாடகம் வெளியிடவும்.

## பாஸ்டைலின் வீழ்ச்சியும் புரட்சியின் ஆரம்பமும்

பதினாறாம் லூயி மன்னர் தன்னுடைய ஆலோசகரான நெக்கரைப் பதவி நீக்கம் செய்து பாரீஸை விட்டு வெளியேறவும் உத்தரவிட்டுள்ளார் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவியது. ஆத்திரமடைந்த மக்கள் கூட்டம் பாரீஸ் நகரத்திலுள்ள தானியக் கிடங்குகளையும், ரொட்டிக் கடைகளையும் கையகப்படுத்தினர். ஆயுதங்களைச் சேகரித்து அவர்கள் 1789 ஜூலை 14 – ஆம் நாள் பூர்பன் சர்வாதிகாரத்தின் சின்னமாகயிருந்த பாரீஸிலுள்ள

பாஸ்டைலின் கோட்டையைத் தகர்த்தனர். சில மணிநேரங்களில் பாரீஸ் நகரத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

பாஸ்டைலின் கோட்டையின் வீழ்ச்சி பிரெஞ்சு புரட்சியின் ஆரம்பமாகக் கணக்கிடப்படுகிறது. பிரான்சின் கிராமப் பிரதேசங்களிலும் வன்முறை அரங்கேறியது. மக்களின் கோபத்திற்கு வரி வசூலிப்பவர்களும் ஆளாயினர். ஜனக்கூட்டத்திற்குப் பயந்த பதினாறாம் லூயி தேசிய சபை நிறைவேற்றிய சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தார்.

தேசிய சபை நிறைவேற்றிய சில சீர்திருத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது.
- பிரபுக்களின் சிறப்பு அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.
- கத்தோலிக்க சபைக்கு மக்கள் கொடுக்க வேண்டிய வரி நிறுத்தப்பட்டது.
- கூடுதலாகச் சுமத்தப்பட்ட வரிகள் ரத்து செய்யப்பட்டன.

## பெண்களும் பிரெஞ்சு புரட்சியும்

உணவு பற்றாக்குறையும் தேசிய சபையுடன் ஒத்துழைக்காத பதினாறாம் லூயியின் கொள்கைகளும் பெண்களைப் போராட்டத்திற்கு இறங்கத் தூண்டின. ஆயிரக்கணக்கான பெண்கள் துடைப்பம் உட்பட்ட அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களையும், வாள், ஈட்டி, துப்பாக்கி ஆகியவற்றையும் கைகளில் ஏந்திக் கொண்டு பூர்பன் மன்னர்களின் இல்லங்களான பாரீஸில் உள்ள வெர்செயில்ஸ் அரண்மனைக்கு அணிவகுத்துச் சென்றனர். அவர்களுடன் ஒரு பெரிய மக்கள் கூட்டம் இருந்தனர். மன்னரையும் குடும்பத்தினரையும் அவர்கள் வலுக்கட்டாயமாகப் பாரீஸுக்கு கொண்டு வந்தனர். வேறு வழியின்றி தேசிய சபையின் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதாகப் பதினாறாம் லூயி உறுதியளித்தார்.



விடை பெறல் வெர்செயில்ஸ் (Adieu, Versailles) பெண்கள், ராஜகுடும்ப உறுப்பினர்களைப் பாரீஸுக்குக் கொண்டு சென்ற அணிவகுப்புப் படம்

பிரான்சின் பிரபல நாடக ஆசிரியரும் பொதுநல ஆர்வலருமான ஒளிம் தே குஷ் புரட்சிக் காலத்தில் பெண்களின் உரிமைகளுக்காக வாதிட்ட ஒரு வலுவான பெண்குரலாக இருந்தார். பெண் மற்றும் பெண் குடிமக்களின் உரிமைகள் பிரகடனம்' [Declaration of the rights of woman and of the female citizen]என்ற புகழ்பெற்ற படைப்பில் ஆண்களுக்குக் கிடைத்த உரிமைகள் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் எனக் கோரினர்.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம அதிகாரமும் உரிமைகளும் உள்ள சமூகக் கட்டமைப்பிற்காக அவர் வாதாடினார். பெண் சமத்துவத்திற்காக வாதிட்ட இன்னொரு பெண்மணியே மாடம் ழாங் ரோலண்ட். பெண்களின் இந்த உரிமைப் போராட்டத்திற்குச் சில நன்மைகள் கிடைத்தன. சொத்துரிமை, விவாகரத்து பெறும் உரிமை ஆகியவை இவற்றில் சிலவாகும்.

### எதிர்ப்பின் சின்னம் ஆடை

பிரான்சின் உயர்குடியினர் பரம்பரையாக அணிந்திருந்தது ப்ரீச்சுகள் என்று அழைக்கப்படும் முழங்கால் வரையிலான ஒருவகையான கால்சட்டைகளாகும். உயர் குடியினரோடு உள்ள எதிர்ப்பின் பகுதியாகத் தொழிலாளர்களும் விவசாயிகளும் கால்பாதம் வரை நீண்ட பான்றலோன் (Pantalon) என்று அழைக்கப்படும் நீண்ட கால்சட்டைகளை அணியத் தொடங்கினர். அவர்கள் சான்ஸ்குலோட்டுகள் (Sansculottes) என அழைக்கப்பட்டனர். புரட்சியாளர்களின் சின்னமாகப் பான்டலோன் மாறியது. அதிகமான மக்கள் பான்டலோன் அணியத் தொடங்கியது மக்களிடையே புரட்சி பிரபலமடைந்தது என்பதற்கு ஆதாரமாகும்.

ஃபிரிஜியன் தொப்பியும் புரட்சியின் அடையாளமாக இருந்தது. அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்பதைக் குறிப்பதற்காகவே சிவப்பு நிறமுள்ள ஃபிரிஜியன் தொப்பியை அணிந்திருந்தனர்.



சான்ஸ்குலோட் தம்பதியினர்



ஃபிரிஜியன் தொப்பி

## புதிய அரசியலமைப்பு

“ சுதந்திரமும் உரிமைகளில் சமத்துவமுள்ளவராகவே மனிதர்கள் பிறக்கின்றனர், வாழ்கின்றனர். ”

மேலே நீங்கள் வாசித்தது தேசியசபை பிரான்சுக்காகத் தயார் செய்த அரசியலமைப்பின் முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ள மனித உரிமை பிரகடனத்தின் ஒரு பகுதியாகும். இந்த அரசியலமைப்பின் முன்னுரையிலுள்ள பிரெஞ்சு மனித உரிமை பிரகடனம் (Declaration of the Rights of Man and of the Citizen) பிரெஞ்சு புரட்சியின் முக்கிய விளைவு

ஆகும். 1789 – இல் நடந்த மனித உரிமை பிரகடனத்தின் முக்கிய கருத்துகள் எவை என்பதைக் காண்போம்.




- சுதந்திரமாகப் பிறக்கும் மனிதன் சம உரிமைகளோடு சுதந்திரமாக வாழ்கிறான்.
- அனைத்து அரசியல் கூட்டமைப்பிற்கும் உள்ள நோக்கம் மனிதனின் இயற்கையானதும் இன்றியமையாததுமான உரிமைகளைப் பாதுகாப்பது என்பதாகும். அவை சுதந்திரம், சொத்து , பாதுகாப்பு, அடக்குமுறைகளை எதிர்த்தல் ஆகியவற்றிற்கான உரிமைகளாகும்.
- அனைத்து அதிகாரங்களும் நாட்டிற்கே உரிமையானதாகும். மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்காத செயல்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரமே சுதந்திரத்தில் அடங்கியுள்ளது.
- சமூகத்தில் தீங்கு விளைவிக்கும் செயல்களை விலக்குவதற்கான உரிமை மட்டுமே சட்டத்திற்கு உள்ளது.

பிரெஞ்சு தேசியசபை பிரான்சின் சமூக பொருளாதார அரசியல் பிரிவில் பல சீர்திருத்தங்களைச் செயல்படுத்தின. அவற்றில் முக்கியமானவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- நாடு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- அசைனாட்' (Assignat) என்ற பெயரில் புதிய காகித நாணயம் வெளியிடப்பட்டது.
- மதத் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.
- முழுமையான மதசகிப்புத்தன்மை அறிவிக்கப்பட்டது.
- மதகுருக்கள் அரசாங்கத்தின் ஊதியம் பெறுபவர்களாக மாறினர்.

**'அசைனாட்' (Assignat)**




1789-இல் பிரான்சில் வெளியிடப்பட்ட காகித நாணயமே அசைனாட் ஆகும். பிரெஞ்சு பொருளாதார அமைப்பை நிலைப்படுத்தவும் தேசியக் கடனை அடைப்பதற்கான பத்திரமாகவும் பணமாகவும் இதனைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டன. காலப்போக்கில் அரசாங்கம் அதன் செலவுகளை ஈடுகட்ட அதிக அளவில் அசைனாடுகளை வெளியிடத் தொடங்கின. இது பெருமளவில் பணவீக்கத்திற்கும் நாணயத்தின் விரைவான மதிப்பிழப்பிற்கும் காரணமானது. 1796 – ஆம் வருடம் அசைனாட்டின் மதிப்பு குறைந்தது.

மனித உரிமை விளம்பரம் தேசிய சபையின் சீர்திருத்தங்களில் தாக்கம் செலுத்தியது எவ்வாறு என்பதை விவாதித்து குறிப்பு தயார் செய்யவும்.

## பயங்கரவாதமும் செப்டம்பர் படுகொலையும்

1792-இல் தேசிய சபைக்குப் பதிலாகத் தேசிய மாநாடு (நேஷனல் கன்வென்ஷன்) என்ற புதிய ஆட்சிக்குழு நடைமுறைக்கு வந்தது. தேசிய மாநாடு பிரான்சை ஒரு குடியரசாக அறிவித்ததுடன் பதினாறாம் லூயிக்கு மரணதண்டனை விதிக்கவும் செய்தது. ஒரு குடியரசாக மாறிய பிரான்சின் அதிகாரக் கட்டுப்பாட்டை ஜாக்கோபின்கள் கைப்பற்றினர். ஐரோப்பாவின் பெரும் சக்திகளான பிரிட்டனும், ஆஸ்திரியாவும், ரஷ்யாவும், பிரான்சின் மீது படையெடுத்தபோது அந்தச் சூழலைச் சமாளிக்க 'பொது பாதுகாப்புக் குழு' (Committee of Public Safety) உருவாக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைமையில் கொடூரமான ஆட்சி பாரீஸில் அரங்கேறியது. பாரீஸ் நகரத்தின் ஆட்சி டான்டன், ஹெபர்ட், மராட், ரோபஸ்பியர் ஆகியோரின் கைகளில் இருந்தன.

பிரபுக்கள், மதகுருக்கள், அரசனை ஆதரிப்பவர்கள் என்று ஆயிரக்கணக்கான மக்களைத் தினந்தோறும் தேசத்துரோகிகள் என்று முத்திரை குத்தி அன்றாடம் சிறைச்சாலையில் அடைத்தனர். சிறைச்சாலைகள் நிரம்பிய போது நெருக்கடியைக் குறைப்பதற்காகச் சுமார் 1500 பேரைப் பாரீஸ் தெருக்களில் வைத்துக் கொன்றனர். இதுவே மிகப் பிரபலமான 'செப்டம்பர் படுகொலை' (September Massacre) என்று அழைக்கப்படுகிறது. மக்களைக் கொல்வதற்காக உருவாக்கப்பட்ட தனிப்பட்ட இயந்திரமே கில்லட்டின். கொடூரமான ஆட்சிக் காலத்தில் பல்லாயிரம் பேரின் மரணத்திற்குக் காரணமாக இருந்த குடியரசு நாடுகளின் தலைவர்களும் பின்னர் அதே முறையில் கில்லட்டின் மூலமாகக் கொல்லப்பட்டனர்.

புரட்சியாளர்கள் நடைமுறையிலிருந்த நாட்காட்டியை மாற்றிவிட்டு புதிய புரட்சி நாட்காட்டியை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர்.

### ஜாக்கோபினுகளும் ஜிரோண்டிஸ்ட்களும்
### (Jacobins and Girondists)

அக்காலத்தில் பிரெஞ்சு அரசியலில் ஜாக்கோபின்கள் அதிக செல்வாக்குச் செலுத்தினர். பிரெஞ்சு புரட்சிக் காலத்தில் உயர்ந்து வந்த ஓர் அரசியல், சமூகப் பிரிவினரே ஜாக்கோபின் என்று அழைக்கப்பட்ட குழுவாகும். ஜாக்கோபின் கான்வென்டில்தான் இவர்கள் முதலில் கூடிச் சேர்ந்தனர். இதனால்தான் இவர்களை ஜாக்கோபினுகள் என்றனர். ரோபஸ்பியர் இந்தக் குழுவின் ஒரு முக்கியமான தலைவர் ஆவார். அந்தக்கால பிரெஞ்சு அரசியலில் மிகப்பெரிய அளவில் தாக்கத்தை செலுத்தியவர்களே ஜாக்கோபினுகள்.

பிரெஞ்சு புரட்சியில் பங்கு பெற்ற மற்றொரு முக்கியமான குழுவினர் ஜிரோண்டிஸ்டுகள் ஆவர். இவர்களில் சிலர் தென்மேற்கு பிரான்சின் ஜிரோண்ட் பகுதியில் இருந்து வந்த தேசிய சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். ஜாக்கோபின்களைப் போல் அல்லாமல் இவர்கள் மிதவாத தன்மைகளை ஏற்றுக் கொண்டனர். இவர்கள் நில உடைமையாளர்களும், வணிகர்களுமாகிய உயர் வகுப்பினரின் பிரதிநிதிகளாக இருந்தார்கள்.



ரோபஸ்பியர்

## புரட்சி நாட்காட்டி

பிரான்சில் நடைமுறையிலிருந்த கிரகோரியன் நாட்காட்டிக்குப் பதிலாக 1793 அக்டோபரில் நடைமுறைக்கு வந்த நாட்காட்டி புரட்சி நாட்காட்டி என்று அழைக்கப்பட்டது. இந்தப் புகழ்வாய்ந்த நாட்காட்டி துவங்குவது பிரான்ஸ் குடியரசாக மாறிய 1792 செப்டம்பர் 22–ஆம் நாளாகும். இந்த நாட்காட்டியில் ஏழு நாட்கள் உள்ள வாரங்களுக்குப் பதிலாகப் பத்துநாட்கள் வீதம் உள்ள மூன்று தசாப்தங்கள் (Decades) காணப்பட்டிருந்தன. இந்த நாட்காட்டி முழுமையாக ஒரு மதசார்பற்ற நாட்காட்டியாக இருந்தது. புரட்சியின் பன்னிரெண்டாம் வருடம் வரை (1801) இந்தக் காலண்டர் பிரான்சில் நடைமுறையில் இருந்தது.

## கில்லட்டின் (Guillotine)



பிரெஞ்சு புரட்சியின் போது (1789-1799) அதிகமானவர்களை விரைவாகச் சிரச்சேதம் செய்து கொல்வதற்காக உபயோகிக்கப்பட்ட கொடூரமான கருவியே கில்லட்டின். இந்த யோசனையைக் கூறிய டாக்டர் ஜோசப் இக்னஸ் கில்லட்டினின் பெயரிலேயே இது அழைக்கப்படுகிறது. பதினாறாம் லூயி மன்னனையும் ராணியையும் மேரி அன்டோயினட் ராணியையும் கில்லட்டினைப் பயன்படுத்தித்தான் கொலை செய்தனர். கொடூரமான ஆட்சியின் போது புரட்சித் தலைவராக இருந்த ரோபஸ்பியரும் கில்லட்டினால் கொல்லப்பட்டார்.

### புதிய அரசியலமைப்பின் வருகை

பயங்கரவாத ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு 1795–இல் பிரான்சில் ஒரு புதிய நிர்வாக அமைப்பு நடைமுறைக்கு வந்தது. அதன்படி ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவே ஆட்சியை நிர்வகித்தது. இந்த ஆட்சி அமைப்பு டையரக்டரி என்று அழைக்கப்பட்டது. ஊழலும் தவறான நிர்வாகமும் டையரக்டரியின் வீழ்ச்சிக்குக் காரணமானது. மக்கள் மேலும் வறுமையை நோக்கிச் சென்றதோடு அவர்களுக்குப் புதிய அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கையும் இழக்க நேரிட்டது.

### பிரெஞ்சு புரட்சியின் பின் விளைவுகள்

பிரெஞ்சு புரட்சியின் மிகவும் வெளிப்படையான விளைவு பிரான்சில் நிலமானியமுறையின் வீழ்ச்சியாகும். பழைய ஆட்சியில் இருந்த சட்டங்கள் புரட்சியினால் மறைந்து போயின. திருச்சபைகளின் கீழ் இருந்த நிலங்கள் நடுத்தரக்காரர்களின் கீழ்வந்தன. பிரபுக்களின் நிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு இருந்த அனைத்துவிதமான சலுகைகளும் ரத்துச் செய்யப்பட்டன. ஒரே மாதிரியான அளவீட்டு முறை அமைப்பு (மெட்ரிக் சிஸ்டம்) நடைமுறைப்படுத்தப்பட்டதால் அளவீடுகளில் இருந்த துல்லியமின்மை முடிவுக்கு வந்தது.

நவீன தேசியவாதம் என்ற கருத்து பிரெஞ்சு புரட்சியின் ஒரு நன்கொடை ஆகும். ஒரு நாட்டின் நிலைபேறு அரச பரம்பரை வழியாக இல்லாமல் தேசிய பண்புகளுடன் வெளிப்படத் தொடங்கியது பிரெஞ்சு புரட்சியின் வழியாகும். நாடு என்ற கருத்து அதன் முழுமையான பொருளில் நடைமுறைக்கு வந்ததும் பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னராகும். பிரான்ஸ் என்பது ஒரு நிலப்பகுதி மட்டுமல்ல ஒட்டுமொத்த பிரெஞ்சு மக்களும் சேர்ந்ததுதான் என்ற கருத்து இத்துடன் அறிவிக்கப்பட்டது. தேசியவாதத்துடன் வளர்ந்த மற்றொரு கொள்கை மக்களாட்சி முறையாகும். பிரெஞ்சு புரட்சிக்குப் பிறகுதான் மக்களின் இறையாண்மை என்ற ரூஸோவின் கருத்தை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சிக்கு அடித்தளம் உருவானது. பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் நடந்த தேசிய சுதந்திரத்திற்கான போராட்டங்களிலும் பிரெஞ்சு புரட்சி தாக்கத்தை ஏற்படுத்தின.

பிரெஞ்சு புரட்சியின் பின் விளைவுகளைப் பற்றி விவாதித்துக் குறிப்பு எழுதவும்.

## நெப்போலியன்

**“ பிரான்சின் கிரீடம் சாக்கடையில் கிடப்பதை நான் கண்டேன். நான் அதை என் வாளால் எடுத்து சுத்தம் செய்து என் தலையில் வைத்தேன். ”**


நெப்போலியன் போனபார்ட்

பிரான்சில் நடைமுறையிலிருந்த டையரக்டரியை அகற்றி ஆட்சியைக் கைப்பற்றிய நெப்போலியன் போனபார்ட்டின் வார்த்தைகளே இவை. நெப்போலியனின் இந்த வார்த்தைகளிலிருந்து என்னென்ன விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியும்? அராஜகத்திற்குள் தள்ளப்பட்ட பிரெஞ்சு சமூகத்தையும் தன்னுடைய திறமையினால் பிரான்சின் அதிகாரத்தையும் கைப்பற்றியதையுமே நெப்போலியனின் இந்த வார்த்தைகள் தெளிவாக்குகின்றன. நெப்போலியன் பிரெஞ்சு இராணுவத்தில் பிரிகேடியர் ஜெனரலாக இருந்தார். டையரக்டரிக்குப் பதிலாக மூன்று பிரதிநிதிகள் அடங்கும் ஒரு புதிய அமைப்பை நெப்போலியன் கொண்டு வந்தார். அதன் முதல் பிரதிநிதியாக நெப்போலியன் இருந்தார். சில நாட்களிலேயே நெப்போலியன் தன்னைப் பிரான்சின் பேரரசராக மாற்றி அதிகாரத்தில் வந்தார். அவர் பிரான்சில் நடைமுறைப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் எவை எல்லாம் என்பதைப் பார்ப்போம்.

| சீர்திருத்தங்கள் | மாற்றங்கள் |
|---|---|
| சட்ட சீர்திருத்தங்கள் | நெப்போலியனின் சட்டத்தொகுப்பு (Napoleonic Code) நிலமானியமுறையை முடிவுக்கு கொண்டு வரவும் சமத்துவத்தையும் மத சுதந்திரத்தையும் ஏற்றுக்கொள்ளவும் செய்தது. |
| சமய உடன்பாடு (கன்கார்டற்) நெப்போலியனும் போப்பும் இணைந்து உருவாக்கிய ஒப்பந்தம் | போப்புடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி கத்தோலிக்க ஆராதனை முறைமை திருத்தி அமைக்கப்பட்டது. வேறு மதப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு முழு மதசுதந்திரம் அனுமதிக்கப்பட்டது. |
| கல்விச் சீர்திருத்தங்கள் | கல்வியை உலகளாவியதாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. லிசேய் (Lycee) என்ற பெயரில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள கல்விநிலையங்களை நிறுவினார். அரசாங்க பணிகளுக்கும் இராணுவத்திற்கும் தேவையான கல்வியாளர்களை உருவாக்குவதே இதன் லட்சியமாகும். யூனிவர்சிட்டி ஆப் பிரான்ஸ் என்ற பெயரில் ஒரு தேசிய பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பின் வழி கல்வித்துறை கட்டுப்படுத்தப்பட்டது. |
| பொருளாதார சீர்திருத்தங்கள் | பாங்க் ஆப் பிரான்ஸ் வங்கியை நிறுவி ஒரே மாதிரியான நாணய முறையை நடைமுறைப்படுத்தினார். |
| இராணுவ சீர்திருத்தங்கள் | இராணுவத்தைப் பல படைப்பிரிவுகளாக மறு சீரமைப்பு செய்தார். |

நெப்போலியனின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் நவீன பிரான்சின் உருவாக்கத்திற்கு அடித்தளம் அமைத்தன. இந்தக் கூற்றைக் கலந்துரையாடிக் குறிப்பு தயாரிக்கவும்.

பிரான்சினுடைய எதிரிகளை அழிக்கும் நோக்கத்துடன் நெப்போலியன் பல போர்களை நடத்தினார். ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளை அவர் போரில் தோற்கடித்தார்.

நெப்போலியனின் முக்கிய எதிரி பிரிட்டனாக இருந்தது. ஒரு சிறந்த கடற்படை சக்தியான பிரிட்டனை நேரடியாக அடிபணியச் செய்ய முடியாது என்றறிந்த நெப்போலியன் பிரிட்டனைப் பொருளாதார ரீதியாக அழிக்கும் திட்டங்களை மேற்கொண்டார். இதற்காக வகுக்கப்பட்ட திட்டமே 'கான்டினென்டல் முறை'. இதன்படி பிரான்சின் கட்டுப்பாட்டில் உள்ள நாடுகள் அல்லது பிரான்சுடன் நட்புறவு கொண்ட நாடுகள் பிரிட்டனுடன் வியாபாரம் செய்ய தடை செய்யப்பட்டது. இதில் முழு வெற்றியைப் பெற நெப்போலியனுக்கு முடியவில்லை. அதுவுமல்லாமல் பிரிட்டனோடு தொடர்ச்சியான போர்களுக்கும் இது வழி வகுத்தது. 1815 – இல் நடைபெற்ற வாட்டர் லூ போரில் நெப்போலியனைப் பிரிட்டன் தோற்கடித்து இறுதி வெற்றியைப் பெற்றது.




நிலப்படம் 2.2

நிலப்படம் 2.2 ஐ உற்றுநோக்கி நெப்போலியன் ஆதிக்கம் செலுத்திய பகுதிகளைக் கண்டறிந்து பட்டியலிடவும்.

## ஐரோப்பாவின் நிலப்படம் மாற்றி வரைக்கப்படுகிறது.

நெப்போலியனின் தோல்விக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள் 1815 –இல் ஆஸ்திரியாவின் வியன்னாவில் கூட்டம் கூடி சில முக்கிய தீர்மானங்களை எடுத்தன. இது வியன்னா மாநாடு என்று அழைக்கப்படுகிறது. இந்த மாநாட்டிற்கு ஆஸ்திரிய சான்சிலராயிருந்த மெட்டர்னிச் தலைமை தாங்கினார். வியன்னா மாநாட்டுடன் ஐரோப்பாவில் பிரெஞ்சு மேலாதிக்கம் முடிவுக்கு வந்தது.



மெட்டர்னிச்

## வியன்னா மாநாட்டின் முக்கிய தீர்மானங்கள்

- ஐரோப்பிய நாடுகளில் பிரெஞ்சு புரட்சிக்கு முன்னிருந்த மன்னராட்சியை மீண்டும் கொண்டு வருதல்.
- பிரான்சில் பூர்பன் அரசாட்சியை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்
- பிரிட்டனின் கடற்படை மேலாதிக்கத்தையும் ரஷ்யாவின் கிழக்கு ஐரோப்பிய ஆதிக்கத்தையும் அங்கீகரித்தல்.
- மத்திய ஐரோப்பாவில் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை அங்கீகரித்தல்.

### சுதந்திர மரம் (Tree of Liberty)



அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் 'சுதந்திர மரம்' ஓர் அலங்கார அடையாளச் சொல்லாக இருந்தது. பிரான்சில் இது முழுமையாக நடைமுறைக்கு வந்தது. பிரெஞ்சு புரட்சிக் காலத்தில் பொது இடங்களில் சுதந்திரத்தின் அடையாளமாக மரங்களை நட்டு அதில் விடுதலையின் அடையாளமாகக் கருதப்பட்ட, சிவப்பு ஃபிரிஜீயன் தொப்பிகள் (Red Phrygian Cap) தொங்கவிடப்பட்டன. ஆங்கிலேயர்களுடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டிருந்த மைசூர் ஆட்சியாளரான திப்பு சுல்தான் தனது தலைநகரமான ஸ்ரீரங்கபட்டணத்தில் சுதந்திர மரத்தை நட்டார். சுதந்திர மரத்தை நட்டதன் மூலமாகத் திப்பு சுல்தான் பிரெஞ்சுப் புரட்சிக் கொள்கைகள் மீதான தனது மதிப்பையும் ஆங்கிலேயர் மீதான விரோதத்தையும் வெளிப்படுத்தினார்.

நவீன உலக வரலாற்றில் தாக்கத்தை ஏற்படுத்திய மிகவும் முக்கியமான புரட்சியாகும் பிரெஞ்சு புரட்சி. இது பிரான்சில் சாதாரண மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் சேர்ந்து தங்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக மேற்கொண்ட முன்னேற்றமாகும். பிரெஞ்சு புரட்சியில் முன்வைத்த கருத்துகள் பிற்காலத்தில் உலகம் முழுவதிலும் தாக்கத்தைச் செலுத்தின.

## தொடர் செயல்பாடுகள்

- பிரெஞ்சு புரட்சியின் முக்கிய நிகழ்வுகளை விளக்கங்களுடன் உட்படுத்தி ஒரு டிஜிட்டல் விளக்கக் காட்சிப்படம் தயாரிக்கவும்.
- பிரான்சின் மனித உரிமை பிரகடனம் பிற்கால சுதந்திரப் போராட்டங்களில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை மதிப்பிடவும்.
- பிரெஞ்சு புரட்சியின் காலக்கோடு, புரட்சியின் ஒவ்வொரு கால கட்டத்திலுமுள்ள தலைவர்கள், அவர்களின் கருத்துகள் போன்றவற்றை உள்ளடக்கிய டிஜிட்டல் விளக்கக் காட்சி தயாராக்கி வகுப்பில் காண்பிக்கவும்.



# 3

# சமூகப் பகுப்பாய்வு சமூகவியல் கற்பனையின் வாயிலாக




மழைக்கால அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள ஆசிரியர் கூறியதற்கு ஏற்ப அனு தயார் செய்த அனுபவக்குறிப்பின் ஒரு பகுதியே இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அனுவும் குடும்பமும் எதிர்கொள்ளும் என்னென்ன பிரச்சினைகள் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன?

- மழைக்காலத்தில் ஏற்படும் வேலை பற்றாக்குறை
- 
- 




அனு தன்னுடைய பிரச்சினைகளுக்குக் காரணம் என்ன என்று யோசிக்கிறாள்? அனு, தனது மற்றும் குடும்பத்தின் பிரச்சினைகளுக்குக் காரணம் பணப்பற்றாக்குறை மட்டும் தான் எனக் கண்டடைகிறாள். அனு, அவள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குப் பின்னால் தனிப்பட்ட காரணங்கள் இருப்பதாக நினைக்கிறாள். அனு ஏன் இவ்வாறு யோசிக்க வேண்டும்?

தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிய பலரும் பொதுவாகக் காணப்படுகின்ற நிகழ்வுகளையே சார்ந்திருக்கின்றனர். தனிநபர்கள் தங்கள் கடந்த கால அனுபவங்களின் பின்னணியில் பிரச்சினைகளின் காரணங்களைக் கண்டறிய முயற்சிக்கிறார்கள். சிலர் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான காரணங்களைப் பிறரோடுள்ள தொடர்புகளின் மூலம் கிடைக்கும் தகவல்களின் மூலமும் அனுபவங்கள் வாயிலாகவும் கண்டறிகிறார்கள். சிலர் சமூகமயமாக்கல் (Socialisation) செயல்பாட்டின் வாயிலாகப் பெற்றுக்கொண்ட அறிவையும் பழக்கவழக்கங்களையும் பயன்படுத்தியே பொதுவாக தனிப்பட்ட பிரச்சினைகளை அணுகுகிறார்கள். தனி நபர்கள் பெரும்பாலும், இத்தகைய பொது அறிவு ஞானத்தின் (Commonsense Knowledge) அடிப்படையிலேயே தங்கள் பிரச்சனைகளுக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கிறார்கள்.

## பொது அறிவு ஞானம் (Commonsense Knowledge)

தனி நபர்கள் தங்கள் தனிப்பட்ட அனுபவங்கள், சமூக ஈடுபாடுகள் மற்றும் கலாச்சார அறிவுகள் போன்றவற்றின் வாயிலாக, உலகத்தைக் குறித்துப்

பெறுகின்ற அடிப்படையான அன்றாட புரிதல்களே பொது அறிவு ஞானம். இந்த அறிவுகள் முறையான அறிவுகள் அல்ல, மாறாக அனுமானங்களாகவோ, அன்றாட நடைமுறை அறிவாகவோ இருக்கலாம். "சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறது" என்ற புரிதல் ஒரு நபரின் அன்றாட இயற்கை நிகழ்வைக் குறித்த அறிவாகும். அதுபோன்று, "நெருப்பில் தொட்டால் சுடும்" என்ற அறிவு நெருப்பின் ஆபத்தைக் குறித்துள்ள அடிப்படை அறிவாகும். இந்த அறிவுகள் அனுபவம், உற்று நோக்கல் மற்றும் சமூக உறவுகள் வாயிலாகக் கற்றுக் கொள்ளப்படுகின்றன.

## பொது அறிவு ஞானமும் சமூகப் பகுப்பாய்வும் (Commonsense Knowledge and Social Analysis)

பொது அறிவு ஞானத்தைத் தனி நபர்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைக் குறித்த அன்றாட உணர்வுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் அறிவுகள் வாயிலாகப் பெறுகிறார்கள் என்பதைப் பார்த்தீர்கள் அல்லவா. விதிமுறைகள் (Norms), பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே இது உருவாகிறது. பெரும்பாலும் இதற்குப் பின்னால் உள்ள பிற உண்மைகள் ஆராயப்படுவதில்லை. அனுவும் அவளது குடும்பத்தினரும் கடன்சுமை (Indebtedness) என்ற சமூகப் பிரச்சினையே எதிர்கொள்கின்றனர். இந்தப் சமூகப் பிரச்சினையைப் பொது அறிவு ஞானத்தின் வாயிலாக மட்டும் பகுப்பாய்வு செய்தால் இதன் பின்னால் உள்ள உண்மையான காரணங்களை முழுமையாகக் கண்டறிய இயலுமா?

ஒரு நபர் வறுமையை அனுபவிப்பதற்கான காரணங்கள் என்னென்ன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த நபரின் சோம்பல் மற்றும் வேலை செய்வதற்கான ஆர்வமின்மையுமே வறுமைக்குக் காரணம் எனப் பிறர் சிந்திக்கலாம். தனிப்பட்ட தோல்வி மட்டுமே வறுமைக்குக் காரணமெனப் பலரும் நினைக்கிறார்கள். இத்தகைய அறிவுகள் பொது அறிவு ஞானத்தின் வாயிலாகவே உருவாகிறது.

### சமூகப் பிரச்சினை (Social Problem)

சமூகப் பிரச்சினை என்பது சமூகத்தில் உள்ள பெரும்பகுதி மக்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சினை அல்லது நிலையாகும். ஒரு நபரையோ அல்லது சில நபர்களையோ பாதிக்கும் பிரச்சினைகளைச் சமூகப் பிரச்சினைகளாகக் கருதப்படுவதில்லை. சமூகப் பிரச்சினையைச் சமூகத்திற்கு விரும்பத்தகாததாகவோ தீங்கு விளைவிப்பதாகவோ கருதுகின்றனர். வறுமை, சமத்துவமின்மை, பாகுபாடு, சுற்றுச்சூழல் மாசுபாடு ஆகியவைகளெல்லாம் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

பொதுப் அறிவு ஞானம் எவ்வாறெல்லாம் உருவாகின்றது?

- தனிப்பட்ட அனுபவங்களின் வாயிலாக
- பொது உற்றுநோக்கல்களின் வாயிலாக
- 
- 

பொது அறிவு ஞானம் மூலம் கிடைக்கின்ற அறிவை எப்போதும் நம்முடைய பிரச்சினைக்குரிய தீர்வாகக் கருத முடியுமா? ஏன்?

சமூகத்தின் சில இடங்களிலாவது காணப்படும் பொது அறிவு ஞானம் சார்ந்த சில கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. *காலநிலை மாற்றம் இயற்கையாகவே நிகழ்கிறது. மனித செயல்களுக்கு இதில் பங்கில்லை.*

2. *அதிக நேரம் கற்றால் மட்டுமே அதிக மதிப்பெண் பெற முடியும்.*

3. *இளமைப்பருவத்தினர் வேறுபட்ட கருத்துடையவர்களும் எப்போதும் பொறுப்பற்றவர்களுமாவர்.*

4. *வயிறு நிரம்ப உண்பது உடல் நலத்திற்கு நல்லது.*

5. *தற்காலிகமான வீடுகள் வழங்குவதின் வாயிலாக வாழிடமின்மைக்குத் தீர்வு காணலாம்.*

இக்கூற்றுகள் முற்றிலும் உண்மையானதா என நாம் பகுப்பாய்வு செய்து பார்க்கலாம்.

1. காலநிலை மாற்றத்தில் மனிதனுக்குப் பங்கில்லை என்ற கூற்றைக் கவனியுங்கள். காலநிலை மாற்றத்தினால் புவியில் என்னென்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றன?

- புவி வெப்பமடைதல்
-
-
-

புவி வெப்பமடைதலுக்கு மனிதர்களின் என்னென்ன செயல்கள் காரணமாகின்றன?

- நெகிழியை எரித்தல்
-
-
-

இவற்றை உற்றுப் பார்க்கும் போது காலநிலை மாற்றத்திற்கும், புவி வெப்பமடைதலுக்கும் பின்னால் மனித செயல்பாடுகள் இருப்பதைக் காணமுடியும். அதனால் காலநிலை மாற்றம் பற்றிய கூற்று பொது அறிவு ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பதை அறியலாம். இவ்வாறு பொது அறிவு ஞானத்தின் வழியாகக் கிடைக்கின்ற அறிவுகள் பெரும்பாலும் முழுமையானதல்ல.

2 அதிக நேரம் கற்றால் மட்டுமே அதிக மதிப்பெண் பெற முடியும் என்ற கூற்றைக் கவனிக்கவும். இது அனைவருக்கும் ஒரே மாதிரியா? தனிப்பட்ட கற்றல்முறைகளும் கற்றல் செயல்களும் கற்றலில் தாக்கம் செலுத்துமல்லவா? கற்றலில் அதிக நேரம் செலவிடுவதினால் மட்டும் கற்றல் சரியாக நடைபெறுவதில்லை. கல்வியில் சிறந்து விளங்க இத்துடன் என்னென்ன செயல்கள் செய்யலாம்?

- குழுவாக சேர்ந்து கற்றுக் கொள்ளலாம்.
- குறிப்பிட்ட இடைவேளையும் ஓய்வையும் எடுத்துக்கொண்டுக் கற்றுக் கொள்ளலாம்.
-

எனவே, அதிகநேரம் கற்றால் மட்டுமே உயர்ந்த மதிப்பெண்கள் பெற முடியும் என்ற இந்தக் கூற்று வெறும் ஊகங்கள் மற்றும் பழக்க வழக்கங்களிலிருந்து பெற்றுக்கொண்ட பொது அறிவு ஞானமாகும். எனவே, பொது அறிவு ஞானம் ஊகங்களையும் பழக்கவழக்கங்களையும் சார்ந்து காணப்படுகிறது.

3 குமரப்பருவத்தினர் எப்போதும் வேறுபட்ட கருத்துக்களுடையவர்களாகவும் பொறுப்பற்றவர்களாகவும் இருப்பார்கள் என்பது ஒரு பொதுவான நம்பிக்கை. இத்தகைய பொதுவான நம்பிக்கைகளையோ கருத்துகளையோ தான் பொதுத்தன்மை (Stereotype) என்ற சொல்லின் பொருள் குறிக்கிறது. இவ்வாறு உற்றுப் பார்க்கும்போது, இது பொதுத்தன்மையைச் சார்ந்த கூற்று என்பதைக் காணலாம். இந்தப் பொதுத்தன்மை அனைத்துக் குமரப்பருவத்தினரும் சட்டங்களை மதிக்காதவர்களென்றும் பொறுப்பற்றவர்கள் என்ற தவறான கருத்தை உருவாக்குகின்றன. உண்மையில் இந்தக் குமரப் பருவத்தினர் பன்முகத் தன்மைகொண்ட ஒரு பிரிவாகும். பலரும் பொறுப்புணர்வும் ஒன்றுக்கொன்று மரியாதை கொடுப்பவர்களாகவும் இருப்பதைக் காணலாம். ஆனால் இத்தகைய பொதுத்தன்மையின் அடிப்படையிலான கூற்றுகள் குமரப் பருவத்தினரின் மேல் உள்ள நம்பிக்கையின்மைக்கு வழிவகுக்கிறது. மேலும், இது அவர்களின் நடத்தையைக் குறித்த தவறான ஊகங்களுக்கும் காரணமாகிறது. இத்தகைய பொது அறிவு ஞானம் பெரும்பாலும் பொதுத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுகிறது.

4 வயிறு நிரம்ப உண்பது ஆரோக்கியத்திற்கு நல்லது என்ற கூற்று பொது அறிவு ஞானத்தின் பகுதியாகும். இத்தகைய கூற்றுகள், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தைக் குறித்த சரியான புரிதல் இல்லாமல் தினசரி உற்று நோக்கலை மட்டும் அடிப்படையாகக் கொண்டு உருவாகின்றன. இவ்வாறு, ஒரு கருத்தைக் குறித்த ஓரளவு புரிதலை மட்டுமே பொது அறிவு ஞானம் அளிக்கிறது. பொது அறிவு ஞானம் பெரும்பாலும், அறிவியல் பூர்வமான உற்றுநோக்கல் மூலமாகவோ கற்றல்களின் அடிப்படையிலோ உருவாவது இல்லை.

5. வாழிடமின்மை என்ற பிரச்சினையைப் பொது அறிவு ஞானத்தின் வாயிலாக அணுகவும். இது ஒரு தனிப்பட்ட விருப்பம் (Personal Choice) மற்றும் நிலையான வாழிடம் அமைக்க முயற்சிக்காததன் வாயிலாக ஏற்பட்ட பிரச்சினை எனச் சிலர் நினைக்கலாம். அவ்வாறு நினைக்கிறவர்கள் தற்காலிகப் பாதுகாப்பு, வாழிடங்கள் அல்லது தொழில் பயிற்சி போன்றவற்றை அளித்து இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு காணலாம் என்று நினைக்கலாம். ஆனால், வாழிடமின்மை என்ற பிரச்சினைக்குப் பின்னால் வேறு காரணங்கள் இல்லையா. அவை எவை?

- பொருளாதார நிலையற்ற தன்மை
- வேலையின்மை
- 
- 

பொது அறிவு ஞானம் பெரும்பாலும், பிரச்சினைகளின் உண்மையான காரணங்களை முழுமையாகக் கண்டறிய தவறி விடுகிறது. மேற்குறிப்பிட்ட ஐந்து கூற்றுகளிலும் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் சிக்கலான சமூகப் பிரச்சினைகளுடன் தொடர்புடையவை என்பதைக் காணலாம். பொது அறிவு ஞானத்தால் தனிப்பட்ட பிரச்சினைகள் அல்லது சிக்கலான சமூகப் பிரச்சினைகளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது.




பொது அறிவு ஞானத்திற்கு மேலும் பல எடுத்துக்காட்டுகளைக் கண்டறிந்து அதன் வாயிலாகப் பெறுகின்ற அறிவுகளின் வரம்புகளைக் குறித்து விவாதித்துக் குறிப்பு தயார் செய்யவும்.

தனிப்பட்ட மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பொது அறிவு ஞானத்தின் வாயிலாக மட்டும் அணுகினால், அவற்றின் சரியான தீர்வைக் குறித்த முழுமையான அறிவு கிடைப்பதில்லை. அனு தன்னுடைய பிரச்சினையின் காரணத்தைப் பொது அறிவு ஞானத்தின் அடிப்படையில் மட்டுமே சிந்தித்தாள் என்பதை அவளுடைய அனுபவக் குறிப்பில் காணலாம்.

அனு தானும் தன்னுடைய குடும்பம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறித்துச் சிந்தித்துப் பார்த்த போது பணப் பற்றாக்குறை மட்டுமே அதற்குக் காரணம் என உணர்ந்து கொண்டாள். ஆனால் அனுவின் பிரச்சினைகளுக்குக் காரணமாகின்ற வேறு பல காரணிகளும் உண்டல்லவா. அவை எவை?



| பிரச்சினைகள் | காரணிகள் |
|---|---|
| அனுவின் குடும்பத்திற்கு நிலையான வருமான வழிகள் இல்லை | பொருளாதாரம் |
| காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப வருமானம் மாறுபடுகிறது. | சுற்றுச்சூழல் |
| மழைக்காலத்தில் வேலையின்மை (மாற்று ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்திப் பொருளாதாரப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் ஆட்சியமைப்பின் வரம்பு) | ஆட்சி நிர்வாகம் |
| ஒரே தன்மையுடைய புவியியல் பகுதிகளில் வாழும் அனைவரும் அனுபவிக்கும் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகள் | புவியியல் வேறுபாடுகள் |

இங்குப் பொருளாதாரம், சுற்றுச்சூழல், ஆட்சி நிர்வாகம் மற்றும் புவியியல் பாகுபாடுகள் போன்ற காரணிகள் அனுவின் குடும்பத்தின் பிரச்சினைக்குக் காரணமாகின்றன என்பதைக் காணலாம். அனுவின் பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள காரணம் பணப்பற்றாக்குறை மட்டுமல்ல எனவும், அதற்குப் பின்னால் ஏராளம் பிற சமூகக் காரணிகள் இருக்கின்றன என்பதை நீங்கள் கவனித்தீர்கள் அல்லவா.

### சமூகக் காரணிகள் (Social Factors)

தனி நபர்களின் நடத்தை, மனப்பான்மை, வாய்ப்புகள் மற்றும் தேர்தல் போன்றவற்றைத் தாக்கம் செலுத்தும் பல்வேறு சமூகக் கூறுகளை உள்ளடக்கியதே சமூகக் காரணிகள். குடும்பம், கல்வி, சமவயது குழுக்கள், மதம், ஜாதி அமைப்பு, பொருளாதார நிலை, சுற்றுச்சூழல், கலாச்சார விதிமுறைகள், மதிப்புகள், ஆட்சி அமைப்புகள், அரசியல், தொழில்நுட்பம், ஊடகங்கள் போன்ற அனைத்தும் இதில் உள்ளடங்கியுள்ளன.

அனுவின் தனிப்பட்ட பிரச்சினையை ஒரு சமூகப் பிரச்சினையாக நமக்கு இங்குக் காணலாம். எந்த ஒரு தனிப்பட்ட பிரச்சினைக்குப் பின்னாலும் சமூகக் காரணிகளின் தாக்கம் இருக்கும். அவற்றைப் புரிந்து கொண்டு பிரச்சினைகளின் காரணங்களைக் கண்டறிவதின் வாயிலாக மட்டுமே நமக்குத் தனிப்பட்ட பிரச்சினைகளையும் அவற்றின் காரணங்களையும் ஆழமாகவும் நுட்பமாகவும் புரிந்து கொள்ள முடியும். உங்களுக்குச் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு தனிப்பட்ட பிரச்சினையைக் குறிக்கவும். அவற்றைத் தாக்கம் செலுத்தும் சமூகக் காரணிகளைப் பட்டியலிடவும்.

**படங்களைக் கவனிக்கவும்**








இந்தப் படங்கள் ஒவ்வொன்றிலும் கண்டறிய இயலும் தனிப்பட்ட பிரச்சினைகளையும் அவற்றைத் தாக்கம் செலுத்தும் சமூகக் காரணிகளையும் அட்டவணையில் குறிக்கவும்.

| வ.எண். | தனிப்பட்ட பிரச்சினைகள் | சமூகக் காரணிகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

தனிநபர் பிரச்சினைகளுக்குப் பின்னால் ஏராளம் சமூகக் காரணிகள் இருப்பதைக் கண்டடைந்தீர்களல்லவா. இந்தக் காரணிகளைப் பகுப்பாய்வு செய்வதன் வாயிலாகச் சமூகப் பிரச்சினைகளின் காரண – காரியத் தொடர்புகளையும் (cause-effect relationships) விளைவுகளையும் (Consequences) நம்மால் புரிந்து கொள்ள இயலும். இவ்வாறு, உற்றுநோக்கும் போது தனிமனிதப் பிரச்சினைகள் பரந்த சமூக கட்டமைப்புகளுடன் (Social Structure) தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம்.

சமூக உறவுகள், சமூக நிறுவனங்கள், சமூகக் கட்டமைப்புகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் போன்றவை தனிநபர்களையும் சமூகத்தையும் எவ்வாறெல்லாம் பாதிக்கிறது என்பதை ஆய்வு செய்யும் செயல்முறையே சமூகப் பகுப்பாய்வு (Social Analysis). சமூகப் பகுப்பாய்வின் வழியாகப் பல்வேறு சமூகச் சூழல்களில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகளைக் குறித்து ஆழமான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவற்றை மேன்மைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கவும் இயலும்.

## சமூகவியல் (Sociology)

சமூகத்தைக் குறித்த அறிவியல் முறைக் கற்றலே சமூகவியல். சமூகவியலுக்குச் சமூகத்தில் உள்ள உறவுகள், நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புகள் போன்றவற்றை உற்றுநோக்கவும், பகுப்பாய்வு செய்யவும், விளக்கவும் முடியும். சமூகவியலின் ஆரம்பக்கால சிந்தனையாளர்களில் முக்கியமானவர்கள் காரல் மார்க்ஸ், எமில் துர்கீம், மாக்ஸ் வெபர் போன்றவர்கள் ஆவர். சமூக உறவுகள் (Social Relationships), சமூக நிறுவனங்கள் (Social Institutions) சமூகக் கட்டமைப்பு (Social Structure) போன்றவை சமூகப் பகுப்பாய்விற்காகச் சமூகவியலில் பயன்படுத்தும் சில முக்கிய பகுதிகளாகும்.

சமூக உறவுகள் என்பது சமூகத்தில் தனிநபர்களுக்கிடையே உருவாகும் உறவு மற்றும் தொடர்புகளாகும். சமூகக் கட்டமைப்பு மற்றும் சமூக நிறுவனங்கள் போன்றவை சமூக உறவுகளின் அடிப்படையாகும். ஒரு சமூக நிறுவனம் என்ற நிலையில் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே காணப்படும் ஒத்துழைப்பு, கவனிப்பு, பாசம் மற்றும் நண்பர்களோடுள்ள நட்பின் வாயிலாகக் கிடைக்கும் ஆழமான தொடர்புகள் மற்றும் கூட்டுறவு ஆகிய அனைத்தும் சமூக உறவுகளுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

சமூக நிறுவனங்கள் என்பது சமூக உறவுகளை உறுதிப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் சமூகத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளின் கட்டமைப்பாகும். இவை சமூகத்தின் கண்ணோட்டங்களை விளக்குவதுடன், நமது செயல்கள் மற்றும் நடத்தைகளை ஒழுங்கமைத்து வடிவமைக்கின்றது. இது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்புகளை ஒருங்கிணைத்து, தனி நபர்களின் செயல்களில் பிரதிபலிக்கச் செய்து, சமூகத்தை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தவும் செய்கிறது. குடும்பம், திருமணம், மதம், அரசியல் நிறுவனங்கள், பொருளாதார நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், நீதி நியாய நிறுவனங்கள் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

சமூகத்தில் தனி நபர்களின் மதிப்பு (Status), பங்கு (Role), நிலைபேறு, பொறுப்புணர்வு ஆகியவற்றை விளக்குவதும் செயல்படுத்துவதும் சமூக அமைப்பாகும். சமூகத்தில் உள்ள விதிமுறைகள் (Norms), மற்றும் சட்டங்கள் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். இவை சமூகத்தில் ஒழுங்கையும், நிலையான தன்மையும் அளிக்க உதவுகின்றன.

அனு எதிர்கொள்ளும் பிரச்சினையின் பல்வேறு நிலைகள் பரந்த சமூகக் கட்டமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளன என்பதைக் கவனித்தீர்கள் அல்லவா. இவ்வாறு தனிநபரின் பிரச்சினைகள் பரந்த சமூகக் கட்டமைப்புடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்வதற்கான திறமையே சமூகவியல் கற்பனை (Sociological Imagination). அமெரிக்க சமூகவியலாளரான சார்லஸ் ரைட் மில்ஸ் என்பவர் 1959 – இல் எழுதிய ' தி சோஷியாலஜிக்கல் இமாஜினேஷன்' (The Sociological Imagination) என்ற நூலில் தான் சமூகவியல் கற்பனை என்ற கருத்து முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. தனி நபர் பிரச்சினைகளை ஒரு பரந்த சமூகக் கட்டமைப்பின் பகுதியாகக் காண உதவும் ஒரு திறனாக அவர் இந்தக் கருத்தை முன் வைத்தார். தனிநபர் பிரச்சினைகளையும் அவற்றின் காரணங்களையும் கண்டறிந்து அவற்றைப் பரந்த உற்றுநோக்கல் மற்றும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி விளக்கவும் செய்கின்ற முறையையே சமூகவியல் கற்பனை முன்வைக்கிறது.



சார்லஸ் ரைட் மில்ஸ்

## சமூகவியல் கற்பனை மற்றும் சமூகப் பகுப்பாய்வு (Sociological Imagination and Social Analysis)

அனைத்துத் தனிநபர் பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள சமூகக் காரணங்களையும் சமூகவியல் கற்பனையின் (Sociological Imagination) வாயிலாகக் கண்டறிய இயலும். சமூகக் கட்டமைப்புகள் நம் வாழ்க்கையிலும், பிறரின் வாழ்க்கையிலும் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதைப் புரிந்து கொள்ள சமூகவியல் கற்பனை நமக்கு உதவுகிறது. தனிநபர்களை அவர்களுடைய தனிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து வெளியேறவும், பரந்த சமூகக் கட்டமைப்புகளின் பின்னணியில், தங்கள் சொந்த அனுபவங்களையும், வாழ்க்கை தாக்கத்தையும் நோக்கிப் பார்க்கவும் சமூகவியல் கற்பனை தகுதிப்படுத்துகிறது. சமூகவியல் கற்பனையின் சிறப்பம்சங்களை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

### 1. தனிநபர் கண்ணோட்டத்தை விரிவுபடுத்துகிறது.

படத்தை உற்றுநோக்கவும்.



ஒரு நபர் வாகன விபத்திற்குள்ளாவது அவரது கவனக்குறைவால் மட்டுமா? அதற்குப் பின்னால் வேறு காரணங்களும் இருக்கும் அல்லவா. அவை எவை?

-
-

இதன் பின்னால் போக்குவரத்து விதிமீறல், போக்குவரத்து நெரிசல், மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப போக்குவரத்து வசதியின்மை, போக்குவரத்து விதிகளோடு தொடர்புடைய சட்ட அமைப்புகளின் தோல்வி, அறிவியல் முறையில் அல்லாத சாலைக் கட்டுமானமுறை போன்ற பல்வேறு காரணிகள் இருப்பதைச் சமூகவியல் கற்பனையின் வாயிலாகக் கண்டறியலாம்.

தனிப்பட்ட பிரச்சினைகளைப் பிற சமூகக் காரணிகள் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதைக் கண்டறியவும், அதன் வாயிலாகத் தனிநபர் கண்ணோட்டத்தை விரிவுபடுத்தவும் சமூகவியல் கற்பனையால் சாத்தியமாகிறது.

### தற்கொலை விகிதமும் சமூகமும் (Suicide Rate and Society)

சமூகவியலுக்கு அடித்தளமிட்டவர்களில் முக்கியமானவரான எமில் துர்கீம், தற்கொலையை ஒரு தனிப்பட்ட செயலாக மட்டும் கருதிய காலத்தில்தான் தற்கொலைக்குப் பின்னால் உள்ள சமூகக் காரணிகளை ஆய்வு செய்ய முடிவு செய்தார். தற்கொலைக்குப் பின்னால் தனிப்பட்ட காரணங்களை விட சமூகக் காரணங்கள் இருப்பதை அவர் தனது ஆய்வின் வாயிலாகக் கண்டறிந்தார். 1897-இல் வெளியிட்ட 'தற்கொலை' (Suicide) என்ற நூலில் அவர் தனது கண்டுபிடிப்புகளை வெளியிட்டார்.



எமில் துர்கீம் (1858-1917)

### 2. சமூகப் பிரச்சினைகளை ஆழமாகப் புரிந்து கொள்ளுதல்.

அட்டவணையை ஆய்வு செய்யவும்.

**பாலினநிலை அடிப்படையிலான இந்தியாவில் உள்ள தொழில் பங்களிப்பு விகிதம் 2017-2023**

| வருடம் | தொழில் பங்களிப்பு விகிதம் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 2017-2018 | 75.1 | 21.1 |
| 2018-2019 | 74.9 | 21.6 |
| 2019-2020 | 75.8 | 26.3 |
| 2020-2021 | 75.8 | 27.5 |
| 2021-2022 | 75.9 | 27.2 |
| 2022-2023 | 77.4 | 31.6 |

ஆதாரம் : குறிப்பிட்ட தொழிலாளர் ஆய்வு அறிக்கை புள்ளியியல் அமைச்சரகம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சரகம்

2017 முதல் 2023 வரையுள்ள கால கட்டத்தில் இந்தியாவில் பாலின நிலை (Gender) அடிப்படையிலான தொழில் பங்களிப்பு விகிதமே மேலே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதியின் பொருளாதார முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்தும் முக்கிய காரணியே தொழில் பங்களிப்பு. பல்வேறு வருடங்களில் பெண்கள் மற்றும் ஆண்களின் தொழில் பங்களிப்பு விகிதங்களுக்கு இடையே உள்ள இடைவெளியை (Gap) கவனித்தீர்கள் அல்லவா.

தொழில்துறையில் பெண்களின் எண்ணிக்கை குறைவதற்கான காரணம் அவர்கள் தொழில் செய்ய முன் வரவில்லை என்ற பொதுஅறிவு ஞானத்துக்கும் அப்பால் பிற காரணிகளும் உள்ளன எனச் சிந்திக்க சமூகவியல் கற்பனை உதவுகிறது. வேலை செய்யும் இடங்களில் பெண்களின் எண்ணிக்கை ஏன் குறைவாகக் காணப்படுகிறது என்பதை ஆய்வு செய்தால் பாலின நிலையோடு தொடர்புடைய ஏராளம் சமூகக் காரணிகள் அதற்குக் காரணமாக இருக்கிறது என்பதைக் காணமுடியும்.

சில சமூகங்கள் ஆண்கள் குடும்பத்தைக் கவனிக்க முழுமையாகக் கடமைப்பட்டவர்கள் என எதிர்பார்க்கிறார்கள். பெண்கள் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டியவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இது பெண்களுக்கான வேலை வாய்ப்புகளைக் கட்டுப்படுத்துகின்ற பாலின நிலையை அடிப்படையாகக் கொண்ட விதிமுறைகள் (Gender Norms) ஆகும். இதனால் பெண்களுக்கு வருவாய் உள்ள வேலைகள் செய்ய முடிவதில்லை. இது பெண்களின் பொருளாதார பின்னடைவிற்குக் காரணமாகிறது. சில சமூகங்களில் ஆண் குழந்தைகளுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு அதிகமாகவும், பெண் குழந்தைகளுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு குறைவாகவும் காணப்படுகிறது. இது பெண்கள் கல்வியில் பின்தங்கிய நிலைக்கும், அதனால் தொழில் பங்களிப்பில் குறைவு ஏற்படவும் காரணமாகிறது. தொழில் பங்களிப்பில் உள்ள பாலினநிலை இடைவெளிக்கான காரணத்தை ஆய்வு செய்தால் இவ்வாறான ஏராளம் கலாச்சார – பொருளாதார – கல்வி சார்ந்த காரணிகளைச் சமூகவியல் கற்பனையின் வாயிலாகக் கண்டறிய இயலும்.

தனிநபர் பிரச்சினைகளின் சமூகத்தொடர்பைக் குறித்துச் சிந்திக்க மட்டுமல்ல, சமூகப் பிரச்சினைகளை ஆழமாகப் புரிந்து கொள்ளவும் சமூகவியல் கற்பனை பயனுடையதாகக் காணப்படுகிறது.

### 3. சுயபிரதிபலிப்பு சாத்தியமாகிறது

இஷான் தான் கற்ற பள்ளியில் நடைபெற்ற முன்னாள் மாணவர் கூடுகையில் கலந்து கொள்ள வந்த போது கூறிய வார்த்தைகளைக் கவனிக்கவும்.



“நான் ஒரு பொறியியலாளராக இருந்தேன். சிறுவயதில் ஓர் ஓவியனாக வேண்டுமென ஆசைப்பட்டேன். ஆனால் நான் ஓவியம் வரைதலை ஒரு தொழிலாகக் கொள்வதில் எனது பெற்றோரும் ஆசிரியர்களும் ஆர்வம் காட்டவில்லை. படிப்படியாக நானும் அவ்வாறு சிந்தித்து ஒரு பொறியியலாளராக முடிவு செய்தேன். எனது விருப்பத்தின்படியே நான் ஒரு பொறியியலாளரானேன் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால் எனக்கு அதில் திருப்தி ஏற்படவில்லை. நான் ஆழ்ந்து சிந்தித்தபோது எனது சொந்த தீர்மானத்தின் படி பொறியியலாளர் ஆகவில்லை என்பதை உணர்ந்தேன். பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் போன்றவர்களின் கருத்துக்கள் என்னில் தாக்கத்தைச் செலுத்தின. நான் பொறியியல் வேலையிலிருந்து ஓய்வு பெற்று தற்போது ஓவியம் வரைதலில் ஈடுபட்டுள்ளேன். தற்போது நான் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறேன்.”

இஷான் தனது தனிப்பட்ட விருப்பங்களுக்குப் பின்னால் யாருடைய தாக்கங்கள் எல்லாம் இருப்பதாகக் கண்டடைகிறார்?

- பெற்றோர்
- 
- 

இஷான் தனது முடிவை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்தபோதுதான் இந்தக் கண்டுபிடிப்பை நடத்த முடிந்தது. சுய பிரதிபலிப்பு (Self-reflexivity) என்பது ஒருவரின் சுய சிந்தனைகளையும், செயல்களையும் விமர்சன முறையில் மதிப்பிடும் திறனாகும். இஷான் சுயபிரதிபலிப்பு நடத்திய போது தான் அவனுக்கு இந்தப் பகுத்தறிவு கிடைத்தது.

தனிப்பட்ட பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள சமூகக் காரணிகளைப் புரிந்து கொள்வதோடு, ஒவ்வொரு நபரும் தங்களைக் குறித்து ஆழமாக உணர்ந்து கொள்ளவும், சுயமாகப் பிரதிபலிக்கவும் சமூகவியல் கற்பனை உதவுகிறது.

சுயபிரதிபலிப்பின் வாயிலாகத் தனிமனித பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள சமூகக் காரணங்களை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இது பொது அறிவு ஞானத்தின் எல்லையிலிருந்து விலகி பரந்த மதிப்பிடல்களுக்கு உதவுகிறது. இவ்வாறு சமூகவியல் கற்பனை தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் ஒரே மாதிரி நன்மை பயக்கிறது.

### 4. அனுதாபமும் சகிப்புத்தன்மையும் வளர்க்கிறது



உங்கள் வகுப்பில் உள்ள ஒரு மாணவன் தேர்வுகளில் தொடர்ந்து குறைந்த மதிப்பெண்களைப் பெறுகிறான் எனவும், அவன் கற்றல் செயல்பாடுகளில் சரியாக ஈடுபடவில்லை எனவும் கற்பனை செய்து பாருங்கள். அதற்கான காரணங்களைப் பொது அறிவு ஞானத்தின் அடிப்படையில் சிந்திக்கும்போது நீங்கள் என்னென்ன முடிவுகளைக் கண்டடைவீர்கள்?

- சோம்பலாக இருக்கலாம்
- 
- 

ஆனால் நீங்கள் சமூகவியல் கற்பனையின் வாயிலாக இதை அணுகும் போது பரந்த சமூகக் காரணிகளின் தாக்கம் அந்த மாணவனின் கற்றலிலும் நடத்தையிலும் கடந்து வருவதைக் காண முடியும். அவை எவை?

- குடும்பச் சூழ்நிலை
- கற்றல் வளங்களின் பற்றாக்குறை
- 
- 

இவ்வாறு அணுகும் போது அந்த மாணவனிடம் உங்களுக்கு அதிக பரிவு (Empathy) ஏற்படவும், மேலும் அந்த மாணவனுக்கு ஆதரவையும் ஊக்கத்தையும் அளிக்க உங்களால் இயலும். பிறருடைய அனுபவங்களுக்குப் பின்னால் உள்ள சமூகச் சூழலைப் புரிந்து கொள்வதின் மூலம், தனி நபர்களுக்குப் பல்வேறு கண்ணோட்டங்கள் வாயிலாக அவற்றை அணுக முடியும். அதன் வாயிலாக இரக்கத்தையும் சகிப்புத்தன்மையையும் வளர்க்க இயலும்.

### 5. விமர்சன சிந்தனை வளருகிறது.



பிரியா ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தாள். தன்னுடைய கல்வியை நிறைவு செய்தபின் சிறந்த வேலை மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகளைத் தேடி நகரத்திற்குக் குடியேறினாள். ஆனால் அவளுக்கு வேலை மற்றும் பாதுகாப்பான தங்குமிடம் கிடைப்பது கடினமாக இருந்தது. சில நாட்களின் தேடலுக்குப் பின் அவளுக்கு வேலை கிடைத்தது. ஆனால் விரைவாகவே அவள் அந்த வேலையை இழந்தாள். அப்பொழுது அவள் ஒரு தொழிலாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டாள். பிரியா வேலையை இழந்தது அவளுக்கு மட்டும் நிகழ்ந்த ஒரு பிரச்சினையாக நினைத்திருந்தாள். ஆனால் அவள் தொழிலாளர் அலுவலகத்தில் சென்ற போது தன்னைப் போன்று வேலை இழந்த ஏராளம் குடியேறியவர்கள் அந்த நகரத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டாள். அவர்களோடு தொடர்பு கொண்டும், தொழிலாளர் அலுவலகம் மூலமாகவும் குடியேறியவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்துப் பிரியாவுக்கு சில தகவல்கள் கிடைத்தன. இதன் அடிப்படையில் பிரியா பிரச்சினைகளை விமர்சன ரீதியாகச் சிந்திக்கவும், குடிபெயர்ந்தவர்களின் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடவும் ஆரம்பித்தாள். படிப்படியாக அவளால் தன்னுடையவும் பிறருடையவும் சூழ்நிலைகளை மேம்படுத்த முடிந்தது

கிராமப்புறத்தில் இருந்து நகரத்திற்கு வேலைக்காகக் குடியேறிய பிரியா என்ற பெண்மணியின் அனுபவத்தை வாசித்தீர்கள் அல்லவா. பிரியா அனுபவிக்கும் என்னென்ன தனிப்பட்டப் பிரச்சினைகள் குடியேறியவர்களின் பொதுவான பிரச்சனைகளாக உங்களால் காண முடிந்தது?

- 
- 

புதிய சூழ்நிலைகளுடன் இணைந்து செயல்பட்டபோது பெரும்பாலான குடிபெயர்ந்தவர்களின் பிரச்சினைகளும் ஒரே மாதிரியானவை என்பதை விமர்சன சிந்தனையால் பிரியாவால் அடையாளம் காண முடிந்தது. தனிமனிதப் பிரச்சினைகளில் வேறு சில சமூகக் காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன என அவளால் கண்டடைய முடிந்தது. அதன் வாயிலாகத் தன்னுடைய சூழ்நிலைகளை மேம்படுத்திக் கொள்ள பிரியாவால் முடிந்தது. மட்டுமல்ல, பிறருக்கு உதவவும் முடிந்தது. இவ்வாறு பல்வேறு சமூகக் காரணிகள் தனிநபர் வாழ்க்கையை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதைப் புரிந்துகொள்ள விமர்சன சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் கற்பனை தனி நபர்களுக்கு உதவுகிறது.

### 6. குணமேன்மையற்ற பழக்கவழக்கங்களைக் கேள்விக்குட்படுத்துதல்.




ரினு ஒரு சிறிய பட்டணத்தில் வசிக்கிறார். திருப்திகரமான வேலையும் குடும்பமும் உடைய அவர் தன்னுடைய வாழ்க்கையில் எந்த விதமான குறைகளும் இல்லை என்று நம்பியிருந்தார். ஆனால் அவருக்கு அடிக்கடி காரணமில்லாமல் பதட்டமும் மனசோர்வும் ஏற்பட்டது. இதை யாரிடமாவது பகிர்ந்து கொண்டால் தனக்கு மனநிலை சரியில்லை என நினைத்து பிறர் தன்னைத் தனிமைப்படுத்துவார்கள் என எண்ணி அவர் பயப்பட்டார். அதனால் அவர் அதை யாரிடமும் கூறவில்லை. ஒரு முறை அவர் மனநல ஆரோக்கியத்தைக் குறித்த ஒரு கருத்தரங்கில் பங்கேற்றார். அங்கு நடைபெற்ற கலந்துரையாடல்கள் மற்றும் மனநல நிபுணர்களின் சொற்பொழிவுகளிலிருந்து உடல் ஆரோக்கியத்தைப் போன்று மனநல ஆரோக்கியமும் முக்கியமானது என்பதைப் புரிந்து கொண்டார். சமூகத்தில் மனநல ஆரோக்கியத்தைக் குறித்து குணமேன்மையற்ற சில பழக்கவழக்கங்களும் முன்கருத்துக்களும் இருப்பதால் தான் தனது நிலையைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லை என அவர் உணர்ந்தார். அவர் தனக்கு ஏற்பட்ட மனநலப் பிரச்சினைகளைத் தனது நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டார். மனநல ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்துச் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்த அவரும் அவரது நண்பர்களும் இணைந்து செயல்பட ஆரம்பித்தனர்.

ரினுவின் அனுபவத்தை வாசித்தீர்கள் அல்லவா. உடல்நல ஆரோக்கியம் போலவே மனநல ஆரோக்கியமும் முக்கியமானது என உங்களுக்குப் புரிந்ததல்லவா. இந்த விழிப்புணர்வு மனநல ஆரோக்கியம் குறித்துச் சமூகத்தில் நிலை பெற்றிருக்கின்ற குணமேன்மையற்ற பழக்கவழக்கங்களைக் கேள்வி கேட்க நம்மை ஊக்குவிக்கிறது.

குடும்பம், கல்வி நிறுவனங்கள், பொருளாதார நிறுவனங்கள் போன்ற சமூக நிறுவனங்கள், தனிப்பட்ட தேர்தல்களிலும் அதன் விளைவுகளிலும் செலுத்துகின்ற தாக்கத்தைப் புரிந்து கொள்ளவும் சமூகவியல் கற்பனை உதவுகிறது.

தனிப்பட்ட அனைத்து பிரச்சினைகளுக்குப் பின்னாலும் சில சமூகக் காரணிகளைக் காண இயலும். பொது அறிவு ஞானத்தின் வாயிலாக மட்டும் அணுகினால் இந்தச் சமூகக் கண்ணோட்டம் ஏற்படாது. தனிமனிதப் பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள சமூகக் காரணிகளைக் கண்டறிய வேண்டும். பொது அறிவு ஞானத்தின் வாயிலாக மட்டும் தனிமனிதப் பிரச்சினைகளையும், சமூகப் பிரச்சினைகளையும் காண்பதற்கு அப்பால், இந்தப் பிரச்சினைகளை நம்மால் பகுப்பாய்வு செய்யக் கூடியதாகவும்

இருக்க வேண்டும். தனிமனிதப் பிரச்சினைகளை வெறும் தனிப்பட்ட தோல்விகளாகக் கருதுவதற்குப் பதிலாக சமூகப் பிரச்சினைகளாகப் புரிந்து கொள்வதற்குச் சமூகவியல் கற்பனை திறமை அளிக்கிறது.

பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள காரணங்களைச் சமூகவியல் கற்பனையின் வாயிலாகக் கண்டறியலாம். இதன் வாயிலாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. இது மிகவும் பயனுள்ள சமூகக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது. எனவே, சமூகவியல் கற்பனை மாற்றத்திற்காகச் செயல்படவும் சமூகக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் உதவுகிறது.




உங்கள் தனிப்பட்ட அனுபவங்களையும் அன்றாட வாழ்வில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளையும் உற்று நோக்கி அவற்றை ஓர் இதழில் பதிவு செய்யுங்கள். இந்தத் தனிப்பட்ட அனுபவங்களும் சமூகப் பிரச்சினைகளும் எவ்விதம் பரந்த சமூகச் சூழ்நிலைகளுடன் தொடர்பு கொண்டுள்ளது எனச் சமூகவியல் கற்பனையின் வாயிலாகக் கண்டறியவும். இந்தக் கண்டுபிடிப்புகளைப் பகுப்பாய்வு செய்து இதழில் பதிவு செய்யவும். உங்களது பகுப்பாய்வுக் குறிப்பைச் சமூக அறிவியல் மன்றத்தில் டிஜிட்டல் விளக்கக் காட்சியாக வெளியிட்டுக் கலந்துரையாடவும்.

## பொது அறிவு ஞானமும் சமூகவியல் கற்பனையும் (Commonsense Knowledge and Sociological Imagination)

சமூகவியல் அதன் அறிவைத் தேடுவது பொது அறிவு ஞானத்திற்கு அப்பாற்பட்டதாகும். சமூகவியல் தொடர்பான ஆய்வுகளில் இருந்து பொது அறிவு ஞானத்தைப் புரிந்து கொள்ளவும் விளக்கவும் முடியும். நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கான முயற்சியின் வெவ்வேறு வழிகளே பொது அறிவு ஞானமும் சமூகவியல் கற்பனையும் ஆகும். இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஆனால் சமூகவியலின் தனித்துவமான கருத்துக்களும் ஆகும். இந்த இரண்டு கருத்துகளையும் ஒருங்கிணைப்பதின் வாயிலாகத் தனி நபர்களுக்குச் சமூகத்தில் விமர்சன ரீதியாக ஈடுபடவும், சமூகமயமாக்கப்பட்ட அணுகுமுறைகளைத் தவிர்க்கவும் இயலும். இதன் மூலம் தனிநபர்கள் சமூக உண்மைகள், சமூக நடத்தைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகளின் சிக்கலான தன்மைகளை வேறுபடுத்திப் புரிந்துகொள்ள இயலும். சமூகப் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்வதில் பொது அறிவு ஞானமும் சமூகவியல் கற்பனையும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் பார்ப்போம்.

| பொது அறிவு ஞான அணுகுமுறை (Commonsense Knowledge Approach) | சமூகவியல் கற்பனை அணுகுமுறை (Sociological Imagination Approach) |
|---|---|
| தனிப்பட்ட கண்ணோட்டம் மற்றும் அனுபவங்களுடன் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. | தனிமனித அனுபவங்களைப் பெரிய சமூகக் கட்டமைப்புகளுடன் இணைப்பதால் அதன் பரப்பு மிகப்பெரியது. |
| பல வேளைகளிலும் பொதுத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்ட மேலோட்டமான விளக்கம் மட்டுமே வழங்கப்படுகிறது. | தனி நபர்கள் மீது சமூகக் காரணிகள் செலுத்தும் தாக்கத்தை ஆழமாகப் பகுப்பாய்வு செய்கிறது. |
| சமூக உண்மைகளையும் பிரச்சினைகளையும் விமர்சன சிந்தனையின் வாயிலாக அணுகப்படுவதில்லை. | தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் சமூக கட்டமைப்புகளுக்கு இடையிலான தொடர்பைக் குறித்த விமர்சன சிந்தனையை ஊக்குவிக்கிறது. |

சமூகவியல் கற்பனை தனி நபருக்கும் சமூகத்திற்கும் இடையிலான நுண்ணிய மற்றும் பரந்த உறவுகளைக் (Micro-Macro Relationships) கண்டறிய உதவுகிறது. சமூகவியல் கற்பனை சமூகச் செயல்பாடுகளில் ஈடுபட நம்மைத் தூண்டுகிறது. தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் சமூகக் கட்டமைப்புகளுக்கு இடையே உள்ள சிக்கலான பரஸ்பர உறவுகளைப் புரிந்து கொள்ளவும், சிறப்பிக்கவும் சமூகவியல் கற்பனை நம்மைத் தகுதிப்படுத்துகிறது. இவ்வாறு, சமூகவியல் கற்பனையானது சமூக வாழ்க்கையை வளப்படுத்தும் சக்தி வாய்ந்த ஒரு கருவியாகவும், திறனாகவும், அணுகுமுறையாகவும் மாறுகிறது.

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சமூகப் பிரச்சினைகளுக்கான காரணங்களைப் பொது அறிவு ஞான அணுகுமுறை மற்றும் சமூகவியல் கற்பனையின் வாயிலாகக் கண்டறிய முயற்சிக்கவும்

| சமூகப் பிரச்சினைகள் | பொது அறிவு ஞான அணுகுமுறை | சமூகவியல் கற்பனை அணுகுமுறை |
|---|---|---|
| 1. வறுமை (Poverty) | • கடின உழைப்பில் ஆர்வமின்மை<br>• | • வளங்களின் சீரற்ற விநியோகம்<br>• |
| 2. வேலையின்மை (Unemployment) | • சோம்பல்<br>• | • மக்கள் தொகை பெருக்கம்<br>• |
| 3. கற்றல் அழுத்தம் (Academic Pressure) | • தோல்வி பயம்<br>• | • அதிக மதிப்பெண் பெற கல்விக் கூடங்களிலிருந்துள்ள அழுத்தம்<br>• |

பொது அறிவு ஞானம் மற்றும் சமூகவியல் கற்பனையின் வாயிலாக ஒரே பிரச்சினையை அணுகும் போது காணப்படும் வேறுபாடுகள் எவை? பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் இரு அணுகுமுறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கலந்துரையாடல் செய்து வகுப்பில் வெளியிடவும்.

## தொடர் செயல்பாடுகள்

1. 'ஆரோக்கியமான சமூக வாழ்க்கைக்குச் சமூகவியல் கற்பனையின் தேவை' என்ற தலைப்பில் பள்ளி அசெம்பிளியில் வெளியிடுவதற்கான ஒரு சிறு உரையைத் தயார் செய்யவும்.
2. பல்வேறு ஊடகங்களிலிருந்து தற்போதைய சமூகப் பிரச்சினைகளின் செய்திகளைச் சேகரிக்கவும். ஒரே சமூகக் கண்ணோட்டத்தை வெவ்வேறு ஊடகங்கள் எவ்வாறு வெளியிட்டுள்ளன என்பதை ஒப்புமைப்படுத்தவும். சமூகவியல் கற்பனை அணுகுமுறையின் வாயிலாகப் பல்வேறு ஊடகங்கள் அவற்றை எவ்வாறு வெளியிட்டுள்ளன என்பதைக் கண்டறியவும்.
3. சமூகவியல் கற்பனைத்திறன் பிரதிபலிக்கின்ற முறையில் நீங்கள் நடத்திய செயல்பாடுகள் மற்றும் சூழ்நிலைகளைச் சமூக அறிவியல் மன்றத்தில் வெளியிடவும்.



# 4

# பொருளாதாரமும் உலகமும்

*உலகம் திறக்கப்பட்டு அதன் பொக்கிஷங்கள் மற்றும் அதிசயங்களை வெளிப்படுத்திய அந்தக் காலம் எவ்வளவு அற்புதமாக இருந்திருக்கும்! சமுத்திரங்கள் , புதிய கண்டங்கள் மற்றும் அளவற்ற செல்வங்கள் அனைத்தும், "திறந்திடு சிசேம்" என்ற ஒற்றை மந்திரச் சொல்லிற்காகக் காத்திருந்ததைப் போல் ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டன. வாயு மண்டலம் கூட இந்தச் சாகசத்தின் மந்திரத்தன்மையால் நிறைந்திருக்கலாம்.*

Jawaharlal Nehru

(சுதந்திர மொழிபெயர்ப்பு)

மேற்குறிப்பிட்டவை 15 – ஆம் நூற்றாண்டில் உள்ள புவியியல் ஆய்வுகளைக் குறித்து ஜவஹர்லால் நேரு கிளிம்சஸ் ஆஃப் வேல்டு ஹிஸ்டரி என்ற நூலில் கூறப்பட்டிருந்த குறிப்பாகும். 15 – ஆம் நூற்றாண்டில் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் அமெரிக்கா போன்ற நிலப்பகுதிகளுக்கு வந்து சேர்ந்த ஐரோப்பியர்கள் பல சிறப்பான காட்சிகளைக் கண்டனர். புதிய கடல்வழிப் பாதைகளைத் திறந்த இந்த அற்புதமான காட்சிகளைக் குறித்தே ஆயிரத்து ஒன்று இரவுகள் என்ற நூலில் உள்ள 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற கதையைக் குறிப்பிட்டு நேரு இவ்வாறு எழுதியுள்ளார். பிற கண்டங்களைக் கண்டுபிடித்த ஐரோப்பியர்களின் அதிசயத்தை, காட்டிலுள்ள குகையில் திருடர்கள் மறைத்து வைத்திருந்த புதையலைக்கண்டு 'திறந்திடு சிசேம்' என்ற இரகசியச் சொல்லினால் திறக்கின்ற அலிபாபாவின் ஆச்சரியத்தோடு நேரு ஒப்பிடுகிறார். 15 ,16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர்களின் புவியியல் ஆய்வுகளும் புதிய நிலப்பகுதிகளின் கண்டுபிடிப்புகளும் உலக வரலாற்றின் பிற்காலப் போக்கை நிர்ணயித்த முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இதன் வரலாற்றை ஆராய்வோம்.

15–ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற இரண்டு முக்கியமான நிகழ்வுகள் புவியியல் ஆய்வுகளுக்கு வழி வகுத்தன.

- துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிளைக் (நிலப்படம் 4.1) கைப்பற்றியது.
- போர்ச்சுகீசிய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் கினியா கடற்கரையை (நிலப்படம் 4.1) வந்தடைந்தது.

### நல்ல மிளகும் ஐரோப்பியர்களும்

குளிர்காலத்தில் உணவுப் பொருட்களைக் கெட்டுப்போகாமல் பாதுகாக்கவும் மருத்துவ தேவைகளுக்காகவும் ஐரோப்பியர்கள் நல்ல மிளகு உள்ளிட்ட வாசனைத் திரவியப் பொருட்களைப் பயன்படுத்தியிருந்தனர். இவை கான்ஸ்டாண்டிநோபிள் வழியாகத்தான் அவர்களுக்குக் கிடைத்தது. இந்தப் பாதை மூடப்பட்டதால் ஐரோப்பியர்கள் கடல் வழியாக ஆசியாவிற்குப் புதிய வாணிபப் பாதைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த நிகழ்வுகள் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியதன் விளைவாக ஆசியாவிலிருந்து நல்ல மிளகு உள்ளிட்ட விளைபொருட்கள் ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்ட தரைவழிப்பாதை அடைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஐரோப்பியர்கள் இந்தப் பொருட்கள் கிடைக்கும் நாடுகளுக்குப் புவியியல் ஆய்வு பயணங்களுக்கும் அதைத் தொடர்ந்து, புதிய பகுதிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் ஆரம்பம் குறித்தனர். போர்ச்சுகீசிய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் மேற்கு கடற்கரையின் கினியாவை அடைந்தது இன்னொரு வரலாற்று நிகழ்வாகும். அதைத் தொடர்ந்து நடைபெற்ற கடற்பயணங்கள் மற்றும் புவியியல் ஆய்வுகள் உலக வரலாற்றை மாற்றி எழுதின. இந்தப் பயணத்தொடர்கள் உலகம் முழுவதும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திற்கு ஆரம்பம் குறித்தது. படிப்படியாக ஐரோப்பிய கலாச்சாரம் பிற பகுதிகளுக்கும் பரவியது.

கொடுக்கப்பட்ட நிலப்படத்தைக் (4.1) கவனியுங்கள். நிலப்படத்தில் எந்தெந்த நாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், இவை எந்தக் கடற்கரையில் அமைந்துள்ளன எனவும் கண்டறியுங்கள்.




நிலப்படம் 4.1

போர்ச்சுகலும் ஸ்பெயினும் உலக வரலாற்றை மாற்றிய புவியியல் ஆய்வுகளுக்கு ஆரம்பம் குறித்தன. பின்னர், நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இத்துறையில் கடந்து வந்து புதிய நிலப்பகுதிகளைக் கண்டுபிடிப்பதிலும் கீழடக்குவதிலும் கூட்டுச் சேர்ந்தன.

இந்த நாடுகள் அட்லாண்டிக் பெருங்கடலின் கடற்கரையில் அமைந்துள்ளன என்பதை நீங்கள் நிலப்படத்தில் கண்டறிந்தீர்கள் அல்லவா. இந்த நாடுகளின் புவியியல் அமைவிடம் புவியியல் ஆய்வுகளுக்கு உதவியாக இருந்தது. இந்த நாடுகளின் கடல் ஆய்வுப் பயணங்களுக்கு உதவின பிற காரணிகள் எவை என்பதை காண்போம்.

- பெருங்கடல்களைக் கடந்து செல்லத் திறன் வாய்ந்த கப்பல்களின் கட்டுமானம்.
- கடலில் திசையைக் கண்டறிய உதவும் கடல் கருவிகளின் கண்டுபிடிப்பு
- ஆட்சியாளர்கள் வழங்கிய வலுவான ஆதரவு.
- இராணுவத்திறன்.
- கடல் பயண அனுபவங்கள்.
- நிலப்படத் தயாரிப்பு மற்றும் வான ஆராய்ச்சியில் அடைந்த முன்னேற்றம்.

## ஐரோப்பியர்கள் பிற கண்டங்களை நோக்கி

ஐரோப்பியர்களின் முதல் ஆய்வுப் பயணங்கள் ஆப்பிரிக்கா கண்டத்தை நோக்கியே இருந்தன. ஆப்பிரிக்காவின் நைஜர் என்ற சமவெளியில் உள்ள தங்கத்தைப் பற்றிய அறிவுதான் ஆப்பிரிக்கா கண்டத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கடற்பயணங்கள் மேற்கொள்ள போர்ச்சுகீசியரைத் தூண்டின.

1415–இல் மொரோக்கோ கடற்கரையில் உள்ள சியூட்டாவைக் (Ceuta) (நிலப்படம் 4.1) கைப்பற்றியதன் மூலம் ஆப்பிரிக்காவில் போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கம் ஆரம்பமானது. இந்தப் பகுதி படிப்படியாகப் போர்ச்சுகலுக்குத் தானியங்கள் மற்றும் பிற உணவுப் பொருட்கள் சேகரிக்கும் இடமாக மாறியது. போர்ச்சுகீசியர்களுக்கு மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள பொஜாதர் முனையைக் (நிலப்படம் 4.1) கடப்பது என்பது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. 1434 – ல் அதைக் கடக்க முடிந்ததால் அவர்களுக்கு மேற்கு ஆப்பிரிக்கா கடற்கரையில் உள்ள பிற பகுதிகளை எளிதாகச் சென்றடைய முடிந்தன. அதன் விளைவாக, அடிமை வியாபாரம் மற்றும் தங்க வியாபாரத்திலிருந்து போர்ச்சுகீசிய மன்னருக்குப் பொருளாதார இலாபத்தைப் பெற முடிந்தது. இது போர்ச்சுகீசியர்கள் மேலும் கடற்பயணங்கள் மேற்கொள்ள ஊக்குவித்தன. போர்ச்சுகீசியர்கள் ஆப்பிரிக்க கண்டத்தைத் தவிர ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள அட்லாண்டிக் தீவுகளில் படிப்படியாக, வேளாண்மையைப் பரப்பவும் காலனிகளை நிறுவவும் செய்தனர். சுருங்கக்கூறின், ஆப்பிரிக்கக் கடற்கரையோர ஆய்வுகளும் அட்லாண்டிக்

**காலனிமயமாக்கல்**

ஒரு நாடு தனக்குச் சொந்தமல்லாத ஒரு பகுதியில் ஆதிக்கத்தை நிலைநாட்டுகின்ற செயல்முறையே காலனிமயமாக்கல் (Colonisation). இவ்வாறு நிறுவும் காலனிகளில் ஆதிக்க நாடுகள் பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ஆதிக்கத்தின் வாயிலாகச் சுரண்டல் செய்ய முயன்றன.

தீவுகளில் குடியேற்றமும் ஆசியாவிற்கான கடல்வழிப்பாதையைக் கண்டுபிடிப்பதற்கான போர்ச்சுகீசியர்களுடைய தொடர் பயணங்களுக்குப் பின்னணியை அமைத்தன.

## அட்லாண்டிக் தீவுகள்



நிலப்படம் 4.2

ஆப்பிரிக்க கண்டத்தின் மேற்குக் கடற்கரையில் உள்ள அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுகளே அட்லாண்டிக் தீவுகள். மதைரா (Madeira), அசோரஸ் (Azores), கானரி (Canary) கேப் வெர்த் (Cape Verde) போன்றன இவற்றில் முக்கிய தீவுகள் ஆகும். இந்தத் தீவுகளை வேளாண் உற்பத்தி மையங்களாகவும் துறைமுகங்களாகவும் பயன்படுத்த முடிந்தன. இங்கு ஆதிக்கம் செலுத்தியிருந்த போர்ச்சுகீசியர்கள் இந்தத் தீவுகளை ஆப்பிரிக்காவில் தலையிடுவதற்கான முக்கிய மையமாகவும், ஆசியாவிற்குப் பயணம் மேற்கொள்ளும் கப்பல்களுக்கு நீரும் உணவும் கிடைக்கின்ற இடைத்தாவளமாகவும் பயன்படுத்தி இருந்தனர். பின்னர் கானரி தீவுகள் ஸ்பெயினின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

1488 – ஆம் ஆண்டு போர்ச்சுகீசிய மாலுமியான பெர்த்தலோமிய டயஸ் ஆப்பிரிக்காவின் தென்முனையான கேப் ஆஃப் குட் ஹோப்பை (Cape of Good Hope, நன்னம்பிக்கை முனை) (நிலப்படம் 4.3) அடைந்தார். கொந்தளிப்பான கடலைக் கடந்து இந்தியாவுக்கு வந்துசேர முடியாமல் அவர் திரும்பிச் சென்றார். இதைத் தொடர்ந்து, போர்ச்சுகீசியர்கள் இந்தியப் பெருங்கடலின் பாதகமான சூழ்நிலைகளில் பயணம் செய்ய இயலும் வகையிலான கப்பல்களை உருவாக்கினர். அதற்குப்பின், இந்தப் பாதையைப் பின்தொடர்ந்து கடல் பயணத்தை ஆரம்பித்த வாஸ்கோடகாமா கேப் ஆஃப் குட்ஹோப் வழியாக ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையைச் சுற்றி 1498 – இல் இந்தியாவில் கோழிக்கோட்டில் உள்ள காப்பாடு (நிலப்படம் 4.3) கடற்கரையை அடைந்தார். இது ஆசியப் பகுதிகளில் ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு ஆரம்பம் குறித்தது .


வாஸ்கோட காமா

புவியியல் ஆய்வுகளில் பங்கேற்ற இன்னொரு நாடு ஸ்பெயின் ஆகும். போர்ச்சுசீசியர்களைப் போலவே அவர்களுக்கும் நீண்ட கடற்கரையும் கடற்பயண பாரம்பரியமும் இருந்தன. ஸ்பெயினின் ஆட்சியாளர்களான பெர்டினனட் மற்றும் இசபெல்லா ஆகியோரின் உதவியும் ஆய்வாளர்களுக்குக் கிடைத்தன ஸ்பெயினின் பொருளாதார உதவியுடன் 1492 – இல் இத்தாலிய மாலுமியான

**பதினைந்தாம் நூற்றாண்டின் முக்கியமான புவியியல் கண்டுபிடிப்புகள்**




நிலப்படம் 4.3

கிறிஸ்டோபர் கொலம்பஸ் வட அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பஹாமஸ் தீவை (நிலப்படம் 4.3) அடைந்தார். இது ஐரோப்பாவில் அன்றுவரை அறியப்படாத ஒரு கண்டத்தின் கண்டுபிடிப்புக்கு வழி வகுத்தது. இதன் மூலம் இந்த நிலப்பகுதியும் ஐரோப்பிய ஆக்கிரமிப்பு மற்றும் சுரண்டலுக்கு உள்ளானது. 'புதிய உலகம்' (New World) எனக் குறிப்பிடப்பட்ட இந்த நிலப்பகுதி பின்னர் அமெரிக்கா என்று அழைக்கப்பட்டது.

## இளவரசன் ஹென்றி

போர்ச்சுகீசிய இளவரசரும் ஆய்வாளருமான ஹென்றி கடல் பயணங்களை ஊக்குவித்தார். அவர் 1419 – ஆம் ஆண்டு போர்ச்சுகலில் உள்ள சாக்ரசில் முதல் கடல் பயணப் பள்ளியை நிறுவினார். கடல் பயணங்கள், நிலப்படத் தயாரிப்பு போன்ற துறைகளில் மாலுமிகளுக்குப் பயிற்சி அளிப்பது தான் இந்தப் பள்ளியின் முக்கிய நோக்கமாக இருந்தது. அவர் அட்லாண்டிக் தீவுகளின் கண்டுபிடிப்புகளுக்கும் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை ஆய்வுகளுக்கும் தலைமை தாங்கினார்.

## அமெரிக்கா என்ற பெயர் எப்படி வந்தது ?



1507 இல் மார்டின் வால்ட் சீமுள்ளர் வரைந்த உலக நிலப்படம்

பெர்த்தலோமியடயசிற்குப் பிறகு ஆசியாவுக்கான கடல்வழிப் பாதையைக் கண்டறிய முயன்றவர் கிறிஸ்டோபர் கொலம்பஸ் ஆவர். 1492 – இல் அவர் வட அமெரிக்காவின் அருகிலுள்ள பஹாமாஸ் தீவை அடைந்தார். அவர் தான் கண்டுபிடித்த பகுதி இந்தியா என்று நினைத்தார். பின்னர், இன்னொரு இத்தாலிய பயணியான அமெரிகோ வெஸ்புசி இது ஒரு புதிய கண்டம் என அடையாளம் கண்டுகொண்டார். அவர் இந்தப் பகுதியை 'புதிய உலகம்' என்று அழைத்தார். 1507– ஆம் ஆண்டில் ஜெர்மனி நிலப்படத் தயாரிப்பாளரான மார்ட்டின் வால்ட் சீமுள்ளர் அமெரிகோ வெஸ்புசியின் பெயருடன் இணைத்து இந்தப் பகுதிகளுக்கு அமெரிக்கா என்ற பெயரை வழங்கினார்.

இந்தக் காலகட்டத்தில் உள்ள பிற முக்கியமான புவியியல் கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நபர்கள் | கண்டுபிடிப்புகள் |
|---|---|
| பெட்ரோ அல்வாரஸ் கப்ரால் | பிரேசில் |
| பெர்டினன்ட் மெகல்லன் | முதல் முதலாகக் கடல் வழியாகப் பூமியைச் சுற்றி வந்தார். |
| ஜான் காபோட் | நியூபவுண்ட்லாந்து |

தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் புவியியல் கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய அட்டவணையை விரிவுப்படுத்தவும்.

புவியியல் கண்டுபிடிப்புகள் பல முக்கியமான பின் விளைவுகளை ஏற்படுத்தின. அவை எவை எனப் பார்ப்போம்.

### முக்கோணவர்த்தகம்

அட்லாண்டிக் முக்கோண வர்த்தகத்தில் ஐரோப்பாவில் உள்ள உற்பத்திப் பொருட்கள் ஆப்பிரிக்காவிற்குக் கொண்டு சென்று விற்றனர். அங்கிருந்து அடிமைகளை வாங்கி அமெரிக்காவில் கொண்டு சென்று விற்பனை செய்தனர், அமெரிக்காவில் இருந்து சர்க்கரை, திராட்சைரசம், பருத்தி போன்றவற்றை ஐரோப்பாவிற்கும் கொண்டு சென்றனர். இவ்வாறு மூன்று கண்டங்களையும் இணைத்த வியாபாரமே முக்கோண வர்த்தகம். (நிலப்படம் 4.4 ஐ உற்றுநோக்கவும்).




நிலப்படம் 4.4

- அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா போன்ற கண்டங்களில் பயணம் செய்வதற்கான மிக முக்கியமான பாதையாக அட்லாண்டிக் கடற்கரை மாறியது. இதன் விளைவாக மத்திய தரைக்கடல் வழியான வியாபாரம் வீழ்ச்சி அடையவும், அட்லாண்டிக் கடற்கரை வழியான வியாபாரம் செழிப்படையவும் செய்தது.
- அமெரிக்கா, ஆப்பிரிக்கா ஆசியா கண்டங்களின் பல பகுதிகளும் ஐரோப்பாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.
- ஆசியாவின் நல்ல மிளகு உள்ளிட்ட வாசனைத் திரவியங்களின் வியாபாரம் ஐரோப்பாவின் குத்தையாக மாறுவதற்கான முயற்சி ஆரம்பமானது.
- தென் அமெரிக்காவிலிருந்து அதிக அளவு தங்கமும் வெள்ளியும் ஐரோப்பாவிற்கு வந்தன. அவற்றில் ஒரு பகுதி இந்தியாவிற்கும் வந்தது.
- ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகியவை ஈடுபட்ட முக்கோண வர்த்தகத்தின் (Triangular Trade) வளர்ச்சி.
- ஐரோப்பாவில் தங்கம் மற்றும் வெள்ளி அதிகமாக வந்ததால் நாணய பயன்பாட்டின் (Monetisation) விகிதம் அதிகரித்தது.

படிப்படியாக போர்ச்சுகல், ஸ்பெயின் போன்ற நாடுகளின் வணிக ஆதிக்கம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் அந்த இடத்தைக் கைப்பற்றின. இந்த நாடுகளுக்கு

இடையேயான போட்டிகளின் விளைவாக நெதர்லாந்தைப் பின்தள்ளி இங்கிலாந்தும் பிரான்சும் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் காலனிகளை நிறுவின. ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலின் கட்டுப்பாட்டில் இருந்த அமெரிக்கப் பகுதிகளே பின்னர் லத்தீன் அமெரிக்கா (Latin America) என அறியப்பட்டது. காலனி ஆதிக்கத்தின் வாயிலாகப் பொருளாதார முன்னேற்றத்தை அடைய இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே நடைபெற்ற போட்டிகளுக்குப் பிற்கால உலகம் சாட்சியானது.

நிலப்படம் மற்றும் படங்களின் உதவியுடன் கடல் பயணங்களின் விளைவுகள் மற்றும் வியாபார ஆதிக்கத்தில் அவை ஏற்படுத்திய மாற்றங்கள் போன்றவற்றை உட்படுத்தி ஒரு டிஜிட்டல் ஆல்பத்தைத் தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

நிலப்படத்தைக் (4.5) கவனியுங்கள்.




நிலப்படம் 4.5

மேலே கொடுக்கப்பட்டுள்ள நிலப்படத்தில் (4.5) இருந்து பல்வேறு கண்டங்களில் ஐரோப்பிய நாடுகள் நிறுவிய காலனிகளைக் கண்டறிந்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் அவற்றைக் குறிக்கவும். மேலும், நிலப்படத் தொகுப்பின் உதவியுடன் அதிகமான காலனிகளைக் கண்டறிந்து அட்டவணையை விரிவுப்படுத்தவும்.

| நாடுகள் | காலனிகள் | | |
|---|---|---|---|
| | ஆசியா | ஆப்பிரிக்கா | அமெரிக்கா |
| போர்ச்சுகல் | | | |
| ஸ்பெயின் | | | |
| நெதர்லாந்து | | | |
| பிரான்ஸ் | | | |
| இங்கிலாந்து | | | |

## மெர்க்கண்டலிசம்

*1499 – இல் இந்தியாவிலிருந்து திரும்பி வந்த வாஸ்கோடகாமாவுக்கு அரசர் மானுவலும் அவரது அரசவையும் அளித்த வரவேற்பின் போது, அரசவை உறுப்பினரான விமியோசோ பிரபு வாஸ்கோடகாமாவிடம், "இந்தியாவிலிருந்து நமக்கு என்னென்ன பொருட்கள் கிடைக்கும், அதற்குப் பதிலாக, இந்தியர்களுக்கு வேண்டியது என்ன"? என்று கேட்டார். நல்லமிளகு, இலவங்கப்பட்டை, இஞ்சி, குந்திரிக்கம், கஸ்தூரி போன்றவை இந்தியாவிலிருந்து கிடைக்கும் எனவும், தங்கம், வெள்ளி, வெல்வெட், மற்றும் ஸ்கார்லெட் துணி போன்றவை அதற்குப் பதிலாக இந்தியர்களுக்கு வேண்டும் எனவும் வாஸ்கோடகாமா பதிலளித்தார். தொடர்ந்து பிரபு "அப்படியெனில் அவர்களே நம்மைக் கண்டுபிடித்தனர் என நான் நினைக்கிறேன்" என்று பதிலளித்தார்.*

*C.R.Boxer, Portuguese Conquest and Commerce in Southern Asia: 1500-1750,(Variorum), Hampshire, 1985, p. ix*

*(சுதந்திர மொழிபெயர்ப்பு)*

வாஸ்கோடகாமாவிற்கும் விமியோசோ பிரபுவிற்கும் இடையே நடைபெற்ற உரையாடலைக் கவனித்தீர்கள் அல்லவா. பிரபு இவ்வாறு ஏன் கூறினார்? நாம் ஆராய்வோம்.

அக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரக் கொள்கை தங்கம் மற்றும் வெள்ளியை வாங்குவதாக இருந்தன. தங்கமும் வெள்ளியும் இந்தியர்களுக்குக் கொடுக்க வேண்டும் என வாஸ்கோடகாமாவிடமிருந்து தெரிந்து கொண்ட போதுதான் பிரபு இவ்வாறு பதிலளித்தார். வியாபாரத்தின் வாயிலாகத் தங்கம் மற்றும் வெள்ளியைப் பெறுவதை வலியுறுத்திய அக்காலப் பொருளாதாரக் கொள்கை மெர்க்கண்டலிசம் (Mercantilism) என அறியப்படுகிறது.

இந்தக் கொள்கையின்படி ஒரு நாட்டின் செல்வம் என்பது அந்நாட்டின் கையிலிருக்கும் தங்கம் மற்றும் வெள்ளியின் அடிப்படையில் தான் கணக்கிடப்படுகிறது. இந்தக் கொள்கையைப் பின்பற்றிய நாடுகள் தங்கம் மற்றும் வெள்ளியின் வடிவில் செல்வத்தைச் சேமிக்க ஆர்வமாக இருந்தன. தங்கள் நாட்டிற்குள் இறக்குமதியைக் குறைக்கவும், ஏற்றுமதியை அதிகரிக்கவும் செய்து தங்களிடம் இருக்கும் செல்வத்தை (தங்கம் மற்றும் வெள்ளி) இழந்து போகாமல் பாதுகாக்கவும், பிற நாடுகளிலிருந்து இயன்றவரை அதிக அளவு செல்வத்தைப் பெற்றுக் கொள்ளவும் இயலும் என்பதே மெர்க்கண்டலிசக் கொள்கையின் தனித்தன்மை ஆகும்.

### புல்லியன் நாணயம் (Bullion Coin)

செல்வமாக மதிப்பிடப்பட்ட தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் புல்லியன் (Bullion) என அழைக்கப்பட்டன. புல்லியன் நாணயத்தில் அடங்கியுள்ள உலோகத்தின் அளவும் அதன் மதிப்புமே பரிமாற்றத்திற்குக் கணக்கிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு தங்க நாணயத்தில் உள்ள தங்கத்தின் மதிப்பு அதன் பரிமாற்ற மதிப்பாகக் கணக்கிடுவதே புல்லியன் முறை.

மெர்க்கண்டலிசக் கொள்கையின் சிறப்பம்சங்கள் பற்றி விவாதித்துக் குறிப்பு தயார் செய்யவும்.

## காலனித்துவ கொள்கைகள்

பிற காலனிகளிலிருந்து இயன்றவரை அதிகபட்ச செல்வத்தைத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஆதிக்க நாடுகள் நடைமுறைப்படுத்தும் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் காலனித்துவ

கொள்கைகள் (Colonial Policies) என அழைக்கப்படுகின்றன. போர்ச்சுகீசியர்களின் காலனித்துவக் கொள்கையின் முக்கிய நோக்கம் ஆசியாவில் உள்ள வாசனைத் திரவியங்களின் வியாபாரக் குத்தகையை அரேபியர்களிடமிருந்து கைப்பற்ற வேண்டும் என்பதாக இருந்தது. இந்தக் கொள்கையின்படி, காலனிகளில் நடைபெற்றிருந்த வியாபாரம் போர்ச்சுகீசிய மன்னரின் குத்தகையாக மாறியது. பிற ஐரோப்பிய நாடுகளை இந்த வியாபாரத்திலிருந்து விலக்கி வைக்கவும் முயன்றனர். இதற்காக, அவர்கள் போர்ச்சுகீசியர்கள் அல்லாத ஐரோப்பியர்களைப் போர்ச்சுகீசியக் கப்பல்களில் பயணம் செய்ய அனுமதிக்கவில்லை.

ஸ்பெயின் தனது காலனிகளை அரசரின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தன. அமெரிக்காவில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளியை இயன்றவரை ஸ்பெயினுக்குக் கொண்டு வருவதற்கு முயன்றனர். டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் கூட்டுப்பங்கு நிறுவனங்கள் வழியாகத்தான் வியாபாரம் செய்து வந்தனர். ஆனால் அரசர்கள் நேரடியாகப் போர்ச்சுகல் மற்றும் ஸ்பெயின் காலனிகளுடன் வியாபாரம் செய்திருந்தனர். அரசர்கள் வியாபாரத்தின் வாயிலாக அடைந்த பொருளாதார இலாபத்தை அரண்மனைகளைக் கட்டுவதற்கும், அழகுபடுத்துவதற்கும் செலவிட்டனர். நிறுவனங்கள் தாங்கள் அடைந்த இலாபத்தை மீண்டும் வியாபாரத்தில் முதலீடு செய்து அதிக வருவாயைப் பெற்றுக்கொண்டனர். இது இங்கிலாந்தில் தொழில்கள் துவங்குவதற்கு முக்கிய பங்கு வகித்தன.

**கூட்டுப்பங்கு நிறுவனம்**

மூலதனத்தை ஒருங்கிணைப்பதற்கு (Union of Capital) முக்கியத்துவம் அளித்து உருவாக்கப்படுபவையே கூட்டுப்பங்கு நிறுவனங்கள். அவை பல்வேறு உறைவிடங்களிலிருந்து மூலதனத்தை ஒன்றிணைத்து முதலீட்டிற்கு வசதியை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு முதலீட்டாளர்களுக்கும் இதில் பங்கு உண்டு.

'செல்வத்தின் முறையான விநியோகம் இங்கிலாந்தில் தொழில்மயமாக்கலுக்கு உதவியது'. கலந்துரையாடல் செய்து குறிப்பு தயார் செய்யவும்.

## காலனிமயமாக்கலும் உள்நாட்டு மக்களும்

*கப்பலை அடைந்த நான் சங்கிலியால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு மிக அவலத்தையும், துயரத்தையும் மட்டுமே பிரதிபலிக்கின்ற முகபாவனை உடைய ஏராளம் கருப்பு இன மக்களைக் கண்டேன். டெக்கிற்குத் தூக்கி எறியப்பட்ட எனது மூக்கில் வாழ் நாளிலே மிகவும் கடுமையான துர்நாற்றம் புகுந்தது. இதனால் சாப்பிட முடியாமல் இறந்து போக ஆசைப்பட்ட என்னை ஒரு வெள்ளைக்காரன் மேல்நோக்கிப் படுக்க வைத்து என் கால்களைக் கட்டினான். இன்னொருவர் என்னைக் கொடூரமான சாட்டையால் அடித்தார்.*

*ஒருநாள் எங்களுடன் இருந்தவர்களில் ஒன்றாகச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட இருவர் இந்தத் துயரமான வாழ்க்கையை விட மரணத்தை விரும்பி கடலில் குதித்தனர். நோயின் காரணமாகச் சங்கிலி இல்லாமல் இருந்த இன்னொரு நபரும் அவர்களுக்குப் பின்னால் கடலில் குதித்தார். அவர்களைப் பின் தொடர விரும்பிய பலர் கப்பல் அதிகாரிகள் தடுத்து நிறுத்தியதால் மட்டுமே அவ்வாறு செய்ய முடியவில்லை. முதல் இருவரும் நீரில் மூழ்கி இறந்தனர். ஆனால் மூன்றாவது நபரைப் பிடித்த அதிகாரிகள் அவன் மரணத்தை விரும்பியதற்காகச் சாட்டையால் அடித்தனர்.*

*(Western Civilization Beyond Boundaries Noble, Strauss, Osheim, Neuschel, Accampo, Roberts, Cohen)*

*(சுதந்திர மொழிபெயர்ப்பு)*



மெக்சிக்கோவில் (அமெரிக்கா கண்டம்) அஷ்டக்குகளின் தலைநகரான டெனோசீடிட்லானுக்கு (Tenochtitlan), ஸ்பெயின் நாட்டு ஹெர்னன் கோர்ட்டஸ் மற்றும் அவரது குழுவினரும் வந்தடைந்த காட்சி தான் படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. (பாடத்தின் ஆரம்பத்தில் இந்தப் படத்தைக் காணலாம்). உள்நாட்டவர்கள் அவர்களுக்கு உணவு மற்றும் பரிசுகளை வழங்குகிறார்கள். படத்தில் ஹெர்னன் கோர்ட்டஸுக்கு அருகில் நிற்பவர் உள்நாட்டு மொழிபெயர்ப்பாளரான டோனாமரீனா. இவ்விதம் மொழிபெயர்ப்பாளர்களின் உதவியுடன் ஐரோப்பியர்கள் உள்நாட்டவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

ஐரோப்பிய அடிமை கப்பலில் இருந்து தப்பிய ஒலௌதா இக்கியானோ என்ற ஆப்பிரிக்க நாட்டு மனிதனுடைய பதிவைத்தான் நீங்கள் படித்தீர்கள். ஐரோப்பியர்களின் காலனி ஆதிக்கம் உள்நாட்டு மக்கள் மேல் ஏற்படுத்திய விளைவுகளில் ஒன்று ஆப்பிரிக்காவில் இருந்த அடிமைத்தனமும் அடிமை வியாபாரமும் ஆகும்.

காலனி ஆதிக்கத்தின் பிற விளைவுகள் எவை என்று பார்ப்போம்?

- காலனிகளின் செல்வம் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒழுகியது.
- உள்நாட்டு மக்கள் தங்கள் பகுதிகளின் மீதான பொருளாதார, அரசியல் அதிகாரத்தை இழந்தனர்.
- காலனிகளில் உள்நாட்டு கலாச்சாரங்கள் வீழ்ச்சியைச் சந்தித்தன.
- காலனிகளில் மேற்கத்திய வாழ்க்கை முறை பரவியது.
- கிறிஸ்தவ மதம் காலனிகளில் பரப்பப்பட்டது.

## புதிய உலகம், மாறுகின்ற பொருளாதார முறைகள்

புவியியல் ஆய்வுகள் உலகளாவிய வணிகத்துறையில் பெரும் மாற்றங்களுக்கு வழிவகுத்தன என்பதை நாம் விவாதித்தோம் அல்லவா. முன்பிருந்தே வணிகத்துறையில் பணியாற்றியவர்கள் இதன் மூலம் பெரும் பணக்காரர்களாக மாறினர். இவர்களை வணிக முதலாளிகள் என்று அழைத்தனர். இந்தப் பொருளாதார அமைப்பு வணிக முதலாளித்துவம் (Merchant Capitalism) என்று அழைக்கப்படுகிறது.

வணிக முதலாளிகள் கிராமப்புறங்களில் வசித்திருந்த கைவினைக்கலைஞர்களுக்குக் கச்சாப்பொருட்களை விநியோகம் செய்தனர். கைவினைக்கலைஞர்கள் தங்களது வீடுகளை மையமாகக் கொண்டு உற்பத்தியும் செய்திருந்தனர். கைவினைக் கலைஞர்களுக்கு அவர்களின் சேவைக்கு ஊதியம் அளித்தபின், இவர்கள் இந்த உற்பத்தி பொருட்களைச் சேகரித்து விற்பனை செய்து இலாபத்தை ஈட்டினர். இவ்வாறு வணிக முதலாளிகள் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையே உள்ள இடைத்தரகர்களாக மாறினர்.

காலனிமயமாக்கலின் வாயிலாகக் கிடைத்த செல்வத்தைப் பயன்படுத்தி இங்கிலாந்து தொழிற்சாலைகளை ஆரம்பித்தது என முன்னரே குறிப்பிடப்பட்டிருந்தது அல்லவா. இவ்வாறு செல்வத்தை முதலீடு செய்தவர்கள் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களாக மாறி பெரும் இலாபத்தை ஈட்டினர். இதன் மூலம் வணிக முதலாளித்துவம் தொழில்துறை முதலாளித்துவத்திற்கு (Industrial Capitalism) வழி வகுத்தது.

## தொழிற்புரட்சியை நோக்கி

*பிரெஞ்சு புரட்சி ஐரோப்பாவில் போரினுடைய உச்சக்கட்டத்திற்கு வழிமாறிய நேரத்தில், கால்வாய்க்கு அப்பால் (இங்கிலீஷ் கால்வாய்) பகலில் சூரியனைத் தடுத்துக் கொண்டும் இரவில் வானத்தை இருளடையச் செய்தும் இங்கிலாந்தின் தொழிற்சாலைகளில் உள்ள புகைப்போக்கிகளிலிருந்து நெருப்பும் புகையும் உயர்ந்தன.*



இங்கிலாந்திலுள்ள இரும்புத் தொழிற்சாலை

*(Western Civilization Beyond Boundaries Noble, Strauss, Osheim, Neuschel, Accampo, Roberts, Cohen)*

*(சுதந்திர மொழிபெயர்ப்பு)*

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் எழுந்த தொழிற்சாலைகளைப் பற்றிய குறிப்பே மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் உள்ளது. இந்தத் தொழிற்சாலைகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய அளவில் உற்பத்தி செய்தன. உற்பத்தித் துறையில் புதிய இயந்திரங்களின் அறிமுகம் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன. 1780–க்கும் 1850–க்கும் இடைப்பட்ட காலத்தில் உற்பத்தித் துறையில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்களே தொழிற்புரட்சி (Industrial Revolution) என்று அழைக்கப்படுகிறது. துணி உற்பத்தித் துறையில் தான் தொழிற்புரட்சி ஆரம்பமானது.

தொழில்துறை முதலாளித்துவம் வணிக முதலாளித்துவ முறையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்தவும்.

தொழில் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களை நாம் ஆராய்வோம்.

- உற்பத்தி இயந்திர மயமாக்கப்பட்டது.
- மேம்பட்ட இரும்பு உருக்கு தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்ததன் அதன் விளைவாகச் சிறந்த கருவிகள் தயாரிக்கப்பட்டன.
- ஆற்றலின் மூலமாக நீராவி பயன்படுத்தப்பட்டது.
- போக்குவரத்து வசதிகள் வளர்ச்சி அடைந்தன.
- உற்பத்தி குடிசைகளிலிருந்து தொழிற்சாலைகளுக்கு மாறியது.

### வேளாண்புரட்சி (Agrarian Revolution)

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வேளாண்துறையில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களைக் குறிப்பிடவே வேளாண்புரட்சி என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. வேளாண்புரட்சியுடன் தொடர்புடைய முக்கிய மாற்றங்கள்.

- சிறு வேளாண் நிலங்களை ஒன்றிணைத்து பெரிய வேளாண் நிலங்களாக(Enclosure Movement). மாற்றியமைத்து வேலி கட்டி பாதுகாக்கப்பட்டன.
- மாற்றுப்பயிர் முறை தொடங்கப்பட்டது.
- நவீன வேளாண் கருவிகளின் பயன்பாடு

இதன் பலனாக உணவு உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டது.

வேளாண்புரட்சி மனித வாழ்க்கையில் நேர்மறை மற்றும் எதிர்மறையான மாற்றங்களைக் கொண்டு வந்தன. அவை எவை எனப் பார்க்கலாம்.

| நன்மைகள் | தீமைகள் |
|---|---|
| தொழிற்சாலைகளின் தோற்றம் | தொழிலாளர்களைச் சுரண்டல் செய்தல் |
| உற்பத்தி அதிகரிப்பு | வறுமை, தொற்று நோய்கள் |
| புதிய தொழில் வாய்ப்புகள் | பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நீண்ட வேலை நேரமும் குறைந்த ஊதியமும் |
| நகரங்களின் தோற்றம் மற்றும் பரவல் | சேரிகளின் தோற்றம் |
| நகர வாழ்க்கை | நெரிசலான மற்றும் சுகாதாரமற்ற நகரங்கள் |
| மேம்பட்ட வாழ்க்கை முறைகள் | நகரங்களில் தொழிலாளர்களின் துயரம் நிறைந்த வாழ்க்கை |

## புனித கில்ஸ்




புனித கில்ஸ் சேரியின் படம்

லண்டன் மாநகரில் உள்ள புனித கில்ஸ் சேரியின் வறுமையைக் குறிக்கும் படம் தான் இது. "சுத்தம் செய்யப்படாத குழந்தைகள், சீவி ஒதுக்கி வைக்காத நீண்ட அசுத்தமான கூந்தல் கொண்டவர்கள், கிழிந்த ஆடைகள் அணிந்தவர்கள், புகை பிடிப்பவர்கள், பெரும்பாலும் அயர்லாந்திலிருந்து வந்த சோர்வாகக் காணப்படும் ஆண்கள்; காலணி மற்றும் கால் உறைகள் இல்லாத, பெரும்பாலும் ஒரு குழந்தையை மார்போடு அணைத்து, இடுப்போடு சேர்த்து ஒரு கயிறினால் கட்டப்பட்ட ஆடையை மட்டும் அணிந்த பெண்கள், ஓநாய்களைப் போன்ற நாய்கள்; அழுகிய காய்கறிகள் சிதறிக்கிடக்கும் நடைபாதைகள், உயரம் குறைந்த வீடுகள், தெருவின் குறுக்காகப் போடப்பட்ட லினன்; வேலையின் இடையில் சிக்கித் தவிக்கும் மக்கள், சூட்டிங் ஜாக்கெட்டுகளின் எச்சங்களின் இடையிலும், ஜன்னல் கதவுகளில் சாய்ந்தும் முற்றத்தையும் பாதையையும் தடைபடுத்தி ஓய்வு எடுப்பவர்கள்; அவர்களைச் சுற்றிலும் தூங்காததால் சோர்வடைந்து பலவீனமாகக் காணப்படும் சிறுவர்கள்." பொது மக்களும் அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் இடையிலான தொடர்பு ஒருபோதும் இவ்வாறு மோசமாக இருந்ததில்லை.

*(Western Civilization Beyond Boundaries Noble, Strauss, Osheim, Neuschel, Accampo, Roberts, Cohen)*

*(சுதந்திர மொழிபெயர்ப்பு)*

தொழில் மயமாக்கலின் தீமைகளை நீங்கள் கவனித்தீர்கள் அல்லவா. தொழிலாளி மற்றும் முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக பல்வேறு விதமான எதிர்ப்புகளும் கருத்துக்களும் எழுந்தன. இதில் சோஷியலிஸ்ட் சிந்தனைகள் முக்கியமானதாகும். செல்வங்களின் சரியான விநியோகம் மற்றும் உற்பத்தியாளர்களின் பொதுவான உரிமை ஆகியவைதான் சோஷியலிசக் கருத்துகளின் மையமாக இருந்தன. காரல்மார்க்சும், ஃபெடரிக் ஏங்கல்சும் இணைந்து ஆரம்பக் காலத்தில் ஒரு கருத்தாகவோ கனவாகவோ இருந்த சோஷியலிசத்தை நடைமுறை, அறிவியல் பூர்வமான ஒரு கருத்தியலாக மாற்றினார்கள்.



கார்ல் மார்கஸ்



தொழில் புரட்சியின் நன்மைகளும் தீமைகளும் என்ற தலைப்பில் விவாதம் நடத்தவும்.

## ஏகாதிபத்தியம்

ஆங்கில நையாண்டி இதழான 'பஞ்சு' 1906 – இல் வெளியிட்ட கார்ட்டூன் தான் இது. பெல்ஜிய நாட்டு மன்னர் லியோபோல்ட் ஒரு காங்கோ நாட்டு மனிதனைச் சர்ப்பத்தின் வடிவில் இரப்பர் சுருளைப்போன்று பிணைத்திருப்பதையே இந்தக் கார்ட்டூனில் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடாக இருந்த பெல்ஜியம், ஆப்பிரிக்காவின் காங்கோவில் ஆரம்பித்த இரப்பர் விவசாயம் அங்கு வாழும் மக்களை எவ்விதம் பாதித்தது என்பதைத்தான் கார்ட்டூன் வெளிப்படுத்துகிறது.

- பெல்ஜியம் ஆப்பிரிக்கா நாடான காங்கோவில் இரப்பர் விவசாயம் ஆரம்பித்தது ஏன்?
- காங்கோவை இது எவ்வாறெல்லாம் பாதித்திருக்கலாம்?
- பெல்ஜியம் மட்டுமே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டதா?

நாம் ஆராய்வோம்.



பெல்ஜிய காங்கோவில் உள்ள இரப்பர் சுருள்கள்

தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகரித்ததுடன் இவற்றிற்குத் தேவையான கச்சாப் பொருட்களைத் தொழில்மயமான நாடுகளிலிருந்து முழுமையாகக் கண்டடைய இயலவில்லை. இதன் விளைவாக பெல்ஜியம் போன்ற தொழில்மயமான நாடுகள்

காலனிகளைத் தங்களுக்குத் தேவையான ரப்பர் போன்ற கச்சாப்பொருட்களைச் சேகரிக்கும் மையங்களாக மாற்றின.

**ஏகாதிபத்தியம்**

ஒரு நாடு அதன் எல்லைக்கு வெளியே உள்ள பிற பகுதிகளின் மீது நிறுவும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக மேலாதிக்கம் ஏகாதிபத்தியம் எனப்படும்.

உற்பத்தியை அதிகரித்தும் தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைத்தும் இலாபத்தை ஈட்ட தொழில் முதலாளிகள் முயன்றனர். ஊதியக் குறைவு மக்களின் உற்பத்திப் பொருட்கள் வாங்கும் திறனைக் குறைத்தது. இதனால், அந்தந்த நாடுகளில் உற்பத்தி செய்த பொருட்களை முழுமையாக விற்பனை செய்ய இயலவில்லை. இதனால் தொழில்மயமான நாடுகள் சந்தைகளைத் தேட ஆரம்பித்தன. அவர்கள் காலனிகளில் இந்தச் சந்தைகளைக் கண்டடைந்தனர். சுருங்கக்கூறின், ஐரோப்பியர்கள் காலனிகளை மூலப்பொருட்களைச் சேகரிக்கும் இடங்களாகவும் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தைகளாகவும் மாற்றினர். இதற்காக அங்கு அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இது ஏகாதிபத்தியத்திற்கு (Imperialism) வழி வகுத்தது.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை ஏகாதிபத்தியம் எவ்வாறு பாதித்தது? விவாதிக்கவும்.

19–ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் இங்கிலாந்தும் பிரான்சும் மிகப்பெரிய ஏகாதிபத்திய சக்திகளாக மாறின. உலகின் பெரும்பகுதியும் இந்த இரு சக்திகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன. விரைவில் ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் புதிய ஏகாதிபத்திய நாடுகளாக உருவெடுத்தன. இந்தப் புதிய ஏகாதிபத்திய நாடுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் தங்கள் காலனிகளைப் பரப்ப முயற்சி செய்தன. இது பழைய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் புதிய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் இடையே போட்டியை ஏற்படுத்தின. இது இருபதாம் நூற்றாண்டின் உலக வரலாற்றின் போக்கை பாதித்தது மட்டுமல்லாமல், மோதல்களுக்கும் வழி வகுத்தன அவை எவை என்பதை ஆராய்வோம்.

## முதல் உலகப்போர்

"1992 ஜூன் 28, அந்த ஆண்டின் தொடர்ந்துள்ள நாட்களில் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் பறிபோன பால்கன் போரின் மையமாக இருந்த சாராயாவோவிற்குப் பிரெஞ்சு ஜனாதிபதியான மீட்டரான் முன்கூட்டி அறிவிக்காமல் எதிர்பாராதவிதமாக வருகை தந்தார். பிரஞ்சு ஜனாதிபதி சாராயாவிற்கு வருகைதர ஏன் அந்தக் குறிப்பிட்ட நாளைத் தேர்ந்தெடுத்தார்? காரணம், ஜூன் 28, என்பது ஆஸ்திரியா – ஹங்கேரியின் ஆர்ச் டியூக்கான பிரான்சிஸ் ஃபெர்டினனட் சாராயாவோவில் வைத்து 1914 –இல் படுகொலை செய்யப்பட்ட நினைவு நாளாக இருந்தது...."

*The Age of Extremes The Short Twentieth Century 1914-1991, Eric Hobsbawm*

*(சுதந்திர மொழிபெயர்ப்பு)*

பிரெஞ்சு ஜனாதிபதி சாராயாவோவில் நடத்திய பயணத்தைக் குறித்து புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான எரிக் ஹோப்ஸ்போம் விளக்கும் பகுதியே இது. 1914 முதல் 1918 வரை நடைபெற்ற முதல் உலகப்போருக்குக் காரணமான படுகொலையைத்தான் அவர் நினைவுப் படுத்துகிறார். உலக நாடுகள் அனைத்தும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கேற்ற முதல் போர் தான் இது. இந்தப் போருக்கு வழிவகுத்த பிற காரணங்கள் எவை எனப் பார்ப்போம்.



எரிக் ஹோப்ஸ்போம்

### ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான போட்டி

ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலான போட்டி முன்னர் குறிப்பிடப்பட்டிருந்ததல்லவா. புதிய ஏகாதிபத்திய நாடுகள் பழைய ஏகாதிபத்திய நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்றினால் மட்டுமே இந்த முயற்சியில் வெற்றி பெற முடியும். பொருளாதாரம், தொழில்துறைகளில் ஜெர்மனி அடைந்த அற்புதகரமான முன்னேற்றம் பிரான்சையும் இங்கிலாந்தையும் கவலையடையச் செய்தன. ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள பகுதிகள் இங்கிலாந்து மற்றும் பிரான்சின் காலனிகளாக இருந்ததால், துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்த ஆட்டோமன் பேரரசின் பகுதிகளின் மேல் ஜெர்மனியின் பார்வை இருந்தது. இதற்காக அவர்கள் பெர்லின் – பாக்தாத் இரயில்வே பாதையைத் திட்டமிட்டனர். இது தங்கள் செல்வாக்குடைய பகுதிகளின் பாதுகாப்பைப் பாதிப்படையச் செய்யலாம் என இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகள் கவலைப்பட்டன. இதன் விளைவாக மோதல்களும் பகைமையும் வளர்ந்தன.

### தீவிர தேசியம்

தனது சொந்த நாட்டின் மீதான அளவு கடந்த உணர்வுப்பூர்வமான அன்பும் அதனுடைய மகத்துவப்படுத்தலுமே தீவிர தேசியம். பெரும்பாலும் இது இனக்கொள்கையோடு தொடர்புடையதாகும். ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழும் பகுதிகள் அனைத்தும் தங்களுடையது என்ற வாதத்தை பல நாடுகளும் முன்வைத்தன. இந்த நாடுகள் இனக்கொள்கையைப் பயன்படுத்தி பிற பகுதிகளைக் கைப்பற்றித் தங்கள் நாட்டின் பரப்பளவை விரிவுபடுத்த முயன்றன. தீவிர தேசியம் ஜெர்மனி, செர்பியா போன்ற நாடுகளில் ஆபத்தான நிலைக்கு வளர்ந்தது. பான் – ஸ்லாவ், பான் – ஜெர்மனி இயக்கங்கள் இத்தகைய தீவிர தேசிய இயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

#### பான் – ஸ்லாவ் இயக்கம்

கிழக்கு ஐரோப்பாவில் ஸ்லாவ் இனத்தவர்கள் வாழும் பகுதிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்த இயக்கம் தான் இது. பால்க்கன் நாடான செர்பியா இதற்குத் தலைமை தாங்கியது. இந்த அமைப்பை ரஷ்யா ஆதரித்தது.

#### பான் – ஜெர்மனி இயக்கம்

ஜெர்மனியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் தான் இது. மத்திய ஐரோப்பாவிலும் பால்க்கன் பகுதியிலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக டீடோணிக் இனத்தவரை ஒருங்கிணைப்பதுதான் இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

## இராணுவக் கூட்டணிகளின் தோற்றம்

காலனிகளுக்கான போட்டியும் தீவிர தேசியமும் 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே ஒருவருக்கொருவர் பயத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தின. இது நாடுகள் இராணுவக் கூட்டணிகளை உருவாக்க வழி வகுத்தன. இதன் விளைவாக, இரண்டு முக்கியமான இராணுவக் கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. அவை முச்சக்தி உடன்பாடும் முக்கூட்டு உடன்பாடும் ஆகும்.

### இராணுவக் கூட்டணிகள்

- முச்சக்தி உடன்பாடு (Triple Alliance)
  - இத்தாலி
  - ஜெர்மனி
  - ஆஸ்திரியா – ஹங்கேரி
- முக்கூட்டு உடன்பாடு (Triple Entente)
  - இங்கிலாந்து
  - ரஷ்யா
  - பிரான்ஸ்



ஆர்ச் டியூக் பிரான்சிஸ் பெர்டினன்ட் கொல்லப்பட்ட காட்சி, ஒரு இத்தாலிய செய்தித் தாளில் வெளியிடப்பட்ட படம்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இந்த இரு கூட்டணிகளைச் சார்ந்த நாடுகளுக்கு இடையே மோதல்கள் நடைபெற்றன. ஒரு நாட்டையோ அந்த நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளையோ, காலனியையோ வேறு ஒரு நாடு கைப்பற்ற முயன்றது அந்த நாடுகளுக்கிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட வழிவகுத்தன. இராணுவக் கூட்டணிகளில் உறுப்பினர்களான ஏதாவது ஒரு நாடு ஈடுபட்ட மோதல்களில் பிற கூட்டணி உறுப்பினர்களும் பங்கேற்றதால் பிரச்சினைகள் வலுவடைந்தன.

பிரெஞ்சு ஜனாதிபதி மீட்டரான்ட் வருகை தந்த போஸ்னியாவின் தலைநகரான சாராயாவோவில் வைத்து ஆஸ்திரியா – ஹங்கேரியின் வாரிசு மன்னரான ஆர்ச் டியூக் பிரான்சிஸ் பெர்டினன்ட் படுகொலை செய்யப்பட்டதை முன்னர் குறிப்பிடப்பட்டிருந்ததல்லவா. அவர் செர்பிய குடிமகனான காவ்லோ பிரின்சப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார். செர்பியா மற்றும் ஆஸ்திரியாவிற்கு இடையே மோதல் நீடித்து இருந்ததால் இந்தப் படுகொலையில் செர்பியாவுக்கு பங்கு உண்டு என்று ஆஸ்திரியா குற்றம் சாட்டியது. பின்னர் 1914 ஜூலை 28– ஆம் நாள் ஆஸ்திரியா – ஹங்கேரி, செர்பியாவுக்கு எதிராகப் போரை அறிவித்தது. இருதரப்பிலும் கூட்டணி நாடுகள் அணி சேர்ந்ததால் இது உலகப் போராக மாறியது.

போரின் விளைவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பல இலட்சக்கணக்கான இராணுவ வீரர்களும் சாதாரண மக்களும் உயிரிழந்தனர்.

- வேளாண் மற்றும் தொழில்துறைகள் வீழ்ச்சியடைந்தன.
- ஐரோப்பிய மேலாதிக்கத்தின் வீழ்ச்சி ஆரம்பமானது.
- ஆசியா – ஆப்பிரிக்கா நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள் வலுவடைந்தன.
- சர்வதேச சங்கம் (League of Nations) உருவாக்கப்பட்டது.
- இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் சர்வாதிகார (Totalitarianism) ஆட்சிக்கு நேராகச் சென்றன.

**சர்வதேச சங்கம்**
(League of Nations)

உலக அமைதியைப் பாதுகாக்கவும் அனைத்து நாடுகளுக்கும் சுதந்திரத்தை உறுதிபடுத்தவும் ஒரு சர்வதேச அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை அமெரிக்கா ஜனாதிபதியான உட்ரோ வில்சன் முன்வைத்தார். இதன் அடிப்படையில் 1920 ஜனவரி 10–ஆம் நாள் உலக அமைதியையும் பாதுகாப்பையும் மீட்டெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பே சர்வதேச சங்கம் ஆகும்.

## ஐரோப்பாவில் சர்வாதிகாரத்தின் எழுச்சி

*2021 – ஆம் ஆண்டில் பிரான்ஸிஸ் போப்பாண்டவரைச் சந்தித்த நாசி கான்செண்ட்ரேஷன் முகாமில் இருந்து தப்பிய லிதியா மேக்சிமோவிக்சின் கையில், அவள் தனது மூன்றாவது வயதில் ஓஷ்விட்ஸ் சிறைச்சாலையில் வைத்து பச்சை குத்தப்பட்ட சிறைக்கைதி எண்ணில் அவர் முத்தமிட்டார். ஓஷ்விட்ஸில் வைத்து ஜோசப் மங்கலை என்ற மருத்துவரின் மிகக் கொடூரமான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட அந்தச் சிறு தேவதைக்கு ஒவ்வொரு நாளும் மரணத்தைச் சந்திக்க வேண்டியதாக இருந்தது. தனது உயிரைப் பணயம் வைத்து அவளது தாய் யாருக்கும் தெரியாமல் ஒளித்துக் கொண்டு வந்து கொடுத்த ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டு அந்தச் சிறுமி உயிர் பிழைத்து வந்தாள். ஓஷ்விட்ஸிலிருந்து விடுவிக்கப்பட்ட போது நான்கு வயது மட்டுமே ஆன அவளைக் காத்திருந்ததோ எங்கோ ஓடிப்போக கட்டாயப்படுத்தப்பட்ட அவளது அம்மாவுக்கான தேடுதலாக இருந்தது.*



ஓஷ்விட்ஸில் உள்ள நினைவுசின்னம்

*(சுதந்திர மொழிபெயர்ப்பு)*

ஓஷ்விட்ஸில் போலந்து நாசி கான்சன்ட்ரேஷன் முகாமிலிருந்து தப்பித்து வந்த லிதியா மேக்சிமோவிக்சின் வாழ்க்கைக் கதையே மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. எ லிட்டில் கேள் இன் ஓஷ்விட்ஸ் (A Little Girl in Auschwitz) என்ற நூலில் அவர் தனது அனுபவங்களை விவரிக்கிறார். நீங்கள் எப்போதாவது நாசிசம் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதன் வரலாற்றை ஆராய்வோம்.

முதல் உலகப் போர் ஐரோப்பாவில் ஏற்படுத்திய பொருளாதார – அரசியல் நிலையற்ற தன்மையின் விளைவாகச் சில நாடுகளில் சர்வாதிகாரத்தை (Totalitarianism) வலியுறுத்தும் இயக்கங்கள் தோன்றின. குடிமக்களின் தனி உரிமையை மதிக்காமல் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் அதிகாரம் தான் சர்வாதிகாரம். இந்தக் கருத்து

> **பாசிசம்**
>
> 'பாஸஸ்' என்ற லத்தீன் சொல்லிலிருந்து தான் 'பாசிசம்' என்ற சொல் உருவானது. ரோமப் பேரரசர்களின் அதிகாரத்தைக் குறிப்பிடுகின்ற 'ஒரு கட்டு கம்பும் அதன் மேல் ஒரு கோடாரியும்' என்பது தான் இதன் பொருள்.

நாட்டை அளவுக்கு அதிகமாகப் புகழ்த்தி, குடிமக்கள் உரிமைகள் இல்லாமல் நாட்டிற்காக வாழ வேண்டும் என தீர்மானம் செய்கின்றது. சர்வாதிகாரத்தின் சிறப்புகளை ஆராய்வோம்.

- மக்களாட்சியில் எதிர்ப்பு.
- சோஷியலிசத்துடன் கருத்து வேறுபாடு.
- ஏகாதிபத்திய ஆட்சியைப் புகழ்தல்.
- தீவிர தேசியம்.
- அரசியல் எதிரிகளை ஒழித்தல்.
- போரையும் வன்முறையையும் ஊக்குவித்தல்.

முதல் உலகப் போருக்கு பின் இத்தாலி மற்றும் ஜெர்மனியில் ஆட்சிக்கு வந்த சர்வாதிகார இயக்கங்களைக் குறித்துப் புரிந்து கொள்வோம்.

| இத்தாலி | ஜெர்மனி |
|---|---|
| • இத்தாலியில் 'பாசிசம்' (Fascism) என அழைக்கப்படுகிறது.<br>• நிறுவியவர் – பெனிட்டோ முசோலினி.<br>• 1922-ஆம் ஆண்டில் அதிகாரம் கைப்பற்றப்படும் எனப் பயமுறுத்தி தலைநகரமான ரோமில் பேரணி நடத்தினார்<br>• பேரணிக்குப் பின் ஆட்சிக்கு வந்தார்.<br>• 'கருப்புச் சட்டைக்காரர்கள்' (Black Shirts) என்ற இராணுவத்தை உருவாக்கினார்.<br>• பாசிசம் தவிர பிற கட்சிகளைத் தடை செய்தார்.<br>• சோஷியலிஸ்ட்டுகள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளை எதிரிகளாக அறிவித்தார்.<br><br>பெனிட்டோ முசோலினி | • ஜெர்மனியில் 'நாசிசம்'(Nazism) என அழைக்கப்படுகிறது.<br>• நிறுவியவர் – அடோல்ஃப் ஹிட்லர்<br>• 1923-இல் அதிகாரத்தைக் கைப்பற்ற பெர்லினில் ஒரு அணிவகுப்பை ஏற்பாடு செய்தார். தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.<br>• தேர்தல் வாயிலாக ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியை ஆரம்பித்தார்.<br>• தவிட்டுச் சட்டைக்காரர்கள்' (Brown Shirts) என்னும் இராணுவப் பிரிவை உருவாக்கினார்.<br>• 1933 – இல் நடைபெற்ற தேர்தலில் அவர் பெரும்பான்மையைப் பெறத் தவறினாலும் சூழ்ச்சியின் வாயிலாக ஆட்சிக்கு வந்தார்.<br>• கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள், பொதுவுடைமைவாதிகள், யூதர்கள் போன்றவர்களை அழிப்பதற்கான கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>• 'கஸ்ற்றப்போ' என்னும் இரகசிய காவல்படையைப் பயன்படுத்தி தகவல்கள் சேகரிக்கப்பட்டது<br>• ஹிட்லரின் ஆக்கிரமிப்பு இரண்டாம் உலகப் போருக்கு வழி வகுத்தது.<br><br>அடோல்ஃப் ஹிட்லர் |

சர்வாதிகாரம் குடிமக்களின் சுதந்திரத்திற்கும் உலக அமைதிக்கும் அச்சுறுத்தலாகக் காணப்பட்டது. கலந்துரையாடல் செய்து குறிப்பு தயாரிக்கவும்.

## மீண்டும் போரை நோக்கி

அன்புள்ள அம்மா,

எனக்குத் தெரிந்த அனைவரையும் விட எனது இறுதி எண்ணங்கள் மிக அதிகமாகத் தொடுவது எனது அம்மாவைத் தான் என எனக்குத் தெரிந்ததால் அவற்றை நான் அம்மாவுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். என் விதியை நான் தான் தேர்ந்தெடுத்தேன். அதனால் என் மரணத்திற்கு யாரையும் குறை கூற வேண்டாம்.

அம்மாவிற்கு என்ன எழுதுவது என்று தெரியவில்லை. ஏனென்றால், எனக்குச் சரியாகச் சிந்திக்க முடியும் என்றாலும், சரியான வார்த்தைகள் கிடைக்கவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் எனது பங்களிப்பு நான் சுயமாகத் தேர்ந்தெடுத்தது தான். ஆனால் வெற்றியை நெருங்கும் இந்த வேளையில் நான் இறந்து கொண்டிருக்கிறேன்.

ஸ்பார்ட்டக்கோ ஹோண்டநோட்

*The Age of Extremes The Short Twentieth Century 1914-1991, Eric Hobsbawm*

(சுதந்திர மொழிபெயர்ப்பு)

பிரெஞ்சு விடுதலைப் படையின் இத்தாலிய தன்னார்வ இராணுவ வீரனான ஸ்பார்ட்டக்கோ ஹோண்டநோட் இறப்பதற்கு முன் தனது அம்மாவுக்கு அனுப்பிய கடிதம் தான் இது. அவர் இரண்டாம் உலகப் போரில் தனது உயிரை இழந்தார். 1939 முதல் 1945 வரை நடைபெற்ற இந்தப் போரின் பின்னணியை நாம் ஆராய்வோம்.

### வெர்செயில்ஸ் உடன்படிக்கை

முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனி கூட்டணி நாடுகளுடன் கையொப்பமிட்ட ஒரு சமாதான உடன்படிக்கையே வெர்செயில்ஸ் உடன்படிக்கை. அதன் நிபந்தனைகள் இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்டன. இந்த உடன்படிக்கையின் படி ஜெர்மனி தனது காலனிகளையும் அது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பகுதிகளையும் இழந்தது. ஜெர்மனியை நிராயுதபாணியாகவும் போர் இழப்பீடாகப் பெரிய தொகையையும் ஜெர்மனியின் மேல் சுமத்தினர். சுருங்கக் கூறின், இரண்டாவது உலகப் போர் வெர்செயில்ஸ் உடன்படிக்கைக்கும் அதை வடிவமைத்தவர்களுக்கும் எதிராக ஜெர்மனி நடத்திய புரட்சி ஆகும்.



டேவிட் லோய்ட் ஜோர்ஜ் (இங்கிலாந்து) ஜோர்ஜ் க்ளமன்ஸ் (பிரான்ஸ்), உட்ரோ வில்சன் (அமெரிக்கா) – வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் சிற்பிகள்.

## சர்வதேச சங்கத்தின் தோல்வி

சர்வாதிகார நாடுகளுக்கு இடையே நடைபெற்ற சண்டைகளுக்கும் மோதல்களுக்கும் தீர்வு காண்பதற்கோ, சர்வதேசிய நிராயுதமற்ற முறையை நடைமுறைப்படுத்தவோ முதல் உலகப் போரின் போது உருவான சர்வதே சங்கத்திற்கு இயலவில்லை. ஜப்பான், இத்தாலி மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை நடத்திய போது அதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதில் சர்வ தேச சங்கம் தோல்வியடைந்தது.

## இராணுவக் கூட்டணிகளின் உருவாக்கம்

ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே நடைபெற்ற போட்டிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ள இராணுவக் கூட்டணிகளின் உருவாக்கத்திற்கு வழி வகுத்தன.

அச்சுத்தண்டு கூட்டணி (Axis Powers)
- இத்தாலி,
- ஜெர்மனி,
- ஜப்பான்

ஐக்கிய கூட்டணி (Allied Powers)
- இங்கிலாந்து
- சீனா
- பிரான்ஸ்

### மியூனிச் ஒப்பந்தம் (Munich Agreement)

செக்கோஸ்லோவாக்கியாவின் மிகவும் தொழில் மயமாக்கப்பட்ட பகுதியான சியூடட்டன்லாந்தின் மேல் ஹிட்லர் உரிமை கோரினார். பெரும்பான்மையான ஜெர்மானியர்கள் இங்கு வசிக்கின்றனர் என்பதே ஹிட்லரின் இவ்வாதத்திற்கான அடிப்படையாகும். ஹிட்லரின் இந்த வாதத்தை எதிர்ப்பதற்குப் பதிலாகப் பிரான்சும், பிரிட்டனும் 1938 – இல் ஜெர்மனியின் மியூனிச்சியில் வைத்து கையொப்பமிட்ட ஒப்பந்தத்தின்படி சியூடட்டன்லாந்தை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுத்தனர். இந்த ஒப்பந்தம் மியூனிச் ஒப்பந்தம் எனப்படும். இந்த ஒப்பந்தத்திற்குச் செக்கோஸ்லோவாக்கியாவின் ஒப்புதல் இருக்கவில்லை. அவர்களை ஆதரித்த சோவியத் யூனியனைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவுமில்லை.



மியூனிச் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பின் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்ற பிரதான மந்திரி நெவின் சேம்பர்லின் 'நமது காலகட்டத்தின் சமாதானம்' என ஒப்பந்தத்தைப் புகழ்ந்து மக்களிடம் உரையாற்றும் படம்.

பின்னர் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் ஐக்கிய கூட்டணிகளின் பகுதிகளாக மாறின.

## திருப்திப்படுத்தல் கொள்கை (Policy of Appeasement)

ரஷ்யப் புரட்சிக்குப் பின் நடைமுறைக்கு வந்த சோவியத் யூனியன், சோஷியலிச கருத்துகளை உலகெங்கும் பரப்பியது. இது மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளை அச்சுறுத்தியது. அதன் விளைவாக, அவர்கள் சோவியத் யூனியனை எதிரியாகக் கண்டனர். அவர்கள் பாசிச ஆக்கிரமிப்பைச் சோஷியலிஸ்ட் கருத்துகளின் பரவலைத் தடை செய்வதற்கான வழிமுறையாகக் கருதினர். மியூனிச் ஒப்பந்தம் மேற்கத்திய நாடுகளைத் திருப்திப்படுத்தல் கொள்கையின் முக்கியமான எடுத்துக்காட்டாகும். இந்தத் திருப்திப்படுத்தல் கொள்கைகள் ஹிட்லருக்குத் தன்னம்பிக்கையை அளித்தது மட்டுமல்ல அவர் தனது ஆக்கிரமிப்புகளைத் தொடரவும் செய்தார். 1939 செப்டம்பர் 1 – ஆம் நாள் ஜெர்மனி போலந்தை ஆக்கிரமித்ததின் பலனாக இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது.

போரின் விளைவுகளை ஆராய்வோம்.

- பல இலட்சக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டனர்.
- உலகம் முழுவதும் உணவுப் பற்றாக்குறை மற்றும் தொற்று நோய்கள் பரவின.
- ஐரோப்பிய பொருளாதார முறை சீர்குலைந்தது.
- காலனிமயமாக்கலும் ஏகாதிபத்தியமும் வீழ்ச்சி அடைந்தன.
- ஐரோப்பாவின் மேலாதிக்கம் முடிவுற்றது.
- ஐக்கிய நாட்டுச் சபை உருவாக்கப்பட்டது (United Nations Organisation).
- இத்தாலியிலும் ஜெர்மனியிலும் சர்வாதிகாரம் முடிவுக்கு வந்தது.
- ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் காலனிகள் சுதந்திரம் அடைந்தன.
- அமெரிக்காவும் சோவியத் யூனியனும் உலகின் வல்லரசு நாடுகளாக மாறின.

**ஐக்கிய நாட்டுச் சபை**
**(United Nations Organisation)**



இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலை நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பே ஐக்கிய நாட்டுச் சபை. 1945 அக்டோபர் 24–ஆம் நாள் இது நடைமுறைக்கு வந்தது.

இரண்டு உலகப்போர்களின் காரணங்களையும் விளைவுகளையும் ஒப்புமைப்படுத்தி குறிப்பு தயார் செய்யவும்.

## உலகம் போருக்குப் பின்

ஐரோப்பிய சக்திகளின் பொருளாதார விருப்பங்கள் தான் ஏகாதிபத்திய போட்டிகளுக்கும் இரண்டு உலகப் போர்களுக்கும் காரணமானது என நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா. இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஒருவருக்கொருவர் போராட்டம் செய்த ஐரோப்பிய சக்திகள் ஒன்றுமில்லாமல் ஆயின. அமெரிக்கா ஐக்கிய நாடுகளும், சோவியத் யூனியனும் எதிர்மறையான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றின. அமெரிக்கா முதலாளித்துவ கொள்கைகளையும் சோவியத் யூனியன் சோஷியலிஸ்ட் கொள்கைகளையும் பின்பற்றின. இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் அஞ்சவும், தங்கள் கருத்துகளை உலகம் முழுவதும் பரப்புவும் முயன்றனர். இவர்களுக்கு இடையே நடைபெற்ற பனிப்போர் அரை நூற்றாண்டுகளாக நீடித்தது. 1991–இல் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் பனிப்போர் முடிவுக்கு வந்தது.

**பனிப்போர் (Cold War)**

இரண்டாம் உலகப்போருக்குப் பின் முதலாளித்துவ நாடுகள் அமெரிக்காவின் தலைமையிலும் பொதுவுடைமை நாடுகள் சோவியத் யூனியனின் தலைமையிலும் பின் பற்றிய கருத்தியல் மோதலே பனிப்போர். இது வெளிப்படையான போர் மற்றும் சமாதானத்தின் காலமாக இருக்கவில்லை. இந்த இரண்டு அணியிலும் உட்படாத நாடுகளின் ஒருங்கிணைப்பே அணி சேரா இயக்கம்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள காலனிகள் விடுதலையடைந்தன என முன்பு குறிப்பிடப்பட்டதல்லவா. இத்துடன் முதலாளித்துவ கருத்துகளைப் பின்பற்றிய அமெரிக்கா செல்வத்தை ஈட்டுவதற்காகப் புதிய வழிமுறைகளைப் பின்பற்றின. புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளுக்குக் கடன் வழங்கி அந்த நாடுகளை மறைமுகமாகச் சுரண்டியது. இது வேறுவகையான காலனிமயமாதலாக இருந்தது. இந்தக் கொள்கை நவீன காலனிமயமாக்கல் (Neo Colonialism) என்று அழைக்கப்படுகிறது. இந்த நவீன காலனிமயமாக்கல் கொள்கை, பொருளாதார முதலாளித்துவத்தின் (Finance Capitalism) வழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

### நிதி முதலாளித்துவம்

வங்கி, காப்பீடு போன்ற நிதி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் பொருளாதார அமைப்பே நிதி முதலாளித்துவம். இந்நிலையில் வேளாண் உற்பத்தியையும் மக்கள் நலனையும் விட பொருளாதார பரிமாற்றங்களுக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வங்கிகளும் பங்குச் சந்தைகளும் முதலீட்டு நிறுவனங்களும் இந்தப் பொருளாதார அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உற்பத்தியும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் இல்லாமலேயே மிக அதிகமான பொருளாதாரத்தைச் சேர்க்க இந்த அமைப்பில் வாய்ப்பு கிடைக்கிறது.

இராணுவமும் போர்களும் தவிர உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்த நிதி முதலாளித்துவம் பெரிய நிறுவனங்களுக்கு வாய்ப்பளித்தது. இத்தகைய நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் முதலீடு செய்து இலாபத்தை ஈட்டுகின்றன.

பொருளாதார முதலாளித்தும் அதிக லாபத்தை ஈட்டும் நோக்கத்துடன் செயல்படுகிறது. இதனால் பொதுமக்களும் பரம்பரைத் தொழில்களில் ஈடுபடுகிறவர்களும் அதன் விளைவுகளை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடிய வளங்களை இழந்து ஒரு சில முதலாளிகளால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். வளங்களின் கட்டுப்பாடற்ற சுரண்டல் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கும் வழி வகுக்கின்றன.

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் உருவான பொருளாதார அமைப்புகள் குறித்துதான் நாம் இதுவரை கலந்துரையாடல் செய்தோம். புதிய தொழில்நுட்பங்களும் அதன் தொடர்பால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் இந்தப் பொருளாதார மாற்றங்களுக்குக் காரணமாயின. ஐந்து நூற்றாண்டுகளுக்குள் முதலாளித்துவம் பல நிலைகளின் வழியாக வளர்ச்சி அடைந்தன. இது உலக வரலாற்றை எவ்வளவு ஆழமாகப் பாதித்தது எனவும் கோடிக்கணக்கான மக்களை எந்தெந்த முறைகளில் கவர்ந்தன எனவும் இந்தப் பாடத்திலிருந்து புரிந்து கொள்ளலாம். வரலாற்றின் போக்கை நிர்ணயிப்பதில் பொருளாதாரக் காரணிகள் மற்றும் அமைப்புகளின் பங்கை இது சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் முதலாளித்துவ விருப்பங்களுக்கு முன் மனிதநேய மதிப்புகளுக்கு உண்டான வீழ்ச்சிக்கு இந்தக் காலம் சாட்சியானது.

## தொடர் செயல்பாடு

- 15 முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை உலக வரலாற்றில் தாக்கத்தை ஏற்படுத்திய முக்கியமான பொருளாதாரக் கொள்கைகளைக் குறிக்கும் டிஜிட்டல் கண்காட்சி நடத்தவும்.
- தொழிற்புரட்சியின் காலகட்டத்தில் உள்ள கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய கருவிகளையும் நபர்களையும் ஒருங்கிணைத்து தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் சமூக அறிவியல் ஆய்வகத்தில் ஒரு கண்காட்சி நடத்தவும்.
- 15 முதல் 20 – ஆம் நூற்றாண்டு வரை, இந்தப் பாடப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நிகழ்வுகளுடன் தொடர்புடைய நாடுகள் மற்றும் பகுதிகளை உள்ளடக்கி நிலப்படத் தொகுப்பு தயாரிக்கவும்.
- அடிமைத்தனத்தை முக்கிய கருத்தாக வெளிப்படுத்திய 'அங்கிள் டோம்ஸ் கேபின்' என்ற திரைப்படத்தைச் சமூக அறிவியல் ஆய்வகத்தில் வெளியிட்டு இரசனைக் குறிப்பு தயார் செய்யவும்.



# 5

# மக்களாட்சியில் பொதுமக்களின் கருத்து

## பொது மக்கள் சுகாதார மசோதா தேர்வுக்குழு; கருத்துகளைத் தெரிவிக்கலாம்

கோட்டயம்: கேரள பொது மக்கள் சுகாதார மசோதா மீதான சட்டப்பேரவை தேர்வுக்குழு செப்டம்பர் 24-ஆம் தேதி காலை 10.30 மணிக்குக் கோட்டயம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கூடுகிறது. கூட்டத்தில் துறைசார் அதிகாரிகள், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றவர்கள் கருத்துகளும் ஆலோசனைகளும் வழங்கலாம். மசோதாவும் மசோதாவின் நிபந்தனைகள் பற்றிய வினாநிரலும் www.niyamasabha.org என்ற இணையதளத்தில் கிடைக்கும். கருத்துகளையும் ஆலோசனை களையும் எழுத்து மூலமாகவோ legislation@niyamasabha.nic.in என்ற மின்னஞ்சல் மூலமாகவோ வழங்கலாம்.

பொது மக்கள் சுகாதார மசோதாவுடன் தொடர்புடைய பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றவர்களிடம் இருந்து கருத்துகளும் ஆலோசனைகளும் சேகரிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பே இது. மக்களாட்சி முறையில் அரசு கொள்கை உருவாக்கத்தின் ஒரு பகுதியாக இதுபோன்ற பொதுமக்களின் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

படத்தை உற்று நோக்கவும்.




ஒரு பகுதியில் வாழும் மக்கள் கூடும் உள்ளாட்சி அமைப்பான கிராம சபை / வார்டு சபையின் படம் மேலே தரப்பட்டுள்ளது. மக்களைப் பாதிக்கும் வளர்ச்சிப் பிரச்சினைகள், கழிவு மேலாண்மைப் பிரச்சினைகள், சுற்றுச்சூழல் மாசுபாடு, குடிநீர்ப் பிரச்சினை போன்ற பொதுப் பிரச்சினைகள் அங்கே விவாதிக்கப்படும் அல்லவா? கிராமசபை/வார்டு சபையில் கூடி இருப்பவர்களின் கருத்துகளின் அடிப்படையில் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

பள்ளியில் ஆண்டுவிழா ஏற்பாடு செய்யும்போது அதை நடத்தும் பொறுப்பாளர்கள் உங்களிடமிருந்து கருத்துகளைக் கேட்பார்கள் அல்லவா? என்னென்ன வழிகளில் உங்கள் கருத்துகளைத் தெரிவிப்பீர்கள்?

- பள்ளிப் பாராளுமன்றம் வழியாக
- ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பங்கெடுக்கும் வகுப்புப் பிரதிநிதிகள் வழியாக
- 

பள்ளிச் செயல்பாடுகளில் உங்களது கருத்துகளை வெளிப்படுத்தும் பல்வேறு வழிகளை அறிந்துகொண்டீர்கள் அல்லவா?

பாடத்தின் தொடக்கத்தில் தரப்பட்ட செய்தி பொதுமக்கள் சுகாதாரத்துடன் தொடர்புடையதாகும். மக்களின் கருத்துகள், விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில்தான் மக்களாட்சியின் அடித்தளம் உருவாகிறது. பொதுமக்கள் சுகாதாரம் என்பது பொதுமக்கள் அனைவரையும் பாதிக்கும் முக்கிய காரணியாகும். இப்பொதுக்காரணியின் மீது பொதுமக்களுக்கு உள்ள கருத்தைத் தெரிந்துகொள்ள அரசு இம்முயற்சியை மேற்கொள்கிறது. இவ்வாறு மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றிய மக்களின் பொதுவான கருத்துகளே பொதுமக்களின் கருத்துகளாகும். இது குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் சமூகத்தில் உள்ள மக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாடு அல்லது கருத்தாக இருக்கலாம்.

பொதுமக்களின் கருத்துகள் மூலம் வலிமைப் படுகின்ற குடிமைச் சமூகம் மக்களாட்சியை வலுப்படுத்தும். அவர்களின் கருத்துக்களில் உள்ள தர்க்க ரீதியான சிந்தனையும் அறிவியல் கண்ணோட்டமும் பொது மக்களின் கருத்தை மேன்மைப்படுத்தும். இதன் வாயிலாகச் சமூக பிரச்சினைகளில் விழிப்புடன் செயல்படும் குடிமைச் சமூகம் உருவாகும்.

**குடிமைச் சமூகம்**
**(Civil Society)**

பொது நன்மைக்காகச் செயல்படும் பல்வேறு அமைப்புகள், சங்கங்கள், தனிநபர்கள் உட்படுகின்ற மக்களாட்சியில் ஒரு குறிப்பிடத்தக்கக் கருத்தாக்கமே குடிமைச் சமூகம். குடிமைச் சமூகம் என்பது பல்வேறு நலன்கள் மற்றும் நோக்கங்களுடன் அரசு கட்டுப்பாடோ, லாப நோக்கமோ இன்றி தாமாக முன்வந்து செயல்படும் நபர்களை உள்ளடக்கியதாகும்.

உங்கள் பகுதியில் உள்ள போக்குவரத்து வசதிகள் மற்றும் கழிவு மேலாண்மைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய, உங்கள் மற்றும் சக மாணவர்களின் கருத்துகளை வகுப்பில் கலந்துரையாடி, சமூக அறிவியல் மன்றத்தில் வெளியிடவும்.

## பொதுமக்களுடைய கருத்துகளின் சிறப்புகள்

சமூக வாழ்க்கையிலும் ஆட்சியிலும் அரசியலிலுமெல்லாம் பொதுமக்களுடைய கருத்துகளின் தாக்கம் மிகவும் அதிகமாகும். சமூகத்தில் காணப்படும் சில பிரச்சினைகளைப் பொறுப்பு உள்ள குடிமக்கள் பிறரின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் போதுதான் பொதுமக்களின் கருத்துகள் உருவாகின்றன. பொதுமக்களின் கருத்துகள் என்பது அரசின் மீது மக்களின் கட்டுப்பாட்டிற்கான ஒரு சிறந்த வழியாகும். மக்களாட்சியை வலுப்படுத்த தேவையான விவாதங்களைப் பொதுமக்களின் கருத்துகள் ஊக்குவிக்கின்றன. மக்களாட்சி முறையில் பொதுமக்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

பொதுமக்களுடைய கருத்துகளின் சிறப்புத் தன்மைகள் எவை என்பதைக் காண்போம்.

- பொதுமக்களின் கருத்துகள் பல்வேறு விதமான கருத்துகளை வெளிப்படுத்துகின்றன.
- பொதுமக்களின் கருத்து என்பது பெரும்பான்மை மக்களின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அது ஒரு பிரச்சினை மீதுள்ள பொதுக்கருத்தாக இருக்க வேண்டும்.
- சூழ்நிலை, காலம் மற்றும் புதிய அறிவுகளுக்கு ஏற்ப பொதுமக்களின் கருத்தில் மாற்றம் ஏற்படலாம்.
- பொதுமக்களின் கருத்து எப்போதும் அரசியல் செயல்களுக்காக மட்டுமல்லாது சமூக – பொருளாதார – கலாச்சார செயல்களுக்காகவும் உருவாவது உண்டு.
- பொதுமக்களின் கருத்து வெளிப்பாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி என்ற எல்லை நிர்ணயிக்கப்படவில்லை. எந்தப் பகுதியிலிருந்தும் யார் வேண்டுமானாலும் கருத்தை வெளிப்படுத்தலாம்.
- பொதுமக்களின் கருத்து மக்களாட்சி முறையிலான கருத்துப் பரிமாற்றத்தை உறுதி செய்கிறது.

வரைபடத்தை முழுமை செய்து பொதுமக்களுடைய கருத்துகளின் சிறப்புத் தன்மைகள் ஒவ்வொன்றையும் கலந்துரையாடி விளக்கப்படம் தயார் செய்யவும்.



பொதுவான ஒரு பிரச்சினையின் மீதுள்ள மக்களின் கருத்தே பொதுமக்களின் கருத்து என நாம் விவாதித்தோம் அல்லவா? தனிநபரின் சமூக – கலாச்சார சூழல், மனநிலை, நம்பிக்கை, முன் அறிவுகள், தலைமைத்துவப்பண்புகள், கல்வி போன்றவை பொதுமக்களுடைய கருத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகளாகும்.

## பொதுமக்களுடைய கருத்தை உருவாக்கும் அமைப்புகள்:

பொதுமக்களுடைய கருத்து உருவாக்கம் என்பது தன்னிச்சையானதோ, மிகத் துல்லியமானதோ மற்றும் குறிப்பிட்ட காலநிர்ணயச் செயலோ அல்ல. எப்போதெல்லாம் சமூகத்தில் ஒரு பொதுப்பிரச்சினை எழுகிறதோ அப்போதெல்லாம் சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் அவர்களின் கருத்துகளையும் கண்ணோட்டங்களையும் வெளிப்படுத்துகின்றனர். இச்செயல்பாட்டில் சில கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது ஒரு பொது மக்கள் கருத்தாக உருவாகவும் செய்கிறது. இப்படி முறையான மற்றும் முறைசாரா செயல்பாடுகளின் வழியாகவே பொதுமக்களுடைய கருத்து உருவாகிறது.

பொதுமக்களுடைய கருத்தை வளர்க்கவும் அதன் வழியாக மக்களாட்சியை உறுதிப்படுத்துவதிலும் குடும்பம் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு முக்கிய பங்கு உள்ளன. மட்டுமல்லாது சமவயது குழுக்களும் ஊடகங்களும் அரசியல் கட்சிகளும் சமூக நிறுவனங்களும் அமைப்புகளும் கருத்து வாக்கெடுப்புகளும் கலைகளும் இலக்கியங்களும் எல்லாம் அவற்றின் கடமைகளை நிறைவேற்றுகின்றன. இவை எல்லாம் பொதுமக்களின் கருத்தை உருவாக்கும் பல்வேறு அமைப்புகளாகும். ஒவ்வொன்றாக அவற்றைப் பரிசோதிப்போம்.

### 1. குடும்பம் (Family)

ஒரு குடும்பத்தின் உரையாடலைக் கவனியுங்கள்




இதைப் போன்ற விவாதங்களில் உங்கள் பெற்றோருடன் நீங்கள் ஈடுபடுவதுண்டா? ஒரு குழந்தையின் சமூகமயமாக்கல் செயல்பாடு ஆரம்பிப்பது குடும்பத்தில் இருந்தாகும். குடும்பங்களின் பாரம்பரிய

நம்பிக்கைகளும் புரிதல்களும் குழந்தையின் கருத்து உருவாக்கத்தில் தாக்கம் செலுத்துவதுண்டு. குடும்பத்தில் நடக்கும் விவாதங்களிலும் உரையாடல்களிலும் குழந்தை பங்கேற்பவனாகவோ சாட்சியாகவோ இருக்கிறான். இவற்றில் அரசியல், நம்பிக்கை, மதம், இலக்கியம் போன்றவையெல்லாம் கருப்பொருளாக அமைவதுண்டு. இத்தகைய பல்வேறு கருத்துகளில் குழந்தையின் கருத்து உருவாக்கத்தில் முதன்மையான தாக்கத்தை ஏற்படுத்துவது குடும்பம் என்ற சமூக நிறுவனமாகும்.

பொதுமக்களுடைய கருத்து உருவாக்கத்தின் முதற்படி குடும்பங்களில் இருந்து தொடங்குகின்றன. இக்கூற்றினை மதிப்பீடு செய்து குறிப்பு தயாரிக்கவும்.

### 2. கல்வி நிறுவனங்கள் (Educational Institutions)

ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் நடைபெறும் உரையாடல்கள் கீழே தரப்பட்டுள்ளன. எந்தத் தலைப்பைப் பற்றிய கலந்துரையாடல் என்பதைக் கவனிக்கவும்.




குழந்தையின் அறிவு உருவாக்கத்திற்கும் மேம்பாட்டிற்கும் கல்வி நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். உரிமைகள், கடமைகள், அறிவியல் சிந்தனை, விமர்சன சிந்தனை மற்றும் கலாச்சாரம் போன்ற அனைத்திலுமுள்ள அறிவு மற்றும் திறன் எல்லாவற்றையும் குழந்தை பெற்றுக்கொள்வது பெரும்பாலும் கல்வி நிறுவனங்களின் வழியேயாகும். கல்விச்செயல்பாடு ஒருவரை ஏதாவது ஒரு கருத்தைப்பற்றிச் சுதந்திரமாக, அறிவுப்பூர்வமாகத் தனது எண்ணத்தை உருவாக்கத் துணைபுரிகிறது. பல்வேறு கருத்துகளைப் பற்றிய அறிவினை குழந்தைகளிடம் உருவாக்குவதில் கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பள்ளிப் பாராளுமன்றம், மன்றச் செயல்பாடுகள், கலை மற்றும் விளையாட்டு விழாக்கள் போன்ற எண்ணற்ற கல்விச் செயல்பாடுகள் குழந்தைகளுக்கு மக்களாட்சி உணர்வையும் குடிமக்கள் உணர்வையும் உருவாக்குவதில் பயிற்சிக் கூடங்களாகின்றன. இத்தகைய வாய்ப்புகள் குழந்தைகளுக்குத் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்குரிய சூழலை உருவாக்கி அதன் வழியாக அவர்கள் பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கான திறனைப் பெற்றுக் கொள்கின்றனர்.

பள்ளி நூலகத்தின் செயல்பாடுகளை அதிக அளவில் உயிரோட்டமுள்ளதாக்குவதற்குத் தேவையான ஆலோசனைகளை வகுப்பில் கலந்துரையாடல் நடத்தி, குறிப்பு தயார் செய்து பள்ளிப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தவும்.

## 3. சம வயது குழுக்கள் (Peer groups)

நண்பர்களின் கலந்துரையாடலைக் கவனியுங்கள்




சமவயது குழுக்களில் நடைபெறும் விவாதங்கள், கலந்துரையாடல் போன்றவை பொதுமக்களுடைய கருத்து உருவாக்கத்தில் தாக்கம் செலுத்தும் முக்கியக் காரணிகளாகும். தனிநபர் ஆளுமை, மனநிலை, நன்நடத்தை போன்றவற்றில் சமவயது குழுக்களின் உறுப்பினர்கள் ஏறக்குறைய பொதுவான பண்பையே வெளிப்படுத்துகின்றனர். சுய அனுபவங்கள், சமூக ஆதிக்கம் என்பவற்றில் இவர்கள் சில பொதுவான பண்புகளைப் பகிர்ந்துகொள்கின்றனர். அரசு கொள்கையுடன் உள்ள அணுகுமுறை, பல்வேறு கருத்துகளில் காட்டப்படும் மனப்பான்மை, அரசியல் கட்சிகளுடன் உள்ள அணுகுமுறை என்பவற்றில் எல்லாம் சமவயது

**சமவயது குழுக்கள்**

சமவயதும் ஒத்த விருப்பங்களும் நோக்கங்களும் கொண்ட குழுக்களே சமவயது குழுக்கள் ஆகும். சமவயது குழுக்கள் அவர்களின் உறுப்பினர்களின் நம்பிக்கை, மதிப்புகள், கருத்துகள் போன்றவற்றில் எல்லாம் ஒத்ததன்மையைக் கொண்டிருப்பர்.

குழுக்களின் உறுப்பினர்களுக்கு, ஒருவருக்கொருவர் தாக்கம் செலுத்த இயலும். அத்தகைய நிலைக்குப் பொது ஆலோசனைகளை வழங்கவும் நடைமுறையில் உள்ளவற்றைத் திருத்தி சரியான கருத்துகளை உருவாக்கவும் சமவயது குழுக்களின் கலந்துரையாடல்கள் துணைபுரிகின்றன. இவ்வாறு சமவயது குழுக்களில் நடைபெறும் விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பொதுமக்களின் கருத்து உருவாக்கத்திற்கு வழி வகுக்கின்றன.

போதைப்பொருள் எதிர்ப்புச் செய்தியைப் பரப்ப உங்கள் பள்ளிக்கூடத்திலும் சுற்று வட்டாரங்களிலும் என்னென்ன நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவீர்கள். நண்பர்களுடன் கலந்துரையாடிப் பட்டியல் தயார் செய்யுங்கள்.

## 4. ஊடகங்கள் (Media)

பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தில் ஊடகங்களுக்கு மிக முக்கிய பங்கு உண்டு. அச்சடி ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற பாரம்பரியம் மிக்க ஊடகங்கள் வாயிலாகவும், டிஜிட்டல் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் முதலான நவீன ஊடகங்கள் வாயிலாகவும் கிடைக்கக் கூடிய செய்திகளும் கலந்துரையாடல்களும் விளம்பரச் செயல்பாடுகளும் மக்களில் மிகப்பெரிய தாக்கத்தைச் செலுத்துகின்றன. ஒரு கருத்தைப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும் அதிலிருந்து பொதுமக்கள் கருத்தை உருவாக்கவும் ஊடகங்களுக்கு இயலும்.

### 4.1 செய்தித்தாள்கள் (News Papers)

அனைத்து சமூக – அரசியல் நிகழ்வுகளையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதில் செய்தித்தாள்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அன்றாட பிரச்சினைகளை மக்களிடம் கொண்டு செல்லவும் மக்களின் கருத்தை மீண்டும் அரசாங்கத்திடம் கொண்டு சென்று மக்களாட்சி செயல்பாடுகளை




"செய்தித்தாள்களின் ஒரே நோக்கம் சேவையாக இருக்க வேண்டும். என்று இந்திய ஒப்பீனியன் என்ற செய்தித்தாள் தொடங்கிய முதல் மாதமே நான் புரிந்துகொண்டேன். செய்தித்தாள்கள் மிகப்பெரிய சக்தியாகும். ஆனால் கட்டுப்பாடு இல்லாத நீரோட்டம், எல்லா பகுதிகளையும் பயிர்களையும் மூழ்கடிப்பது போலவே கட்டுப்பாடற்ற செய்திகள் தீமைகளையே உருவாக்கும். வெளியிலிருந்து செலுத்தப்படும் கட்டுப்பாடு, கட்டுப்பாடற்ற செய்திகளை விட மிகவும் ஆபத்தானது ஆகும். சுயக்கட்டுப்பாடுடைய செய்திகள் நன்மை பயக்கும். இத்தகைய சிந்தனை சரி என்றால் உலகில் எத்தனை வெளியீடுகள் இத்தேர்வில் வெற்றிபெறும்? வெற்றி பெறாதவற்றைத் தடை செய்ய யாரால் முடியும்? இரண்டின் நன்மை தீமைகளை யார் தீர்மானிப்பது? நன்மை பயப்பதும் தீமை பயப்பதும், நன்மையும் தீமையும் போலவே தொடர்ந்து நீடிக்கும். மனிதன் இவற்றிலிருந்து தேர்வு செய்ய வேண்டும்"

(மகாத்மா காந்தி – எனது சத்திய சோதனை)

வலிமைப்படுத்துவதற்குச் செய்தித்தாள்களுக்கு இயலும். இவ்வாறு பொதுமக்கள் கருத்தை உருவாக்க செய்தித்தாள்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

செய்தித்தாள்களின் செல்வாக்கைப் பற்றிக் காந்தியடிகளின் கருத்தை வாசித்தீர்கள் அல்லவா? பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தில் மட்டுமல்ல, அதை மாற்றவும், சில விருப்பு வெறுப்புக்கு ஏற்ப மறுக்கவும் செய்தித்தாள்களின் வழியாகச் செயல்படுத்த முடியும். சில சமயங்களில் சில செய்திகள் உண்மையின் அடிப்படையில் இல்லாமலும் வெளியிடப்படலாம். சமூகத்தில் பொதுமக்கள் கருத்தைத் திசை திருப்பி விடவும் சமூகத்தைத் தவறாக வழிநடத்தவும் சில செய்திகள் காரணமாகின்றன. குறிப்பிட்ட விருப்பு வெறுப்பு அடிப்படையில் தவறான செய்திகள் இணையதளம் வாயிலாகவும் வேறுவழிகளிலும் மக்களிடம் சென்றடைகின்றன. செய்திகளில் பட்சபாதமற்ற அணுகுமுறையும் துல்லியமும் பல வேளைகளில் ஊடகங்களிலிருந்து வெளிப்படுவதில்லை என்ற விமர்சனங்கள் சமூகத்தில் நிலவுகின்றன.

அண்மைக் காலத்தில் ஒரே செய்தியோடு தொடர்புடைய செய்திகளை வெளியிட்ட பல்வேறு செய்தித்தாள்களின் செய்திகளைத் திரட்டவும். ஆசிரியரின் உதவியுடன் செய்தியை வெளிப்படுத்தும் முறை, உள்ளடக்கம், உண்மைகள் என்பவற்றைப் பரிசோதித்து ஆய்வுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

## 4.2 வானொலி, தொலைக்காட்சி (Radio, Television)

சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக வானொலியும் தொலைக்காட்சியும் மாறியுள்ளன. செய்தி ஊடகங்கள் கல்வியறிவு உடையவர்களை மட்டும் சார்ந்து இருக்கும்போது, வானொலியும் தொலைக்காட்சியும் எழுத்தறிவு இல்லாத சமூகத்தினரையும் அவர்களின் சிந்தனைகளையும் பக்குவப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அரசின் பல்வேறு கொள்கைகளையும் செயல்பாடுகளையும் குறித்து மக்களுக்குள்ள கருத்துகளையும் எண்ணங்களையும் சமூகத்தில் கருத்துப் பரிமாற்றம் செய்வதில் வானொலியும் தொலைக்காட்சியும் ஆற்றும் பங்கு பெரிதாகும்.




## 4.3 சமூக ஊடகங்கள் (Social Media)

அண்மைக் காலத்தில் ஒரு தலைப்புச் செய்தி தொடர்பான பொதுமக்களின் கருத்துகளைக் கவனித்தீர்களல்லவா? முக்கியமான ஊடகங்களைப் போலவே எந்தவொரு செய்தியானாலும் பொதுமக்களின் கருத்தை வடிவமைப்பதில் சமூக ஊடகங்களுக்கு இன்று முக்கியபங்கு உண்டு. சமூக ஊடகங்களில் இதைப்போன்ற எதிர்வாதக் கருத்துகளை நீங்களும் வெளியிடுவீர்கள் அல்லவா?

கீழே தரப்பட்டுள்ள செய்திகளைவ வாசியுங்கள்.




District Information Office
Kottayam

**FACT**

கோட்டயத்தில் அனைத்துப் பள்ளிக்கூடங்களுக்கும் நாளை விடுமுறை இல்லை; பரவுவது போலியான அறிவிப்பு என மாவட்ட ஆட்சியர். தற்போது பேரிடர் நிவாரண முகாம்களாகச் செயல்படும் பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமே மாவட்டத்தில் நாளை (செப்டம்பர் 1–ஆம் தேதி) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் தெளிவுபடுத்தினார். கனமழை காரணமாகக் கோட்டயம் மாவட்டத்தில் அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் நாளை (செப்டம்பர் 1–ஆம் தேதி) விடுமுறை எனப் பரவும் அறிவிப்புப் போலியானது என்று கோட்டயம் மாவட்ட ஆட்சியர் அறிவித்தார். மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் நாளை விடுமுறை என வெளியிடப்பட்ட போலியான அறிவிப்பு சமூக ஊடகங்களின் மூலம் பரவுவதைத் தொடர்ந்தே மாவட்ட நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்ட ஒரு போலியான செய்தியும் அந்தச் செய்தியின் உண்மைத் தன்மையையும் உள்ளடக்கிய மாவட்ட ஆட்சியரின் விளக்கமும் உட்பட்ட செய்திக்குறிப்பே மேலே தரப்பட்டுள்ளது. இத்தகைய போலியான செய்திகளும் தகவல்களும் பரப்புவதைத் தடுக்க நாம் என்னென்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

- செய்திகள் மற்றும் தகவல்களின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்கு உண்மையான ஆதாரங்களைக் கண்டுபிடித்தல்.
- வெளியிடப்பட்ட போலியான செய்திகள் மற்றும் தகவல்கள் என்பதை அறிந்த பின்னர் அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளாது இருத்தல்.
- சைபர் செல் போன்ற அதிகாரப்பூர்வ அமைப்புகளுக்குத் தெரிவித்தல்.

நவீன காலத்தில் சமூகத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் டிஜிட்டல் தளங்கள் வழியாகத் தகவல் பரிமாற்றம் செய்கின்றனர். இத்தகைய டிஜிட்டல் தளங்களில் உள்ள மோசடிகளை ஒவ்வொருவரும் அடையாளம் காண்பது இன்றியமையாததாகும். அதற்காக நாம் ஊடக அறிவையும் (Media Literacy) டிஜிட்டல் அறிவையும் (Digital Literacy) பெறவேண்டும். பல்வேறு ஊடக வடிவங்கள் வழியாகக் கிடைக்கும் தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் மதிப்பீடு செய்யவும் புதிய தகவல்களை உருவாக்கவும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் உள்ள திறமையே ஊடக அறிவு எனப்படும். ஊடக உள்ளடக்கம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்றும் அது நமது அறிவை எவ்வாறு வடிவமைக்கிறது என்றும் செய்திகளையும்

தகவல்களையும் விமர்சன ரீதியில் எவ்வாறு விளக்க வேண்டும் என்பவையெல்லாம் இதில் அடங்கும்.

டிஜிட்டல் தளங்களில் இருந்து தகவல்களைக் கண்டுபிடிக்கவும் மதிப்பீடு செய்யவும் டிஜிட்டல் கருவிகளையும் தொழில்நுட்பத்தையும் பயனுள்ள வகையில் பயன்படுத்தும் திறமையே டிஜிட்டல் அறிவு எனப்படுகிறது. அடிப்படை கணினி அறிவு, இணையதளத்தின் பயன்பாடு, டிஜிட்டல் தளங்களை வழிநடத்தல், இணைய வழி உள்ளடக்கத்தை விமர்சன ரீதியில் மதிப்பிடுதல் மற்றும் சைபர் தளம் பற்றிய விழிப்புணர்வு முதலானவை இதில் உட்படுகின்றன.

ஊடக அறிவு உள்ளடக்கத்திலும் அதன் விளக்கத்திலும கவனம் செலுத்தும் போது டிஜிட்டல் அறிவு முக்கியமாகக் கருவிகளையும் தளங்களையும் கருத்தில் கொள்கின்றன.

"பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தில் நவீன ஊடகங்களின் பங்கு" என்ற தலைப்பில் ஒரு விவாதம் நடத்தி குறிப்பு தயார் செய்யவும்.

## 5. அரசியல்கட்சிகளும் அவற்றின் செயல்பாடுகளும் (Political Parties and their Activities)

மக்களாட்சி முறையில் பொதுமக்களின் கருத்து உருவாக்குதலிலும் தொகுத்தளிப்பதிலும் முன்னணியில் இருப்பது அரசியல் கட்சிகளும் அவற்றின் செயல்பாடுகளும் ஆகும். மக்கள் கருத்தை உருவாக்குவதில் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் சமமாகப் பங்களிக்கின்றன. பொதுமக்களைப் பொதுப் பிரச்சினைகள் குறித்துச் சிந்திக்க வைத்து அரசியல் அறிவுள்ளவர்களாக மாற்றுவதே அரசியல் கட்சிகளின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அவர்களுக்கு அனுகூலமாகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதற்காகச் செய்தி ஊடகங்கள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், சுவரொட்டிகள் போன்றவற்றை வெளியிடுகின்றன. அதுமட்டுமல்லாது மாநாடுகள், போராட்டங்கள், பேரணிகள், கருத்தரங்குகள் போன்றவற்றையும் பொதுமக்களின் கருத்து உருவாக்கத்திற்காக ஏற்பாடு செய்கின்றனர்.

ஆளும் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாக, அரசின் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ய முயற்சிக்கின்றன. அதற்குத் தேவையான பிரச்சார தந்திரங்களை வகுக்கவும் செய்கின்றன.

எதிர்க்கட்சிகள், ஆட்சியில் காணப்படும் குறைகளையும் தவறுகளையும் மக்களிடம் கொண்டு செல்கின்றன. அரசுக்கு எதிரான பொதுமக்கள் கருத்தை உருவாக்க உதவும் போராட்டங்களையும் பிரச்சாரங்களையும் அவர்கள் மேற்கொள்கின்றனர்.

அனைத்து அரசியல் கட்சிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றித் தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கான ஆர்வத்தைக் கொண்டுள்ளன. தேர்தல் காலத்தில் ஒவ்வொரு கட்சியும் தாங்கள் ஆட்சிக்கு வந்தால்

நடைமுறைப்படுத்தும் செயல்பாடுகளைத் தேர்தல் அறிக்கை வழியாக வெளியிட்டு அதிகபட்ச மக்களின் ஆதரவைப் பெற முயற்சி செய்கின்றன. சமூகம் மற்றும் அரசாங்கம் எதிர்கொள்ளும் அனைத்து முக்கிய பிரச்சினைகளிலும் தலையிடவும் கருத்தை உருவாக்கவும் எல்லா அரசியல் கட்சிகளும் கவனம் செலுத்துகின்றன. ஒவ்வொரு கட்சியும் தங்களின் கண்ணோட்டங்களையும் கருத்துகளையும் வெளியிட்டுக் கொண்டு மக்களைத் தங்கள் பக்கம் அணி திரட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றன. அத்துடன் மக்களைப் பொது விவகாரங்களில் ஈடுபடவும் தேர்தல் செயல்முறைகளில் தீவிரமாக ஈடுபடச் செய்யவும் ஊக்குவிக்கின்றன. தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கொள்வது மட்டுமல்லாமல் தேர்தலுக்குப் பிறகும் பொதுப் பிரச்சினைகளில் அரசியல் கட்சிகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து கொண்டே இருக்கும். தேர்தல் பிரச்சாரக் கட்டங்களில் பொதுமக்கள் கருத்தைத் தங்களுக்கு ஆதரவாக மாற்ற ஒவ்வொரு அரிசியல் கட்சிகளும் தங்கள் நிலைப்பாடுகளைத் தெளிவாகக் கூற முயற்சிக்கின்றன. அரசியல் கட்சிகளின் பிரச்சாரங்கள் எல்லை மீறும் போது தேர்தல் ஆணையம் தலையிட்டுக் கட்டுப்படுத்துவது வழக்கமாகும்.

கீழே தரப்பட்டுள்ள பட்டியலை நிரப்பி வகுப்பில் விவாதித்து "பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் பங்கு " என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவைத் தயார் செய்யுங்கள்.

**பொதுமக்கள் கருத்தை உருவாக்க அரசியல் கட்சிகள் கடைபிடிக்கும் பல்வேறு வழிகள்.**

- பிரச்சாரங்கள்
- 
- 
- 

## 6. சமூக நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் (Social Institutions and Organisations)

சமூகத்தில் செயல்படும் பல்வேறு நிறுவனங்களும் சமூக அமைப்புகளும் பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. மத நிறுவனங்கள், ஜாதி – மத அமைப்புகள், மாணவர் இயக்கங்கள், இளைஞர் இயக்கங்கள், பெண் சமத்துவ இயக்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், சுற்றுச்சூழல் இயக்கங்கள், வியாபாரி – தொழிலாளி சங்கங்கள் போன்றவைகளெல்லாம் பொதுமக்களின் கருத்து உருவாக்கத்தில் அவர்களுடையதான பங்கை வகிக்கின்றன.

## 7. கருத்துக் கணிப்பு (Opinion Poll)




ஒரு பள்ளியில் மாணவர்களுக்கு இடையில் நடத்திய கருத்துக்கணிப்பும் அதன் முடிவுகளும் படத்தில் தரப்பட்டுள்ளன.

கருத்துக்கணிப்பு என்பது பல்வேறு சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்களில் பொது மனப்பான்மையையும் கருத்தையும் குறித்துத் தகவல் சேகரிப்பதற்கான மிகவும் பயனுள்ள வழிமுறையாகும். இந்த முறையில் மக்கள்தொகையின் ஒரு மாதிரியைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் இந்த விஷயம் தொடர்பான கருத்துகள் கேட்கப்படுகின்றன. இந்தக் கருத்துகளின் அடிப்படையில் பொதுமக்களின் கருத்து உருவாக்கப்படுகிறது. கருத்துக் கணிப்புகளை நடத்த இன்று பல்வேறு தொழில் முகமைகள் செயல்பட்டு வருகின்றன.

## 8. கலை மற்றும் இலக்கியம் (Art and Literature)



“தாகிக் கின்றது தாயே, கருணையால்
மோக னக்குளிர் நீர்மொண்(டு) அருள்வையோ?
அன்பே கொஞ்சம் அருந்திட” என்றதும்-
மின்போல் மாது வியந்திது சொல்லுவாள்:
“என்ன விந்தைக் கதையிது பாவமே, !
இன்ன லில்ஜயா சாதி மறந்தீரோ?
தாழ்ந்த சாதியென் கையினால் நீர்வாங்கி
ஆழ்ந்(து)அ ருந்துவ ரோஉயர் ஆரியர்?

* * * * * *

ஓதி னான்பிக்கு வும்துக்கத் தோடிது:
“சாதி கேட்கவும் இல்லைநான் சோதரி!
சீத நீர் கேட்டேன் நாக்கு வறண்டதால்!
பீதி வேண்டாம்! தருக எனக்கு நீர்”

(மகாகவி குமாரனாசானின் 'சண்டாளப் பிக்குணி' என்ற காவியக் கதையின் வரிகளாகும் இவை. சாலையோர கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் தனது தாகத்தைத் தணிக்க, புத்த துறவியான ஆனந்த் தண்ணீர் கேட்கும் காட்சி இது. ஆனால் அந்தப் பெண் தான் தாழ்ந்த ஜாதியைச் சேரந்தவள் என்றும், தண்ணீர் கேட்பது பாவம் என்றும் அவரிடம் கூறுகிறாள். நான் சகோதரியிடம் ஜாதியைக் கேட்கவில்லை. தண்ணீர் கேட்டேன் அதைக் கொடுக்க வேண்டும் என்ற ஆனந்தின் பிடிவாதத்திற்கு அடிபணிந்த அந்தப் பெண் தாகத்தைத் தணிக்க தண்ணீர் கொடுத்தாள். அப்போதைய கொடூரமான ஜாதி அமைப்பின் சூழலில் "ஜாதி ஒரு பொருட்டல்ல" என்ற சொற்றொடரும் கீழ் ஜாதிப் பெண்ணைச் சகோதரி என்று அழைத்ததும் சமூகத்தில் புரட்சிகரமான செயல்களாக இருந்தன. ஜாதி அமைப்பில் காணப்பட்ட தீண்டாமை போன்ற தீய வழக்கங்களுக்கு எதிராகப் பொதுமக்கள் கருத்து உருவாக்குவதில் வலுவான தாக்கம் செலுத்திய படைப்பே சண்டாளப் பிக்குணி.)

ஒவ்வொரு காலத்திலும் உள்ள கலை, இலக்கியம், திரைப்படம் போன்றவை அந்தந்தக் காலத்தினுடைய பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தில் மிக அதிக தாக்கம் செலுத்துவதுண்டு. 'பாட்ட பாக்கி', 'அடுக்களையில் நின்னு அரங்கத்தேய்க்கு' போன்ற இலக்கியப் படைப்புகள் ஒரு காலகட்டத்தில் கேரளத்தின் சமூக வாழ்க்கை முறையைத் தலைகீழாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தன. இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமளித்த ரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார், வள்ளத்தோள் நாராயண மேனோன் போன்றோரின் இலக்கியப் படைப்புகள் பொதுமக்கள் கருத்து உருவாக்கச் செயல்பாட்டில் முக்கிய பங்கு வகித்துள்ளன.

சமூகத்தில் காணப்பட்ட மூடப்பழக்கவழக்கங்களுக்கு எதிராக வலிமையான பொதுமக்கள் கருத்தை உருவாக்கி வளர்த்து அதன் வழியாகச் சமூகப் புரட்சிக்கு வித்திடவும் ஒட்டம் துள்ளல், சாக்கியார் கூத்து போன்ற கலை வடிவங்களுக்கு முடிந்தன. பல்வேறு கலை வடிவங்களும் இலக்கிய படைப்புகளுமெல்லாம் உங்கள் ரசனைகளிலும் விருப்பங்களிலும் தாக்கம் செலுத்தும் அல்லவா?

உங்களின் கருத்து உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய ஏதாவது கலையையோ இலக்கியப் படைப்பைப் பற்றியோ நண்பர்களுடன் கலந்துரையாடல் நடத்தி குறிப்பு தயார் செய்யவும்.

## பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகள்

பொதுமக்கள் கருத்து வலிமையாக இருக்கும் இடத்தில் மக்களாட்சி வலிமையாக இருக்கும். மக்களாட்சியின் வரம்புகளை வலிமையான பொது மக்களின் கருத்து மூலம் திருத்தவும் சரியான திசையில் முன்னோக்கிச் செலுத்தவும் முடியும். ஆனால் சமூகத்தில் பொதுமக்கள் கருத்தை உருவாக்க இடையூறாகக் காணப்படும் சில காரணிகள் உள்ளன. அவை எவையெல்லாம் என ஆராய்வோம்.

**கல்வியறிவின்மை :** கல்வியறிவு இல்லாத மக்களுக்குப் பொதுப் பிரச்சினைகள் பற்றிக் குறைவான அறிவே காணப்படும். அவர்களுக்கு அறிவுப் பூர்வமான கருத்துகளை உருவாக்கத் தேவையான திறன் காணப்படுவதில்லை.

**டிஜிட்டல் பிளவு:** இணையம், கணினி, திறன் பேசி (smart phone) போன்ற நவீன தொழில்நுட்பங்களைக் கையாளுவதில் காணப்படும் இடைவெளியே டிஜிட்டல் பிளவு (Digital Divide) எனப்படும். இது பயனுள்ள பொதுமக்கள் கருத்து உருவாக்கத்திற்கும் தடையை உருவாக்குகிறது.

**வறுமை :** வறுமையில் வாடும் பிரிவினர் பெரும்பாலும் பொது விவகாரங்களில் இருந்து தனிமைப்பட்டு நிற்பர். எனவே, பொது விவகாரங்களைப் பற்றிய கருத்துகளை உருவாக்குவதில் இவர்களுக்குத் தேவையான முறையில் ஈடுபட முடிவதில்லை.

**ஆரோக்கியமற்ற அரசியல் செயல்பாடுகளும் அரசியல் கட்சிகளின் மக்களாட்சி பண்புகள் இல்லா நிலையும்:** அரசியல் செயல்பாடுகளில் பாரபட்சமும் மக்களுக்கு இடையே ஒருதலைப் பட்சமான செயல்பாடுகளும் பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளாகும்.

**தேர்தல் பிரச்சாரத்தில் தவறான போக்குகள் :** தேர்தல் நேரங்களில் வாக்காளர்களைக் கவர்வதற்காக நடக்கின்ற தவறான போக்குகள் உண்மையான பொது மக்கள் கருத்து பிரிதிபலிப்பதற்குத் தடை செய்யும்.

இவைத் தவிர ஊழலும், வட்டார வாதமும் பிற சமூக – பொருளாதார – கலாச்சார ரீதியான விருப்பங்களும் மனித வழிபாடுகளுமெல்லாம் உண்மையான பொதுமக்கள் கருத்துக்குத் தீங்கு விளைவிக்கும் காரணிகள் ஆகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்க வரைபடத்தைப் முழுமையாக்கி வகுப்பில் விவாதிக்கவும். பொதுமக்கள் கருத்து உருவாக்கத்திற்கு இடையூறாக இருக்கும் கூடுதல் காரணிகளைக் கண்டுபிடிக்கவும்.




மக்களாட்சி என்பது ஒருநாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமமான பங்களிப்பை உறுதி செய்யும் அரசியல் அமைப்பாகும். மக்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் ஓர் அமைப்பு என்ற நிலையில் மக்களாட்சி அரசுகள் அவற்றின் கொள்கைகளையும் செயல்பாடுகளையும் உருவாக்குவதற்கு

மக்களின் கருத்துகள் மற்றும் விருப்பங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. மேலும் மக்களாட்சி முறையில் நடைபெறும் தேர்தல்களில் முக்கியமாகத் தாக்கம் செலுத்துவதும் பொதுமக்களின் கருத்துகளே ஆகும்.

மக்களாட்சி முறையில் குடிமக்கள் சமூகம் ஆட்சியாளர்களைத் தொடர்ச்சியான விமர்சனங்கள் வழியாகப் பொறுப்புள்ளவர்களாக்க முடியும். அதிகார நடைமுறைகளைக் கேள்வி கேட்கவும் சட்ட விதிகளை ஒழுங்குபடுத்தவும் பொதுமக்கள் கருத்தைக் கொண்டு செய்ய முடியும். அப்படிப்பட்ட சமூகத்தில் குடிமக்களின் உரிமைகள் மற்றும் கடமைகளைப் பற்றி மக்கள் விழிப்புணர்வுடன் காணப்படுவர். பொதுமக்களின் கருத்து வலுவான சமூகத்தில் சர்வாதிகாரமும் ஏகாதிபத்தியமும் தடுக்கப்படும். குடிமக்களின் உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்படும். பொதுமக்களின் கருத்துகள் வலுவடையும் சமூகத்தில் ஒவ்வொரு செயலும் விமர்சனத்திற்கு உட்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு அரசியல் கட்சிகளைப் பொறுப்புள்ளவர்களாக மாற்றுகின்றன. மக்களின் ஒருங்கிணைந்த கருத்து என்ற அடிப்படையில் பொதுமக்களின் கருத்துகள் மக்களாட்சி முறையில் முக்கிய பங்கு வகுக்கின்றன.

'மக்களாட்சி செயல்பாடுகளை வலிமைப்படுத்துவதில் பொதுமக்களின் கருத்து உருவாக்கத்தின் பங்கு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தயார் செய்யவும்.

## தொடர் செயல்பாடுகள்

- பொதுத் தேர்தல்களில் பொதுமக்கள் கருத்து உருவாக்கத்தைத் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை என ஆய்வு செய்து வகுப்பில் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்யவும்.
    - ➢ வட்டாரப் பிரச்சினைகள்
    - ➢ வளர்ச்சி
    - ➢
    - ➢
- போதைப் பழக்கம், சைபர் குற்றங்கள் முதலான ஏதாவது சமூகத் தீமைகளுக்கு எதிராகப் பொதுமக்கள் கருத்து உருவாக்கத்திற்கு உதவி புரியும் ஒரு குறுநாடகம் தயார் செய்து வகுப்பில் அரங்கேற்றவும்.
- பி.டி. பட்டதிரிப் பாட்டின் "அடுக்களையில் நின்னு அரங்கத்தேய்க்கு" என்னும் நாடகம் கேரளத்தின் மறுமலர்ச்சிக்கு மிகப்பெரிய நன்கொடை வழங்கி உள்ளது. நாடகத்தை வாசித்து இக்கூற்றை ஆய்வு செய்க.
- சமூக அறிவியல் ஆய்வகத்தில் சத்திய ஜித்ரேயின் 'பதேர் பாஞ்சாலி' என்ற திரைப்படத்தைக் காட்சிப்படுத்தி அதன் கதை அமைப்பை ஆய்வு செய்து பள்ளி இதழுக்கான ஒரு ரசனைக்குறிப்பு தயார் செய்யவும்.

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ **பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***